தேனருவி வெளியீடு—8

# தமிழர் வாழ்வு

கா. கோவிந்தன் எம். ஏ.

தேனருவிப் பதிப்பகம்,
தியாகராயநகரம் : : சென்னை — 17.

உரிமை: பதிப்பகத்தாருக்கு.

முதற்பதிப்பு: அக்டோபர், 1956

விலை ரூ. 2-8-0

நவபாரத் பிரஸ் சென்னை—2.

# பதிப்புரை

தமிழர் வாழ்வு காலப்போக்கில் படிப்படியாக உயர்ந்தது; சிறந்தது; அதனைப்பற்றிய நூல் இதுவாகும். இதனை நன்ருக ஆராய்ந்து நன்முறையில் இதன் ஆசிரியர் அமைத்துள்ளனர். அவர்கட்கு எம் நன்றி. தமிழ் உலகம் இதனை மகிழ்வுடன் ஏற்றுப் பயன் எய்தவேண்டும் என்பது எங்கள் ஆசை.

**பதிப்பகத்தார்.**

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழர் வாழ்வு | ... | 1 |
| 2. | தமிழ் நாடு | ... | 34 |
| 3. | பேரூர்ப் பண்பு | ... | 56 |
| 4. | மதுரை | ... | 120 |
| 5. | உறையூர் | ... | 138 |
| 6. | வஞ்சி | ... | 150 |
| 7. | புகார் | ... | 163 |

# 1. தமிழர் வாழ்வு

**த**மிழகத்தைச் சேர சோழ பாண்டிய மண்டலங்கள் எனும் முப்பெரும் பிரிவுகளாகவும், ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகவும், வளநாடு ஒவ்வொன்றையும் பல நாடுகளாகவும், நாடு ஒவ்வொன்றையும் பல கூற்றங்களாகவும், கூற்றம் ஒவ்வொன்றையும், தனி ஊர்களாகவும், பிரித்து வகை செய்து,* கோட்டையும், கோயிலும், மாளிகையும், மண்குடிசையும் கட்டி, நாடாண்ட நல்வாழ்வைப் பழந் தமிழ் மக்கள், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெற்றுப் பெருமையுற்றிருந்தனர். அவ் வளமார் வாழ்வை, அவர்கள், தாம் தோன்றிய அந்தக் காலத்திலேயே பெற்றுவிடவில்லை. இயற்கை நிலைகளைத் தங்கள்

* "சோழமண்டலத்து உய்யக்கொண்டார் வளநாட்டு, வெண்ணாட்டு அமண்குடி" (S. I. I. Vol., II, No. 31); "சோழ மண்டலத்து வடகரை இராசேந்திரசிஙக வளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாறு" (S. I. I., Vol. V, No. 521); "இராஜ ராஜ மண்டலத்துத் திருககானப் பேர்க்கூற்றததுப பாளூர் (S. I. I. Vol., II, No. 36.).

தேவைக்கு ஏற்றவாறு திருத்தி அமைத்துக்கொள்ளும் அறிவினை, அவர்கள் ஆதிநாளிலேயே பெற்றுவிட்டாரும் அல்லர். உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த பல் வேறு இனத்தைச் சேர்ந்த ஆதிகால மக்களைப்போலவே, தமிழினத்தின் ஆதிகால மக்களும், தாம் பிறந்த இடத்தை, தம் வாழ்க்கைப் பயணம் தொடங்கிய இடத்தை, தம் விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ள மாட்டாது, அவ்விடத்தோடு இரண்டறக் கலந்து, அவ்விடத்தின் இயல்புகளுக்கு ஏற்றவாறு, தம் விருப்பு வெறுப்புக்களை வகுத்துக்கொண்டு வாழும் வாழ்வினராகவே விளங்கினர்.

மக்களின் வாழ்க்கைவகைகள், அவர்கள் உடல் அமைப்பு, உடைவகை, உணவு முறை, உறையும் இடம் ஆகிய அனைத்தும், அம்மக்கள் வாழும் நிலவேறு பாட்டிற்கேற்ப, வேறுபட்டே தோன்றும். உலகின் வட கோடி நாடாகிய சைபீரியா நாடு, பனி நிறைந்து, குளிர் மிகுந்து கிடக்கும். ஆங்கு மரம், செடி, கொடிகள் வளர் தற்கு வேண்டும் வெப்பம் இல்லை. அதனால், அந்நாட்டுப் பழங்குடி மக்களாய எஸ்கிமோக்கள், மாமிச உணவு அல்லது மரவுணவினை அறிந்திலர்; மயிராலும், மாவின் தோலாலும் ஆய ஆடையல்லது, வேறு மெல்லிய ஆடைகளை அணிவதிலர்; வெப்பம் குறைந்த இட மாதலின், உண்ணும் ஊனையும் வேகவைத்து உண்ணும் உணர்வினைப் பெற்றிலர். ஆப்பிரிக்கப் பெருநிலப்பரப் பின் இடைநாடு போன்ற, நிலவரையின் இடைநிலப் பகுதிகள், கொடிய வெப்பம் சூழ்ந்த பரு மரக்காடு களால் மூடப்பட்டிருப்பன; ஆங்கு வாழ்ந்த பழங்குடி மக்கட்கு, காய்கனிகளும், காட்டு மாவினத்து இறைச்சி

யுமே உணவுப் பொருள்களாம். இவையன்றி வேறு உணவுப் பொருள்களே இல்லை எனும் உணர்வுடைய ராய் வாழ்ந்தனர். குளிர் என்பது யாது என்பதை அவர் அறியார். தாங்கமுடியாத வெப்பம மிகுந்தது அந்நிலப் பகுதி. அதனால், அவர்கள், தங்கள் உடலை ஆடைகளால் மூட விரும்பவில்லை. 'மானத்தைக் காக்க மரத்தழைகளும், மரப்பட்டைகளுமே போதும்' என எண்ணி அணிந்து அமைதியுற்றிருந்தனர். நிலவரையின் இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்ட பகுதிகள், வெப்ப தட்ப நிலைகளை மாறி மாறிப் பெறுவதால், அப்பகுதிகள் பல்வேறுவகைப்பட்ட பயிரினங்களும், விலங்கினங் களும் வாழ்தறகேற்ற வளம் வாய்ந்து விளங்குகின்றன. அதனால் ஆண்டு வாழ்ந்த பழங்குடிகள், அறுசுவை நுகரவும், வகை வகையான ஆடைகளை அணியவும் அறிந்திருந்தனர்.

தேவைக்கு ஏற்ப வாழ்வை மாற்றிக்கொள்ளும் வழிவகைகள் பல பெற்றிருக்கும் இக்காலத்திலும், மக்கள, வாழிடங்களைத் தம் தேவைக்கு ஏற்ப முழுதும் மாற்றிக்கொள்ள மாட்டாது, தம் வாழ்வின் தேவைகளை ஒரு சிறிது, தாம் வாழும் இடங்களுக்கு ஏற்ப மாற்றி அமைத்து வாழ்வதையே காண்கிறோம். எடுத்துக் காட்டிற்கு ஒன்று காண்போம்: நம் நாட்டில், அரிசியும் கோதுமையும் எங்கே விளையினும், எப்பகுதிக்கு வேண்டுமாயினும் எளிதில் சென்று சேரும். அவற்றுள் எதை வேண்டுமாயினும், எவர் வேண்டுவராயினும், பெறுதல் எளிது. ஆனால், அரிசி உணவினைப் பெரும் பாலும் தென்னாட்டார் மட்டுமே உண்கின்றனர்; வட நாட்டார் அதை விரும்புவதில்லை. ஆங்கு, அரிசி உணவு

வழக்கில் இடம் பெறவில்லை. அதைப்போலவே கோதுமை உணவினை வடநாட்டார் மட்டுமே விரும்பி உண்கின்றனர். வடநாட்டுக் கோதுமை உணவு தென்னாட்டில் இடம்பெறவில்லை. காரணம்: தென்னாடு நெல் விளையும் பூமி; வடநாடு கோதுமை விளையும் பூமி. அந்த அந்த நாட்டில் வாழும் மக்கள், அந்த அந்த இடத்தில் உண்டாம் உணவையே உண்ண விரும்புகின்றனர். அரிசி உண்பார்க்குக் கோதுமை கிடைக்காது போகாது. கோதுமை யுணவு இருப்பதை அவர்கள் அறியாதவரும அல்லர்; அதைப்போலவே. கோதுமை உண்பார்க்கு அரிசி கிடைக்காது போகாது; அரிசியை அவர்கள் அறியாதவரும் அல்லர். எவர் எதை வேண்டினும், எவ்வளவு வேண்டினும், எப்பொழுது வேண்டினும் பெறலாம். என்றாலும், அவர்கள், தங்கள் தங்கள் நாட்டில் விளையும் உணவுப் பொருள்களுக்கு ஏற்பவே, தங்கள் தங்கள் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொண்டுள்ளனர்.

உலகில், உணவுப் பொருள்களுள் எண்ணற்ற வகைகள் உள. அவை அனைத்தும் இனியவே என்பதை அறிந்து, வேண்டிய பொருளை, வேண்டுமளவு, வேண்டியகால எல்லைக்குள் எளிதில் பெற்றுக் கொள்ளற்காம் வழிவகைகளை வகுத்துக்கொண்டுள்ள இக்காலத்திலேயே, மக்கள், தங்கள் தங்கள் இடத்திற் கேற்ற இயல்புடையராய் வாழ்கின்றனர் என்றால், ‘உலகில் இருப்பது தம் ஊரும், தம் ஊரைச் சூழ உள்ள ஒருசில இடங்களுமே; இவை தவிர வேறு உலகமோ, வேறு மக்கள் இனமோ இல்லை,’ எனக் கருதும் அறிவினராய்த் தம் ஊரைக் கடந்து அப்பாற்

செல்லற்காம் வழி வகைகளைக் காணமாட்டாராய்க் கிடைத்ததைப் பெறுவதல்லது, விரும்பியதைப் பெற மாட்டாது வாழந்த ஆதிமக்கள், அந்தந்த நிலத்திற்கேற்ற வாழ்வே உடையராய் வாழ்ந்தமையில் வியப்பில்லை அன்றோ?

உலக நாடுகள் அனைத்தும் ஒத்த இயல்புடையவாய் அமையவில்லை. பனிபடர்ந்து பயனற்றுக் கிடக்கின்றன பல நாடுகள். மணல் பரந்த பாலையாகக் காட்சி அளிக்கின்றன சில நாடுகள். கடல் வளம் கொழிக்கும் நாடுகள் கணக்கற்றனவாம். காட்டுச் செல்வத்தால் கவின்பெற்று விளங்கும் நாடுகளும் உள. வளமிக்க மலைநாடுகளாய் மாண்புறுவன பலப்பல. ஆற்று நீர் பாயும் அழகிய பள்ளத்தாக்கு நாடுகள் அளவிறந்தன. உலகில், வேறுபட்ட இந்நிலைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பெற்று வாழும நாடுகளுக்கிடையிடையே, வேறுபட்ட அந்நிலைகள் அனைத்தையும், தம்மகத்தே ஒருங்கே கொண்ட நாடுகளும் வாழ்கின்றன. அத்தகைய நாடுகளுள், நம் தமிழகமும் ஒன்று. தமிழகம், காட்டையும், கடலையும், மலையையும், மாபெரும் ஆறுகளையும் கொண்டு, நால்வேறு வளமும் நனிசிறக்கப் பெற்ற ஒரு நல்ல நாடாகும். பனி நிலமும், மணல் வெளியும் போலும் பயனற்ற பாழ்நிலங்களைப் பைந்தமிழ் நாடு பெற்றிருக்கவில்லை.

உலகில் நடைபெறும் ஒவ்வொரு தொழிலும், வயிற்றை வளர்க்கும் உணவைத் தேடவே அமைகிறது. நாடாளும் நல்லோர் மேற்கொள்ளும் நானிலக்காவலும், காட்டில் வேட்டைமேற் சென்று கண்ணுறங்காது விலங்குகளின் வரவு நோக்கி விழித்திருப்பான்

முயற்சியும், உடலை ஓம்பும் ஒருநாழி அரிசிக்கே ஆகும்*. பண்டைக் காலத்தில், மக்கள், காட்டில் கிடைத்த காய் கனி கிழங்கு வகைகளைத் தின்றும், காட்டாற்று நீர் குடித்தும் பசி ஒழிந்து வாழ்ந்தனர். பசி தணிந்ததும், தம்மை மறந்து, உலகை மறந்து உறங்கினர். தமக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், தம் முயற்சி ஒரு சிறிதும் வேண்டா வகையில் எங்கும் எப்பொழுதும் கிடைத்தமையால், நாளைக்குவேண்டும் எனச் சேர்த்து வைக்கும் இன்றியமையா நிலைமை அவர்க்கு உண்டாக வில்லை. தமக்கு வேண்டும் உணவை, எவ்வித முயற்சியும் இல்லாமல் எளிதில் பெற்று, பசி ஒழிந்து வாழ்ந்த பண்டைக் காலத்தில், அவர் உணவும் இடத் திற்கு ஏற்றதாகவே அமைந்திருந்தது. மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்த மக்கள், ஆங்குக் கிடைத்த காய், கனி, கிழங்குகளையும், காட்டு உயிரினங்களின் இறைச் சியையும் தின்று உயிர் வாழ்ந்தனர். கடலைச் சார்ந்த நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள், கடலிற் கிடைக்கும் மீன் வகைகளைத் தின்று வாழ்நாள் வளர்த்தனர்.

மக்கள் தொகை என்றும் ஒரே நிலையில் இல்லை. நாள் ஆக ஆக, அது பெருகிற்று. ஆனல், அதற்கேற்ற வளர்ச்சி, உணவு வகையில் உண்டாகவில்லை. அதனல், மக்களுக்கு, உணவு, வேண்டும் அளவு, வேண்டும் காலத்தில் கிடைப்பது அரிதாயிற்று.

* ‘‘தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும,
நடுநாள் யாமத்தும பகலும் துஞசான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி.’’ —புறநானூறு: 189.

அதனால், அம்மக்கள், தமக்குத் தேவையான உணவை வேறு வகையில் தேட முனைந்தனர். இந்நிலையில்தான், மக்கள், தாம் வாழும் இடத்தைவிட்டு, உணவு கிடைக்கும் வேறு இடம் தேடிச் செல்ல முற்பட்டனர்.

காய், கனி, கிழங்கு வகைகளைத் தொடர்ந்து தின்று கொண்டே வந்தமையாலும், மக்கள் தொகை நாள் தோறும் பெருகிக்கொண்டே வந்தமையாலும், மக்கள் வளர்ச்சிக்கு ஏற்ப, காய் கனி கிழங்கு வகைகளில் வளர்ச்சி இல்லாமையோடு குறைந்து விட்டமையாலும், மக்கள், தம் உணவிற்காகக் காய், கனி, கிழங்கு வகைகளை மட்டுமே எதிர்பார்ப்பதை விடுத்து, வேறு வகைகளைக் காண முற்பட்டனர். காய், கனி, கிழங்குகளை அடுத்து, முயற்சி பெரிதும் இல்லாமல் கிடைத்த உணவு அக்காட்டில் அவரோடு வாழ்வனவும், அவர்க்கு அவ்வப்போது கேடு விளைத்து வந்தனவுமாய வனவிலங்குகளின் இறைச்சியேயாம். அதனால், மக்கள், தமக்குக் கிடைத்த காய், கனி, கிழங்குகளோடு, விலங்குகளின் இறைச்சியையும் தின்னத் தலைப்பட்டனர். இந்நிலையில், பல நூறு ஆண்டுகள் கழிந்தன.

மக்கள் தொகை, மேலும் பெருகிற்று; ஆனால், அவர்க்கு உணவாகிப் பயன்பட்டு வந்தனவற்றுள், காய், கனி, கிழங்கு வகைகள் அறவே இல்லாமற் போயின. மேலும், தம்மைச் சுற்றி வாழ்ந்த உயிரினங்களை, நாள் தோறும் கொன்றுகொண்டே வந்தமையால், அவற்றின எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. அதனால், உணவுக் குறைபாடு உண்டாயிற்று; அக்குறைபாடு அவரை முயற்சி யுடையராக்கிற்று; தாம் தின்றுகழித்த காய் கனிகளின் விதைகள் வேரூன்றித் தாமே வளர்வதைப்

பல ஆண்டுகளாகப் பார்த்து வந்த மக்கள், முயன்று அவற்றை வளர்க்கத் தொடங்கினர் ; இதுவே, மனிதன் முயற்சிக்கு முதற்படி ; உழவுத் தொழில் உருப்பெற்றதும் இந்நிலையிலேயே.

பண்டைய மக்கள், தம்மைச் சூழ்ந்துகிடந்த நிலத்தையும், அந்நிலத்தில் இயல்பாய் முளைத்து வளர்ந்திருந்த மரம் செடி கொடிகளின் இயல்பையும் கண்டனர். நிலம் ஒரே சமனுக இல்லாமல், மேடும் பள்ளமுமாகவும், ஒரே தன்மையாய் இல்லாமல், கல்நிறைந்த மலைப் பகுதியாகவும், மணல்பரந்த பாலைவனமாகவும், மண்வளம் மிக்க மருதநிலமாகவும், நீர் நிறைந்து வளம் மிகுந்த பள்ளத்தாக்காகவும், நீர் வறண்ட மேட்டு நிலமாகவும் வேறுபட்டுக் கிடப்பதையும், அந் நிலங்களின்மீது வளர்ந்திருக்கும் மரம், செடி கொடிகள், அந்நிலங்களின் வன்மை மென்மைக்கு ஏற்பவும், மேடு பள்ளங்களுக் கேற்பவும், நீர்வளக் குறைவு நிறைவுகளுக் கேற்பவும், வளம் குறைந்தும், வளம் மிகுந்தும் விளங்குவதையும் கண்டனர் ; நிலவள இயல்பினைப் பல ஆண்டுகள் ஊன்றி நோக்கி வந்ததின் பயனுய், இன்ன நிலத்தில், இன்ன மரம் செடி கொடிகளே விளையும் என்பதை அறிந்துகொண்டனர். அறிந்த அவர்கள், அந்நிலத்தைப் பலவகையாகப் பிரித்து, அவ்வந் நிலத்திற்கேற்ற மரம் செடி கொடிகளைப் பயிராக்கிப் பயன்கொண்டு, அதற்கேற்ற வாழ்வமைத்து வாழ்ந்தனர். இவ்வாறு, மக்கள், தம் அறிவின் துணையால் அன்று கண்ட நிலப்பிரிவே, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பெயர்பெறும் ஐந்திணைப் பகுதிகள்.

தமிழகத்தில், மக்கள, முதன்முதல் வாழத் தொடங்கிய இடம் குறிஞ்சி. அடர்ந்த பெருமரக் காடுகள் மலிந்த பெருமலேகளும், அம மலேச்சாரலும் சேர்ந்த இடமே குறிஞ்சி. பண்டு அந்நிலத்தில் வாழ்ந்த பழந்தமிழ்க் குடிகள், ஆங்கு இயல்பாக விளேந்துகிடந்த காய்கனி, கிழங்குகளே உணவாக மேற்கொண்டனர்; அவை கிடைப்பது அரிதாய காலத்தில், அந்நிலத்தில் வாழ்ந்த விலங்குகளுள், தமக்குக் கேடுவிளேக்கும் கொடுவிலங்குகளேக் கொன்று, அவற்றின் இறைச்சியை உண்டு உயிர் வாழ்ந்தனர். அதனுல், அக்குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த தமிழரின் தலேயாய தொழில், வேட்டை ஆடுதலாய் அமைந்தது. அந்நிலத்தில், இயற்கையில் கிடைத்த கற்களேத் தமக்குத் துணேபுரியும் படைக்கலங்களாகக் கொண்டனர். பல்வேறு வகைப் பட்ட வடிவங்களாகக் காணப்பட்ட அவற்றிலிருந்து, காலம் செல்லச செல்ல, கோடரி, எறிவேல்போலும் படைக்கலங்களேப் படைத்துக்கொண்டனர். மேலும், அந்நிலத்தில் நிறைய வளர்ந்திருந்த மூங்கில்கள், தாழ்த்தி விடப்படுந் தோறும், விரைந்து நிமிர்ந்து, தாக்கிய பொருளே அழிக்கக் கண்ட அம்மக்கள். அம் மூங்கிலிலிருந்து வில்லேத் தோற்றுவித்தனர். கற்கால மக்களுடைய படைக்கலம், வில்லாகவும், அவர்கள் தொழில் வேட்டை ஆடுதலாகவும் இருத்தல், உல. கெங்கணும் காணலாகும் ஓர் ஒருமைப் பாடாகும். நிற்க; காயும், கனியும், கிழங்கும் அருகிய காலத்தில், விலங்கிறைச்சி தின்று வாழ்ந்த அந்நிலத்து மக்கள், அதுவும் அருகிய காலத்தில், காய், கனி வகைகளேப் பயிரிடத் தொடங்கினர். தொடங்கிய அவர்கள், தாம்

வாழும் நிலம், கல்லும், மலையும் கலந்த வன்னிலமாயும், அதில் பெய்யும் மழைநீர் அங்கேயே நில்லாமல் உருண்டோடி விடுவதால் நீர்வறண்டும் இருப்பதை உணர்ந்தனர். அதனால், கல்நிறைந்த நிலங்களிலும் விளையக் கூடியனவும், நீர் அதிகம் வேண்டாதனவும் ஆய தினைபோன்ற புன்செய்ப் பயிர்களை விளைத்துப் பயன் கொண்டு வாழ்ந்தனர்.

குறிஞ்சி நிலத்தில், மக்கள் தொகை மேலும் வளர்ந்தது. அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் குறைந்தது. உழுது உணவுப் பொருள்களை உண்டாக்குதற்கு உதவும் நிலத்தின் அளவும் அம் மக்களுக்குப் போதவில்லை. அதனால், அம் மக்களுள் ஒரு பிரிவினர், தாம் வாழும் குறிஞ்சி நிலத்தை விடுத்து, அக்குறிஞ்சி நிலத்தைச் சார்ந்திருந்த முல்லை நிலத்தில் சென்று தங்கினர். அம் முல்லை நிலம், குறிஞ்சிபோல் பெருமலையும், பருமரக்காடும் பொருந்தியதாக இல்லாமல், அங்கும் இங்குமாகச் சிறுசிறு மரங்களே நிற்கச், சிறிதே பண்பட்டு இருப்பதறிந்து, அக் குறுங் காடுகளை அழித்து, வரகு போன்ற பயிர்வகைகளை வளர்த்தனர். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த காலத்தில், விலங்கிறைச்சி தின்று பழகிய அவர்கள், முல்லை நிலத்தில் குடியேறுங்கால், தமக்கு ஊறு செய்யாதனவும், எளிதில் அடங்கக் கூடியனவுமாகிய ஆடு, மாடு, எருமை போன்ற உயிரினங்களையும் உடன்கொண்டு சென்று வளர்த்தனர். அதனால், அந்நிலத்தில் வாழத்தொடங்கிய மக்கள், வரகரிசியால் ஆன சோற்றோடு, சிறிதே ஆட்டிறைச்சி கலந்த உணவுண்டு வாழ்ந்தனர். அதனால், அவர்கள் தொழிலும், ஆடுமாடு மேய்த்தலும்,

பயிரிடலுமாய் அமைந்தது. முல்லை நில வாழ்வில், மக்கள் பலநூறு ஆண்டுகளைக் கழித்தனர்.

முல்லை நிலத்திலும் மக்கள் தொகை பெருகிற்று. அவர்கள் தொகைக்கேற்ற அளவு பயிரிடவேண்டிய நிலமோ, நிலத்தில் விளையும் உணவோ கிடைக்கவில்லை. அதனால், அம்முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்களுள் ஒரு சிலர் அந்நிலத்தை விடுத்து, வாழும் இடம்தேடி வெளி யேறினர். அவ்வாறு வெளியேறிய மக்கள், தம் முல்லை நிலத்திற்கு அணித்தாக இருந்த, நிலவளமும், நீர்வளமும் பொருந்திய பள்ளத்தாக்கில் சென்று தங்கினர். அந் நிலம், ஏனைய நிலங்களினும் வாழ்தற்கேற்ற வாய்ப்பினை நிறையக் கொண்டிருப்பது கண்டு, அந்நிலத்தை மருதம் எனப் பெயரிட்டு அழைத்தனர். அது, முற்றும் மலையாகவோ, மணலாகவோ இல்லாமல், வளமான மண்வாய்ந்து விளங்கினமையாலும, மண்ணில் விழுந்த மழைநீர், உருண்டோடியோ, மண்ணுக்கடியில் சுவறியோ போகாமல், பள்ளங்களில் தேங்கி நின்றதாலும், அந் நிலத்தில் வந்து தங்கிய மக்கள், நிலத்தை உழுது, நிறைய நீர் பாய்ச்சி, நெல், கரும்பு, வாழை போன்ற நன்செய்ப் பொருள்களைத் தோற்றுவித்தனா. நிலவளமும், நீர்வளமும் ஒருங்கே வாய்ந்திருந்தமையால், விதைத்த ஒன்று ஆயிரமாக விளைந்து, நிறைந்த பயன் தந்தது. அதனால், அந்நிலம் புகுந்த மக்கள், அங்கேயே நிலைத்த குடியினராயினர். நிற்க :

தங்கள் வாழ்விற்காக, குறிஞ்சி நிலத்தை விடுத்துப் பிற நிலங்களுக்குச் சென்ற மக்களில், ஒரு சிலர், மணல் நிறைந்த பாலை நிலத்திலும், மற்றும் சிலா, கடல் சார்ந்த நெய்தல் நிலத்திலும் சென்று தங்கினா.

பாலை நிலம், காடென்ருே, மலையென்ருே துணிந்து சொல்வதற்கியலா வகையில், இரண்டும் கலந்தும், இடையிடையே மணல் பரந்தும் இருந்ததால், அது வாழும் தகுதியற்றுக் கிடந்தது. அதனுல், ஆங்குச் சென்ற மக்கள், தங்களுக்கென நிலையான தொழில் எதையும் காணுமல், அப் பாலை நிலத்தை அடுத்து இருந்த, முல்லை நிலத்துட் புகுந்து, ஆங்கு வாழ்வார் பொருளைக் கொள்ளையடித்தும், அம் முல்லை, குறிஞ்சி, மருத நிலங்களிலிருந்து, வழிப்போவோராகி, பாலை நிலத்தில் வருவாரை ஆறலைத்தும் வயிறு வளர்க்கத் தொடங்கினர்.

நெய்தல் நிலத்திற்குச் சென்ற மக்கள், தாம் சென்ற இடம், கடலைச் சார்ந்துள்ள நிலமாகலின், ஆங்கு உண வளிக்கும் உயர்ந்த பயிர் எதுவும் வளராமை கண்டு சிறிதுகாலம் வருந்தினர். பின்னர்த் தம்முன் அலைவீசி ஆடும் கடல், வகைவகையான மீனினங்களின் வாழிட மாக விளங்குதல் கண்டு, அக் கடல் நீருட்புகுந்து, மீன்களைப் பிடித்துவந்து, தம் உயிர் ஓம்பினர். மேலும், அலை எழுங்கால், மேலெழுந்த கடல் நீர், கடலைச் சார்ந்த பள்ளங்களில் பாய்ந்து, தேங்கிப், பின்னர் ஞாயிற்றின் வெப்பத்தால் வற்றிப்போக, உப்பு உண்டாதல் கண்ட அம்மக்கள், உப்புவிளைக்கும் தொழிலையும் கற்றுக்கொண்டனர். மிகுதியாகக்கிடைத்த மீனையும் உப்பையும், பிற நிலங்களுக்குக் கொண்டு சென்று விற்று, அந்நிலப்பொருள்களாம், நெல் முதலாயின பெற்று வந்து, உண்டு உயிர் வாழ்ந்தனர். இவ்வகையால். நெய்தல் நிலத்தில் வந்து தங்கிய தமிழர், மீன் பிடித்தலையும், உப்பு விளைத்தலையும், அவற்றை

வேண்டுமிடங்கட்குக் கொண்டு சென்று விற்றலையும் தொழிலாகக் கொண்டனர். மக்களுக்கு, வாணிப அறிவு முதன் முதல் தோன்றியது இந் நெய்தல் நிலததிலேயே யாம் எனலாம்.

இவ்வாறு, மக்கள், தங்கள் உணவிற்காக, உலகின் பல பகுதிகளிலும் அலைந்து திரிந்து, அவ்வந்நிலத்தின் தன்மைகளை உணர்ந்து, அவ்வந் நிலத்திற்கேற்ற பயிர் வகைகளைக் கண்டு, அவற்றை விளைத்து, உண்டு, வாழ்ந்துவந்த வாழ்க்கைமுறை வகுப்பே, பழந்தமிழ்ப் பெரியார்கள் பாராட்டிய, ஐந்திணைப் பகுதிகளாம்.

குறிஞ்சி நிலத்தை யடுத்து முலலை நிலம்; முல்லையை யடுத்து மருதநிலம்; மருதத்தை அணைத்தாற் போல் நெய்தல் நிலம் என ஒன்றற்கொன்று அணித்தாகக் கிடப்பினும், ஒரு நிலத்திற்கும் மற்றொரு நிலத்திற்குமிடையே, ஒன்றையொன்று இணைக்கும் வழி ஏதும் அக்காலத்தில் உண்டாகவில்லை. அதனுல், அந்நிலங்களில் வாழ்ந்த மக்கள் அனைவரும, ஓரிடத்தே தோன்றிய ஓரின மக்களேயாகவும், அவ்வாறு தொடர் பற்றுக் கிடந்தமையால், தனித்தனி இனத்தைச் சேர்ந் தவர்போல், வேறுபட்டு விளங்கினர். இரு நிலங்களுக் கிடையே வழங்கற்கினிய வழி எதுவும் இல்லை என்பது மட்டுமன்று; அவ்விடை நிலங்கள், நினைப்பவர் நெஞ்சையுமு துன்புறுத்தும் கொடுமை வாய்ந்தும் விளங்கின. மலைநாட்டு மன்னன், செங்கண்மாத்து வேள், நன்னன்சேய் நன்னனுக்குரிய தலைநகருக்குப் போகும் வழி குறித்து, மலைபடுகடாம் அளிக்கும் அரிய காட்சி, அக்கால ‘வழியின் இயல்பு இஃது’ எனத் தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டும்.

நவிரம எனும் பெயர்பூண்ட மலையுச்சியில் உள்ள, செங்கண்மா எனும் சிறந்த நகரை அரசிருக்கையாகக் கொண்டு, தொண்டை நாட்டுப் பல்குன்றக் கோட்டத்தை ஆண்டிருந்த நன்னன்சேய் நன்னனைப் பாடிப் பரிசில்பெற்று மகிழ்ந்த புலவர், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், அவனைப் பாடிப் பரிசில்பெற விரும்பிய கூத்தர் தலைவனுக்கு, நல்ல வழிகாட்டியாய் நின்று, "நன்னன் தலைநகர்க்கு நண்ணும் வழியினைக் கூத்தர் தலைவ! யான் கூறுகிறேன்; கேள்" எனத் தொடங்கிக் கூறியது இது:

"செல்லும் வழியில், தங்கள் தினைப்புனங்களைக் காத்து நிற்கும் கானவர், அப்புனங்களை அழிக்கவரும் பன்றிகளை அச்சுறுத்தி ஓட்டுவான் வேண்டி, அப்பன்றிகள் வழங்கும இடம் அறிந்து, ஆங்காங்கே, அமைத்துவைத்த கற்பொறிகள் கணக்கில உள. ஒளி இழந்து இருள்சூழ்ந்த பொழுதில், அவை, கண்டார் உள்ளத்தைக் கலங்க வைக்குமாதலின், அவ்வழியை இரவிற் கடக்கக் கருதாது, விடியற்பொழுதில் கடந்து செல்வீராக. மரமும் கல்லும் மண்டிக் கிடப்பதால், மக்கள் வழக்கற்றுப்போன அவ்வழியில், இடையிடையே, மலைப்பாம்புகள் மறைந்து கிடக்கும் பெரும் பெரும் பள்ளங்கள் பல உள. ஆங்குச் செல்லுங்கால் கைகொட்டி ஒலி எழுப்பியும், பாம்புகளைக் காணின், கைகூப்பி வணங்கி ஒதுங்கியும். செல்லுங்கள். ஆங்காங்குள்ள தினைப்புனங்களை, உயர்ந்த பரண்மீது இருந்து காக்கும் கானவர் எறியும் கவண்கற்கள், களிறுகளை வெருட்டி,கருங்குரங்குகளை அச்சுறுத்தி விசை

கொண்டு வந்து பாயும். ஆதலின், ஆங்குச் செல்லுங் கால், மரங்களுக்கிடையே மறைந்து மறைந்து செல்வீராக. யானைகளையும் விழுங்கும் முதலைகளும், பெருக்கெடுத்துப் பாய்ந்துவரும் வெள்ளங்கள் பண்ணிய பெரும் பெரும் பள்ளங்களும் நிறைந்த காட்டாறுகள் குறுக்கிடும். கால்வழுக்கும் அக்காட்டாறு களைக் கடக்குங்கால், ஆங்குள்ள மரங்களில் படர்ந்து தொங்கும் கொடிகளைப் பற்றுக் கோடாகக்கொண்டு, கால் வழுக்கல் உறாமல், ஒருவரை யொருவர் காத்து, மெல்ல அடியிட்டுச் செல்வீராக. காட்டாற்றிற்கு அப்பால், வழுக்கி வீழ்ந்தவர், எழமாட்டா ஆழம் பொருந்திய நீர்நிலைகள் பல உள. பாசிபடிந்து வழி மறைத்துக் கிடக்கும் அந் நீர்நிலைகளைக் கடக்குங்கால், ஆங்கு வளர்ந்து நிற்கும் சிறு மூங்கில்களையும், வேழத் தண்டுகளையும் ஊன்றுகோல்களாகக் கொண்டு நடந்து கடப்பீராக*. வழியில் மயில்கள் ஆடும்; கழைக் கூத்தாடுவார் மக்கள்போல், மந்திகள், மூங்கிலில் பாய்ந்து ஆடும்; தேனடைகள் தொங்கும், கண்ணைப் பறிக்கும் அவ்வழகிய காட்சிகளை, அவ்வழிச் செல்கின்ற நீவிர், விரைந்து நோக்கின், நும் கால்கள் நடைதவறும்; நுமக்கும் ஊறு உண்டாம். ஆகவே, அக்காட்சிகளைக் காணும் ஆர்வம் அற்று அப்பாற் செல்லுங்கள்†. கொடுமை மலிந்த அம்மலைக் காட்டுவழியை இரவில் கடத்தல் இயலாது; கடப்பார்க்குக் கேடுபல உண்டாம். ஆதலின், இரவு வந்துறின், ஆங்கே கிடக்கும் மலைக்

---

* மலைபடு கடாம்: 193—224.

† ,, 234—241.

குகை ஒன்றில் புகுந்து அடங்குங்கள். நும் மனையில் வாழ்வதுபோல் மனக்கலக்கம் இன்றி ஆங்கு வாழலாம். இராக் காலத்தை மலைக்குகைகளில் கழித்து, விடியற காலத்தே எழுந்து செல்லும் நீவிர், வழியில், பெரிய களிறுகளையும் பற்றி விழுங்கவல்ல ஆற்றலும், காம்பற்று வீழ்ந்துகிடக்கும் பெரு மரககிளைகள் போலும் தோற்ற மும் வாய்ந்த மலைப்பாம்புகளும், முகர்ந்தார் உயிரை மாய்க்கவல்ல மணம்நிறை மலர்களும், நுகர்ந்தார் உயிரை மாய்க்கவல்ல கனிகளும் நிறைய உள. அவற்றின் இயல்பறிந்து, அவற்றின்பால் அணுகுவதும் செய்யாது அகன்று போவீராக.* அவ் விடங்களுக் கப்பால், மலைகளும், மரங்களும் செறிந்து, செடிகளும் கொடிகளும் வளர்ந்து, செல்வார்க்குச் செல்லும் வழி யறியாது மயங்குதற்கு ஏதுவாய மலையகத்திடங்கள் குறுக்கிடும். அவ்விடங்கள், அம்மலையில் வாழ்ந்து பழகிய குறவரையும் மருளப்பண்ணும் கொடுமை உடைய. அவ்விடஙகளைக் கடத்தல் உம்மால் ஆகாது. ஆகவே, ஆண்டுச் சென்றதும், நீவிர் வேறொன்றும் செய்யாது, உம்மோடு கொண்டு செல்லும் உம் இசைக் கருவிகளை எடுத்து, இசைத்து ஒலி எழுப்புவீராக. அம் மலைநாட்டைக் காத்து நிற்கும் கானவர் பலர், அம் மலை முடியில் குடிவாழ்கின்றனர். அவர்கள், நும் இசை யொலி கேட்ட அந்நிலையே, விரைந்து அவண் எய்தி, உமக்கு உண்டற்கினிய பழங்களும், காண்டற்கினிய மலர்களும் அளித்து, முதறகண் நும் தளர்ச்சி ஒழித்துப் பின்னர், நீவிர் போகவேண்டிய இடம் அறிந்து, ஆங்குச்

---

* மலைபடு கடாம் 254—267.

செல்லும் வழியினைக் காட்டி, நும்மோடு சிறிது தூரம் வந்து வழியனுப்பி மீள்வர்.[1] மலைநாடாதலின், இடை வழியில், நீருண்டமேகம் நெருங்க வந்து, பெருமழை பெய்தலும் உண்டு. அவ்வாறு மழை வந்துறுமாயின், நும் இசைக் கருவிகள் நனைந்து பாழுறு வண்ணம், ஆங்காங்கே கிடக்கும் கிணறுகள்போலும் பெரிய குகைகளில் புகுந்து, தங்கித் தங்கிச் செல்வீராக*. எங்கு நோக்கினும் குன்றுகளே நிறைந்து கடத்தற்கு அரிதாகிய அவ்வழி, தளர்ந்து நின்று நோக்குவார்க்குத் தளர்ச்சி மிகுதியால், அவர் கண்ணொளி கெடுத்துத் துயர் விளைக்கும் கொடுமையதாம். ஆதலின், அத்தளர்ச்சி போக, நும் இசைக் கருவிகளைக் காவிச்செல்லும் தண்டுகளை, ஊன்று கோலாகக்கொண்டு, ஊன்றி ஊன்றிக் கடப்பீராக. நண்பகற் காலத்தில், நடை வழியில் தலைதூக்கி நிற்கும் கூரிய கற்கள், அயில் காய்ச்சி ஊற்றிறுற்போலும் வெப்பம் உடையவாய், வருவார் கால்களை வருத்தும். ஆதலின், ஞாயிறு வெப்பம் தணிந்து மேற்கே தாழ்ந்த அந்திப்பொழுதில், அவ்விடங்களைக் கடந்து செல்லுங்கள். கொடிகள பல ஒன்றேடொன்று பின்னிக்கிடக்கும் குறுங்காட்டைக் கடந்து செல்லுங்கால், முன்னே செல்வார், தம் முகத்தில் அடிக்காவாறு வாங்கிவிட்ட வலிய கொடிகள், அவரால் கைவிடப் பெறின், விரைந்துவந்து, பின்வருவாரையும், அவர் தாங்கி வரும் இசைக் கருவிகளையும் தாக்கிப் பாழ் செய்யும். அவ்வாறு நிகழாவண்ணம், அக்கொடிகளை ஒருவர்பின் ஒருவராகப் பிடித்துவிட்டுச் செல்வீராக†.

* மலைபடுகடாம்: 275—286.

† „ 361—383.

அவ்வாறு செல்லும் நீங்கள், இடையிடையே எதிர்ப்படும் கவர்த்த வழிகளை, வழிவருவார் பலரையும் பலகால் உசாவி அறிந்துசெல்லும் அருமை அறிந்து, அவ்வழிகளைக் கடக்குங்கால், உம் பின் வருவாரும், உங்களைப் போலவே மயங்கி விழிக்காவாறு, செல்லும் வழி இது என அவர் தெளிய உணருமாறு, ஊகம் புற்களை ஆங்காங்கு முடிந்து அடையாளம் இட்டுச் செல்லுங்கள்.''[1]

ஒரு நிலத்திற்கும், அதற்கு அடுத்திருந்த நிலத்திற்கும் இடைப்பட்ட வழிகள் மட்டுமே, இவ்வாறு கொடுமை மலிந்து இருந்தன என்பதில்லை. ஒரு நிலத்திற்குட்பட்ட இரண்டு ஊர்களுக்கு இடைப்பட்ட வழிகளும் அவ்வாறே கடத்தற் கரியவாய்க் காணப்பட்டன. மலைநாட்டுப் பெண்ணொருத்தி, தன் ஊருக்கும், தன் காதலன் ஊருக்கும் இடையில் உள்ள வழியின் கொடுமை கூறி வருந்தியதாகப் பாடப்பெற்ற குறிஞ்சிப் பாட்டின் ஈற்றடிகள், குறிஞ்சி நிலத்து வழிக் கொடுமையினை வரைந்து காட்ட வல்லதாம்: "காதலன் வரும்வழி ஏதம் இல்லா நல்வழி அல்ல; அது, யாளியும், புலியும், காட்டெருதும், கருமயிர்க் கரடியும், கொல்களிறும், கொடும்பாம்பும் வாழும் பாழ் நிலம்; காலைக் கவ்வி உயிர்போக்கும் முதலையும், அதன் இனமும் அகலாது வாழும் நச்சுநீர் நிலைகள்; அருள் என்பதறியா ஆறலைகள்வர் வாழும் அன்பில் கொடுநிலம்; வைத்தார் காலை வழுக்கி வீழ்த்தும் வழுக்கு நிலம்; மக்கள் உயிர்க்குத் துன்பம் தருதலையே தொழிலாகக் கொண்ட அணங்கும் பேயும் அகலாது வாழும்

1. மலைபடுகடாம்: 392—393.

வன்னிலம்; இத்தகைய கொடுமை மிக்கதன்றோ காதலன் கடந்து வரவேண்டிய வழி!'' எனக் கூறி வருந்தும் அக்காதலியின் கண்ணீர் வெள்ளம், குறிஞ்சி நில வழிக்கொடுமையை விளக்கி நிற்றல் உணர்க.[2]

இவ்வாறு, ஒரு நிலத்தையும், மற்றொரு நிலத்தையும், ஒரு நிலத்தைச் சேர்ந்த ஓர் ஊரையும், அந்நிலத்து மற்றோர் ஊரையும் தொடர்பு படுத்தும் நல்வழிகள் நாட்டில் நிலவாமையால், அதற்கு மாறாக, அவ்விடைப் பட்ட இடங்கள் கொடுமைகள் மலிந்து விளங்கினமை யால், அம்மக்களிடையே பண்டு நிலவிய தொடர்பு, நாளடைவில், அற்றுப் போயிற்று. ஓரே இனத்தில் தோன்றிய அவர்கள், தனித்தனி இனத்தவராயினர்; ஐவகை நிலமும், ஐவகை ஒழுக்கமும் இடம் பெற்றன.

குறிஞ்சி நிலத்துமக்கள், குறவர், குன்றவர், கானவர், வேட்டுவர் எனப்பட்டனர்; அந்நிலத்து ஊர்கள், சிறுகுடி எனவும் குறிச்சி எனவும் அழைக்கப் பெற்றன; தேன் அழித்தலும், கிழங்கு அகழ்தலும், தினை விளைத்தலும், அவர் தொழிலாயின; ஐவன

2. ''அளைசெறி உழுவையும், ஆளியும, உளியமும்,
புழற்கோட்டு ஆமான் புகல்வியும், களிறும்,
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்து
உருமும, சூரும், இரைதேர் அரவமும்,
ஒடுங்கிரும் குட்டத்து அருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாள் முதலையும், இடங்கரும, கராமும்,
நூழிலும், இழுக்கும் ஊழடி முட்டமும்,
பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமம் அவர்'
சூழுமலை விடரகம் உடைய ......''

—குறிஞ்சிப் பாட்டு: 252—261.

நெல்லும் தினையும் உண்டு, அருவிநீரும் சுனைநீரும் குடித்து, காந்தளும் வேங்கையும் சூடி, முருகியமும், தொண்டகப் பறையும் முழக்கி, குறிஞ்சிப் பண்பாடி மகிழ்ந்தனர்.

முல்லைநிலத்து மக்கள், ஆயர், இடையர், கோவலர், பொதுவர் எனப்பட்டனர். அந்நிலத்து ஊர்கள், பாடி எனவும், பள்ளி எனவும், சேரி எனவும் அழைக்கப் பெற்றன. ஆடு மாடு மேய்த்தலும், வரகு முதலாயின விளைத்தலும் அவர் தொழிலாயின. வரகரிசிச் சோறும் பாலும் தயிரும் உண்டு; காலுற்றுநீர் குடித்து, முல்லை மலர்சூடி, ஏறுகோட் பறை ஒலித்து, முல்லைப் பண்பாடி மகிழ்ந்தனர்.

மருத நிலத்தார், உழவர், கடையர், களமர் என அழைக்கப் பெற்றனர். அந்நிலத்து ஊர்களே, ஊர் என அழைக்கப்பெற்றன. உழவு, அவர்கட்கு உரிய தொழிலாயிற்று. செந்நெல்லும், வெண்ணெல்லும் அளித்த அரிசிச் சோற்றினை, அறுசுவை கலந்து உண்டு, ஆற்று நீரும், குளத்து நீரும் குடித்து, தாமரை மலர்சூடி, முரசும், கிணையும் முழக்கி, மருதயாழ் இசைத்து மகிழ்ந்து வாழ்ந்தனர்.

நெய்தல் நிலத்தார், நுளையர், பரதவர் என வழங்கப் பெற்றனர்; அந்நிலத்து ஊர்கள் பட்டினம் எனவும், பாக்கம் எனவும் அழைக்கப் பெற்றன; மீன் பிடித்தலும், உப்பு விளைத்தலும், அவற்றை விற்றலும் அவர்கள் தொழிலாயின. உப்பும், மீனும் விற்று வாங்கிவந்த அரிசிச் சோறு உண்டு, மணற் கிணற்றுநீர் மாந்தி, நெய்தல் மலர்சூடி, மீன்கோட் பறை ஒலித்து, நெய்தற்பண் இசைத்து மகிழ்ந்தனர்.

பாலை நிலத்தார், எயினர் எனவும், மறவர் எனவும் வழங்கப் பெற்றனர். அந்நிலத்து ஊர்கள் பறந்தலை எனப்பட்டன. ஆறலைத்தல் அவர் தொழிலாயிற்று. அவ்வழி வந்த உணவுண்டு, அறுநீர்க் கிணற்றில் நீர் குடித்து, மராமலரும் குராமலரும கலந்து கட்டிய மாலை அணிந்து, நிரைகோட் பறை முழக்கி, பாலையாழ் இசைத்து மகிழ்ந்தனர்.

தலைவர்கள், குறிஞ்சி நிலத்தில் வெற்பன், சிலம்பன், பொருப்பன் என்ற பெயர்களாலும், முல்லை நிலத்தில் அண்ணல், தோன்றல், குறும்பொறை நாடன் என்ற பெயர்களாலும், மருதநிலத்தில் மகிழ்நன், ஊரன் என்ற பெயர்களாலும், நெய்தல் நிலத்தில் கொண்கன், துறைவன், சேர்ப்பன், மெல்லம்புலம்பன் என்ற பெயர்களாலும், பாலைநிலத்தில் மீளி, விடலை, காளை என்ற பெயர்களாலும் வழங்கப் பெற்றனர்.

காலம் செல்லச் செல்லத் தொடர்பற்றிருந்த தனிநில வாழ்வுமுறை வழக்கற்றுப் போகத் தொடங்கிற்று. ஒருநிலத்து மக்கள், ஏனைய நிலங்களுக்குச் சென்றுவரத் தொடங்கினர். சென்று வருவதோடு, சென்ற நிலத்தில் மலிந்து கிடப்பனவும், தம் நிலத்தில் கிடைத்தற்கு அரியனவுமாய பொருள்களை வாங்கி வரவும் தலைப்பட்டனர். அம் முறையால், தமிழ் மக்களிடையே வாணிக உணர்வு மெல்ல உருப்பெற்றது. நிற்க; ஒரு நிலத்துள் புகுந்து, அந்நிலத்துப் பொருள்களை வாங்கிச் செல்லும் பிற நிலமக்கள், அந் நிலத்தில் அப்பொருள் கிடைக்கும் பல இடங்களுக்கும் சென்று, அலைந்து திரிந்து வாங்கினர். அதனுல், காலக்கேடு, பொருட்கேடு, உடல்நலக்கேடு எனப்

பல கேடுகளுக்கு உள்ளாயினர். அவர் வாணிகம் விரைந்து வளர்ந்திலது. இவ்வாணிக முறையால் வளங்கொழிக்கும் அந்நிலத்து மக்கள், இதை உணர்ந்தனர். அதனால், அவர்கள், தம் நிலத்தில் ஆங்காங்குக் கிடைக்கும் பொருள்களை யெல்லாம், பிறநிலத்து மக்கள் வந்து வாங்கிச் செல்வதற்கு ஏற்ற வாய்ப்பு அமைந்த வசதியான இடங்களில், கொண்டுவந்து குவிக்கத் தலைப்பட்டனர். அதனால், அத்தகைய இடங்களில், அந்நிலத்து மக்களும், பிற நிலத்து மக்களும் பெரும் அளவில் கூட நேர்ந்தது. அவ்வாறு நேர்ந்த இடங்கள், நாளடைவில் பெரிய பெரிய நகரங்களாய் மாறிப் பெருமை உற்றன. இம் முறையால் நகரங்கள் பல ஆங்காங்கே இடம் பெற்றன.

இவ் வாணிக வளர்ச்சியால், வேறு ஒரு பயனும் விளைந்தது. மக்களும், அவர் பொருள்களை ஏற்றிச் செல்ல உதவும் ஊர்திகளும் வழங்குவதற்கேற்ற, சிறியவும் பெரியவுமாய வழிகள் பல, ஊர்களுக்கும், நிலங்களுக்கும் இடையே வகுக்கப்பட்டன.

பண்டு, தனித்தனிக் குடிகளாய்ப், பிறரோடு தொடர்பற்று வாழ்ந்த பழந்தமிழ் மக்கள், நாளடைவில், தம்மையும் தம் உடைமைகளையும் காக்கவல்ல காவலன் ஒருவன் தேவை என உணர்ந்து, தம்முள்ளே தக்கான் ஒருவனைத் தேர்ந்து தலைவனாக்கினர். இம் முறையால், ஒவ்வொரு நிலத்திலும் தலைவர்கள் பலர் தோன்றினர். பண்டு, தம் ஆட்சி, தம் ஊர் எல்லைக்குள்ளேயே அடங்கி யிருப்பதில் அமைவுற்றிருந்த அத்தலைவர்கள், காலம் செல்லச் செல்ல, தம் ஊரைச் சுற்றியுள்ள ஊர் களிலும், தம் நிலத்தை அடுத்து உள்ள நிலங்களிலும்,

தம் ஆட்சிசென்று பரவ வேண்டும் என விரும்பினர். அவ்விருப்பத்தின் விளைவால், நாற்படைகள் தோன்றின. படைகள் தோன்றவே, அவை, தாம் இருக்கும் இடத்தி லிருந்து, தாம் விரும்பும் இடங்களுக்கு விரைந்து செல்லத் துணைபுரியவல்ல நல்ல வழிகள் வேண்டும் என உணர்ந்தன. அதனுல், படை காரணமாகவும் வழிகள்பல வகுக்கப் பெற்றன.

ஆனுல், அவ்வாறு வகுக்கப்பட்ட வழிகள், தொடக்கத்தில், இடையூறில்லா இனிய வழிகளாய் அமையவில்லை. காடும், மலையும், காட்டாறும், மணல் வெளியுமாகவே அவை காட்சி தந்தன. காடுகள் அழிக்கப்படவில்லை; மலைகள் பிளக்கப்படவில்லை; காறுறுகளைக் கடக்கப் பாலங்கள் கட்டப்படவில்லை; மணல் அகற்றப்படவில்லை. காடுகளிடையே நுழைந் தும், மலைகள்மீது ஏறியும், காறுற்று வெள்ளத்தை நீந்தியும், மணல் வெளியை ஊடறுத்துமே செல்ல வேண்டியிருந்தது. அதனுல் அவ்வழிச் செல்லும் மக்களும், அவர் ஊர்திகளும், அவ்வழியில், எண்ணற்ற இடையூறுகளுக்கு உள்ளாகி, இன்னல் பல உற்றனர். நெய்தல் நிலத்து விளைபொருளாம் வெள்ளுப்பை, ஏனைய நிலங்களுக்குக் கொண்டுசென்று விற்கும் வணிகத்தொழில் மேற்கொண்ட உமணர் எனும் உப்பு வணிகர், உப்புப்பொதி ஏற்றிய தம் பண்டிகள், இடை வழியில், மேடுகளையும் பள்ளங்களையும் கடக்குங்கால், அச்சு முறிந்துபோகப் பாழாதலும் உண்டு என எதிர் நோக்கி, அவ்வாறு அவை பாழுறறவிடத்து உதவுமாறு வேறு அச்சு ஒன்றைச் சேமம் கருதி உடன்கொண்டு செல்வர் எனக் கூறும் புறநானூற்றுக் குறிப்பு, அக்கால

வழிகளின் அவலநிலையினை விளங்க எடுத்துக் காட்டுவது உணர்க:

"எருதே இளைய, நுகம உணரா வே;
சகடம பணடம் பெரிது பெய்தன்றே;
அவல் இழியினும், மிசை ஏறினும்
அமணது அறியுநர் யார் என, உமணர்
கீழ்மரத்து யாத்த சேம அச்சு."*

வழிகளின் வழங்கலாகா இந்நிலைமை நெடிதுநாள் நிற்கவில்லை. வாணிக வளர்ச்சி, மக்கள் வாழ்வில் இன்றியமையாத தாகிவிட்டது. அதன் வளர்ச்சியில், நானில மக்களும் நாட்டம் செலுத்தினர். வாணிக வாழ்வால், நாட்டில் வளம்பெருகவே, நாடாளும் அரசர்களின் கடமையும பெரிதாயிற்று. அவ்வாணிக வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டியது, அவர் இன்றியமையாக் கடமையாயிற்று. அதனுல், அவ்வாணிக வாழ்விற்கு உயிரளிப்பனவாய வழிகள் பலவற்றை, நாடெங்கும் அமைத்து, அவற்றை ஊறின்றிக் காப்பதில் ஊக்கம் காட்டினர். இவ்வாறு, வாணிக வளர்ச்சிக்குக் காரணமாய், வழிகள் ஒருபால் வளர்ந்துகொண்டிருக்கும்பொழுதே, அவை, பிறிதொரு காரணம் குறித்தும் பெருமளவில் வளர்ந்தன.

நாட்டில், வளமும் வாழ்வும் வளர வளர நாடாள் அரசர்க்கு நாடாளும் ஆசையும் வளர்ந்தது. உலக நாடுகள் அனைத்தையும், தம் ஒரு குடைக்கீழ் வைத்து ஆள ஆசைகொண்டனர். அதனுல், அவர் நாற்படை வளர்ந்தது. அவ்வாறு வளர்ந்த அவர்படை, அவ்வரசர் விரும்பும் இடங்களுக்கு விரைந்து செல்லவேண்டுவது

---

* புறநானூறு: 102.

இன்றியமையாத தாயிற்று. அதனல், அப்பெரும் படைகள் வழங்குதற்கு ஏற்ப, வழிகளைச் செப்பம் செய்யவேண்டியதாயிற்று. வடுகர் துணையோடு, தமிழகத்தின்மீது படையெடுத்து வந்த மோரியர் என்ற வடநாட்டு அரச இனத்தவர், தம் தேர்ப்படைகள் இனிது செல்வதற்கேற்ப, தமிழகத்து வடவெல்லைக் கண் உள்ள மலைகளை வெட்டிக் குறைத்து வழிவகுத்தனர் எனச் சங்கநூல்கள் பகரும் சான்று*, வழி அமைப்பில் அக்கால வேந்தர்கள் காட்டிய ஆர்வத்தை அறிவிப்பது அறிக. நிற்க :

வழிகளை அமைத்த வேந்தர்கள், அவ்வழிகள், வாணிகப் பொருள்களோடு, அவ்வழியில் வருவார் போவாராய வணிகர்க்கு விலங்குகளாலும், வழிப்பறிக் காரர்களாலும் நிகழும் இன்னல்அற்று இருத்தல் வேண்டும என்பதையும் உணர்ந்தனர். அதனல் அவ் வழிகளில், இடையூறு மிகுந்த இடங்களிலெல்லாம், பாசறை அமைத்துப் படைகளை நிறுவிப் பாதுகாத்தனர். வழிச் செல்வார் செல்லும் வழியறியாது விழிக்குமாறு கவர்த்த வழிகளைக்கொண்ட இடங்களிலெல்லாம் வழி காட்டிகளை நிறுத்தி வழிப்போவார்க்கு வழித்துணை அளித்தனர். திரையன் ஆண்ட தொண்டை நாட்டில், கழுதைகள்மீது மிளகுப் பொதி ஏற்றிச் செல்லும் வணிகர்க்கு ஏதம் நிகழாவாறு, காடுகளிடையே செல் லும் கவர்த்த வழிகளில், வில்லேந்திய வீரர்கள் நின்று

---

* "விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறை." —அகநானூறு : 69.

காத்தனர் எனப் பெரும்பாணாற்றுப் படையும்*, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் தான் ஆண்ட நாட்டு மலைநிலங்களில், இலை வேய்ந்து பண்ணிய குடிசைகள் கட்டி, அதில் வில் வீரர்களை இருத்திக் கவர்த்த வழிகளைக் காத்துவந்தான்; அக் காவல் வீரர்கள், தழை கலந்து தொடுத்த தலைமாலை அணிந்து, வன்சொல் வழங்கும் வாயுடையராய், மான் தோலால் ஆய படுக்கையல்லது, வேறு நல்ல படுக்கையினை விரும்பாது, வழிக்காவலில் விழிப்பாயிருந்தனர் என மதுரைக் காஞ்சியும்†, நன்னன்சேய் நன்னன் ஆண்ட தொண்டை நாட்டுப் பல்குன்றக் கோட்டத்தில் வாழ்ந்து பழகிய ஒருவர், அந்நாட்டிற்கு வரும் புதியோர்க்கு, "நன்னன் நாட்டு மலையிடை வழிகள், அம் மலையில் வாழ்ந்து பழகிய குறவரையும் மருளப்பண்ணும் கொடுமை உடைய; அவ்விடங்களைக் கடத்தல் உம்மால் ஆகாது; ஆகவே, ஆண்டுச் சென்றதும், நீங்கள் வேறொன்றும் செய்யாது, நீங்கள் உடன் கொண்டுசெல்லும உம் இசைக் கருவிகளை எடுத்து இசைத்து ஒலி எழுப்புங்கள்; அம் மலை நாட்டைக் காத்து நிற்கும் கானவர் பலர், அம் மலைமுடியில் குடி

* "கழுதைச சாததொடு வழஙகும
உல்குடைப் பெருவழிக கவலை காக்கும
வில்லுடை வைப்பின் வியன்காட்டு இயவு."
—பெரும்பாணாற்றுப் படை : 80—82.

† "இலைவேய் குரமபை, உழைஅதட் பள்ளி,
உவலைக கணணி, வன்சொல் இளைஞர்
சிலைபுடைக் கையர கவலை காப்ப"
—மதுரைக் காஞசி : 310—312.

வாழ்கின்றனர்; அவர்கள், உங்கள் இசையொலி கேட்ட அந்நிலையே, விரைந்து அவண்வந்து, உங்களுக்கு உண்டற்கினிய பழங்களும், காண்டற்கினிய மலர்களும் அளித்து, முதற்கண் உங்கள் தளர்ச்சியினை ஒழித்து, பின்னர் நீங்கள் போகவேண்டிய இடம் அறிந்து, ஆங்குச் செல்லும் வழியினைக் காட்டி, சிறிதுதூரம் உங்களோடு வந்து வழி அனுப்பி மீள்வர்,'' எனக்கூறி வழிகாட்டினர் எனக் கூறும் மலைபடுகடாமும், வேந்தர்களால் செப்பம் செய்யப்பெற்ற பிற்கால வழிநிலைக் காட்சியை விளங்க உணர்த்தி நிற்றல் உணர்க.

இவ்வாறு நாடெங்கும் வழிகளை அமைத்தும், அவ்வழிகளின் இடையிடையே படைகளையும், வழிகாட்டிகளையும் நிறுவியும், வழிகளைக் காப்பதில் காவலர் கருத்துச் செலுத்தினமையால், அவ்வழிகள் ஊறில் வாயின. ஆறலைகள்வரால் ஆகும் கொடுமையோடு, கொடு விலங்குகளால் உளவாகும் கேடுகளும் இல

‡ ''குறவரும மருளுமம குன்றத்துப படினே.
அகன்கண் பாறைத் துவன்றிக் கல்லென
இயங்கல் ஓமபி, நும இயங்கள் தொடுமின்;
பா ன் அருவிப், பயமங்கெழு மீமிசைக்
காடுகாத்து உறையுமம கானவா உளரே;
நிலைத்துறை வழீஇய மதன்அழி மாக்கள்
புனல்படு பூசலின் விரைந்துவல எய்தி,
உண்டற்கு இனிய பழனும், கண்டோர்
மலைதற்கு இனிய பூவும் காட்டி,
ஊறு நிரமபிய ஆறு அவாமுநதுற
நும்மின் நெஞ்சத்து அவலம வீட,
இம்மென் கடும்போடு இனியிா ஆகுவிர்.''

—மலைபடுகடாம் : 275—286.

வாயின. "இரவல! திரையன் ஆளும் இத்தொண்டை நாடு, செங்கோல் நெறி நிற்கும் சிறந்த நாடாகும். இப் பரந்த நாட்டில் எங்குச் செல்லினும், வழிப்போவாரை வருத்தி, அவர் கைப்பொருளைக் கொள்ளை கொள்ளும் கள்வர்களைக் காண்பது இயலாது. கள்வரால் வரும் ஏதத்திற்கு எவரும் அஞ்சவேண்டுவதில்லை. மேலும், அவன் நாட்டில், இடியும் இடித்து இடையூறு செய்யாது; பாம்புகள் பிறரைக் கடித்துக் கொல்லுதல் அறியா; காட்டுவாழ் புலி முதலாம் கொடுவிலங்குகளும் கொடுமை செய்யா; ஆதலின், அவைகண்டு அஞ்ச வேண்டுவதும் இல்லை. ஆகவே, நீ விரும்பியவாறு, விரும்பும் இடத்தே இருந்து, இளைப்பாறி இளைப்பாறிச் செல்வாயாக." எனப் பாணன் ஒருவனுக்கு அவன் போகும் வழியின் இயல்புகளை வகுத்துரைக்கும் பெரும் பாணாற்றுப் படையினை நோக்குங்கள்*.

வழிகள், இவ்வாறு செப்பம் பெற்றுச் சிறந்து விளங்கவே, அவ்வழிகளில், மக்கள் வழங்குவது மிகுந்தது. நானில மக்களும் ஒன்றுகூடி வாழத் தொடங்கினர். குறவர் குறிஞ்சி நிலத்திலேயே வாழ்வர்; ஆயர் முல்லை நிலத்திலேயே வாழ்வர்; உழவர் மருதநிலத்திலேயே வாழ்வர்; பரதவர் நெய்தல்

* "அத்தம் செலவோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவும களவு வாழ்க்கைக்
கொடியோர் இன்று, அவன்கடியுடை வியன்புலம்;
உருமும உரறாது; அரவும் தப்பா,
காட்டுமாவும் உறுகண் செய்யா; வேட்டாங்கு,
அசைவுழி அசைஇ, நசைவுழித் தங்கிச் சென்மோ!"

—பெருமபாணாற்றுப் படை: 39—45.

நிலத்திலேயே வாழ்வர் என்ற குறுகிய வாழ்வுநிலை மாறிற்று. எல்லா நிலத்தவரும் எல்லா நிலங்களிலும் வாழலாயினர். மக்களின் இனவேறுபாடு மறைந்து, மக்களினத்திற் கிடையே உண்டான இவ்வொற்றுமை யின் விளைவால், நானிலங்களுக் கிடையே நிலவிய வேற்றுமையும் சிறிது சிறிதாக மறையத் தொடங்கிற்று. ஒரு நிலத்து மரம் செடிகொடிகள். ஏனைய நிலங்களிலும் வளர்க்கப் பெற்றன. ஒரு நிலத்தில் வாழ்ந்து பழகிய விலங்கினங்கள் ஏனைய நிலங்களிலும் வாழப் பழகின. நாளடைவில் நானில வேறுபாடு மறைந்துபோக, அனைத்தும் ஒருநிலம் எனக் கருதுமளவு ஒற்றுமை நிலவிற்று.

இந்நிலை சங்க காலத்திற்கு முன்பே உண்டாகி விட்டது. அக்காட்சியைக் கண்டு பாடிய புலவர் பாக்களும் அக்காலத்திலேயே மல்கின. அவற்றைத் திணை மயக்கப் பாடல்கள் எனப் பெயர் சூட்டிப் பாராட்டினர் பழந்தமிழ் மக்கள். அப்பாடல்கள் நாட்டில் உண்டான உண்மை மாறுபாட்டை உணர்த்துவனவே ஆதலின், அவ்வாறு பாடுவதும் பொருத்தமே. அத்தகைய பாடல்களும் உண்மைப் பாடல்களே என மதிப்பிட்டனர் ஆசிரியர் தொல்காப்பியனார்.*

குறிஞ்சி நிலத்து விளைபொருள்களாய வள்ளிக் கிழங்கும் தேனும் விற்றவர், நெய்தல் நிலப் பொருள்க ளாய மீன் எண்ணெயும், நறவும் வாங்குவர். மருத நிலத்துக் கரும்பும், அவலும் விற்றவர், முல்லைநிலத்து

---

* "திணை மயகுறுதலும் கடிநிலை இலவே."

—தொல்: பொருள்: 12.

மான் இறைச்சியும், மதுவும் வாங்குவர். நெய்தல் நிலத்துப் பரதவர், மலைநாட்டிற்குரிய குறிஞ்சிப் பண்பாடி மகிழ்ந்து வாழவர். மலைநாட்டுக் குறவர், கடற்கரைக்கண் மலர்ந்து மணம் நாறும் நெய்தல் மலரை மகிழ்ந்து அணிவர். முல்லை நிலமக்கள் மருதப் பண் இசைப்பர். மலைநாட்டு அகவன் மகளிர், முல்லைநில மாண்பினைப் பாட்டிசைத்துப் பாராட்டுவர். மருத நிலத்து மனைவளர் கோழிகள், குறிஞ்சி நிலத்துத் தினை தின்று உயிர் ஓம்பும; காட்டுக் கோழி, மருதநிலத்து வயல்கள் தந்த நெற்கதிர் தின்னும்; மலைவளர் மூங்கிலில் மகிழ்ந்தாடும் மந்திகள், நெய்தல் மணக்கும் கழிநீரில் நீந்தி மகிழும்; கழிகளில் மீன் தேடித்திரியும். நெய்தல் நிலத்து நாரை, மலைகளில் சென்று தங்கும். இவ்வாறு, நால்வேறு வளமும் ஒருங்கு தலைமயங்க, மாண்புற்றுத் திகழ்ந்தது

* "தேன் நெயயொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்,
தீங் கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மதுமறுகவும்
குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல
நறும் பூங்கண்ணிக குறவர் ஆடக்,
கானவர் மருதம் பாட, அகவர்
நீணிறமுல்லைப் பஃறிணை,நுவலக,
கானக் கோழி கதிர் குதத,
மனைக்கோழி தினைக் கவர,
வரைமந்தி கழி மூழ்கக்.
கழிநாரை வரை
தண்வைப்பின் நாடு

—பொருநர்: 214—220.

நானிலத்து மக்களும், அந் நானிலத்து வாழும் ஏனைய உயிரினங்களும், இவ்வாறு ஒன்றுகலந்து வாழத் தொடங்கவே, அந்நானிலங்களை ஆண்ட ஆட்சி முறையிலும் மாறுதல் இடம்பெற்றது. அரசர்கள், ஒருநில ஆட்சியை மட்டும் விரும்பாது, நானில ஆட்சியையும் விரும்பினர். விரும்பியவாறே அந்நானிலங்களையும் தம் ஆட்சிக் கீழ்க் கொண்டுவந்து ஆண்டனர்.

கோக்கோதை மார்பன் என்ற சேர அரசன் ஆண்ட நாடு, நானிலச் செல்வங்களையும் நனிமிகப் பெற்றிருந்தது. குறிஞ்சி நிலத்து விளைபொருளாம் தினை விதைத்து, அது விளைந்து கதிர் முற்றியிருக்கும் காலத்தில், அப் புனத்தைக் காத்து நிற்பார், கதிர்களைத் தின்னவரும் கிளி முதலாம் பறவைக் கூட்டங்களை ஓட்டத் தம் கைக்கண் உள்ள தட்டை எனும் கிளிகடி கருவியைத் தட்டி ஒலி எழுப்பின், நெல் விளையும் நன்செய்களில், நண்டு முதலாம் இரைதேடி உண்ணும் கொக்கு முதலாம் பறவை இனங்களும், உப்பங்கழிகளில் மீன் தேடித்திரியும் நாரை முதலாம் பறவைகளும் அவ் வொலிகேட்டு அஞ்சிப் பறந்து ஓடும். கோக்கோதை மார்பன் ஆண்ட நாடு, இவ்வாறு, நானில வளமும் ஒருங்கே பெற்றிருந்தமையால், அவனைக் குறிஞ்சி நிலத் தலைவனையும், முல்லைநிலத் தலைவனையும், குறிக்கும் "நாடன்" என்ற பெயரால் அழைப்பதா? மருதநிலத் தலைவனைக் குறிக்க வழங்கும் "ஊரன்" என்றபெயரால் அழைப்பதா? நெய்தல் நிலத் தலைவனுக்குரிய "சேர்ப்பன்," என்ற பெயரால் அழைப்பதா எனத் துணியமாட்டாது வருந்துகிறேன் எனக்கூறி, நானிலமும் ஓர் ஆட்சிக்கீழ் வந்துற்ற நானில வளமும்

ஒவ்வொரு நிலத்தினும் வளரும் - நாட்டின் நன்னிலை யைக் காட்டிச் சென்றார் புலவர் பொய்கையார்‡.

ஓரே இனத்தில், ஓரே இடத்தில் தோன்றிய தமிழ் மக்கள், தாம் வாழும் நிலத்தைத் தம் வாழ்விற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளும் வகையறியாது வாழ்ந்த நனிமிகப் பழைய காலத்தில், நிலத்தியல்பால் திரியும் நீர்போல், தாம் வாழும் நிலத்தியல்பிற்கேற்பத் தம் வாழ்க்கை முறைகளை வகுத்துக்கொண்டனர். அதனால், பண்டு தாம் பிறந்த நிலத்தில், வாழும் வாய்ப்பற்றுப் போனதும், அதனை விடுத்து, வாய்ப்பளிக்கும் வேறு நிலங்களைத் தேடிச் சென்றனர்; சென்றவர், சென்ற அந்நிலங்களிலும், அந்நில இயல்பிற்கேற்ற வாழ்வே வாழ்ந்தனர். அதனால், ஓரினத்தவராய அவர்கள், நிலந்தோறும் வேறுபட்டவராய்ப் பிரிந்து, குறவர் எனவும், ஆயர் எனவும், உழவர் எனவும், நுளையர் எனவும் வேறுபட்ட பெயர்களால் வழங்கப் பெற்றனர்; அந்நிலை மாறிற்று.

தாம் வாழ்ந்த நிலங்களுக் கேற்றவாறு, தம் வாழ்க்கை முறைகளை மாற்றிக்கொள்வதை விடுத்தனர். தம் வாழ்விற்கேற்ப, அந்நிலங்களை மாற்றிக்கொள்ள முனைந்தனர். அதில் வெற்றியும் கண்டனர். குறிஞ்சி,

---

‡ "நாடன என்கோ? ஊரன் என்கோ?
பாடுஇமிழ் பனிக் கடல சேர்ப்பன என்கோ?
யாங்ஙனம் மொழிகோ, ஓங்குவாள் கோதையை?
புனவர் தட்டை புடைப்பின், அயலது
இறங்கு கதிர் அலமரும கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள் ஒருங்கு எழுமே."

—புறநானூறு : 49.

முல்லை, மருதம், நெய்தல் என வேறுபட்டிருந்த நாட்டைத் தம் தளரா உழைப்பால், ஓரியல்புடையதாக மாற்றினர்; மலையைக் கண்டு மருண்டு, காட்டைக் கண்டு கலங்கி, ஆறறைக் கண்டு அஞ்சி, கடல்நீர் கண்டு நடுங்கி நின்றநிலை மாறிற்று. "மலையாயின் என்? காடாயின் என்? ஆறாயின் என்? கடலாயின் என்? யாம் அவைகண்டு அஞ்சேம்; எம் உள்ளத்தில் ஊக்கம் உளது; உடலில் உரம் உளது; உள்ள ஊக்கத்தையும், உடல் உரத்தையும் உறுதுணையாக் கொண்டு தொழிலாற்றும் அறிவுத் திறனும் ஆரப் பெற்றுளோம்; மலைநாட்டை மாட்சி மிகு மருதமாக் குவோம்; காட்டை அழித்து நாடு காண்போம்; ஆற்று வெள்ளத்திற்கு அணைகட்டி அதை ஆட்சி கொள்வோம்; கடல் நீரைக் கலங்களால் கலக்கிப் பயன் கொள்வோம்; ஆகவே, நிலமே! நீ நாடே ஆயினும் ஆகுக; அல்லது காடே ஆயினும் ஆகுக; கடலே ஆயினும் ஆகுக, அல்லது மலையே ஆயினும் ஆகுக; உன்னகத்தே வாழும் எம்மவர் நல்லவராயின், நல்ல திறம் வாய்ந்தவராயின், நின் இயல்பு யாண்டும் நன்றாம்," என்று இறுமாந்து கூறினர்.* திருந்திய இந்நாகரிக வாழ்வைத் தமிழர், நனிமிகப் பழைய காலத்திலேயே பெற்றுப் பெருமை யுற்றனர்.

---

* "நாடாக ஒன்றோ; காடாக ஒன்றோ;
அவலாக ஒன்றோ; மிசையாக ஒன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை; வாழிய நிலனே!"

—புறநானூறு: 187.

# 2. தமிழ் நாடு

ஒரு நாடு, நாடாக விளங்க வேண்டுமாயின், அந் நாட்டில், மக்களும் மாவும் ஆகிய உயிர்ப் பன்மைகள் மண்டி வாழ்தல் வேண்டும். மக்கள் வாழ்வை மிக்க அளவில் பெருத நாடு, நாடாகாது. மக்கள் தொகுதி இல்லையேல், நாடு இல்லை, மக்களே நாடாம்; மக்கள் வாழ்வற்றுப் போன ஊர், ஊரெனப்படாது. அது பாழூர் எனப் பழிக்கப்பெறும்; மக்கள் வாழ்வற்றுப் போன நாடு, நாடெனப்படாது; அது காடெனப் பழிக்கப் பெறும். "வாழ்வோர்ப் போகிய பேரூர்ப் பாழ்,"* எனவும், "நாடு எனும் பேர் காடாக,"† எனவும், புலவர்கள் பழித்துள்ளமை காண்க. ஒரு நாட்டில் பிறந்த மக்கள், வேற்று நாட்டு வாழ்வை விரும்பி, தம் நாட்டை விடுத்துச் செல்வதைத் தம் கனவினும் கருதுதல் கூடாது. அதற்கு மாருக, பல நாட்டு மக்களும், அந் நாட்டு வாழ்வை விரும்பி வந்து கூடுதல்வேண்டும். அவ்வாறு, மக்கள் மனதைப் பிணிக்கும் மாண்புடையதே நாடாம்.

ஒரு நாடு, மக்கள் செல்வத்தை மலியப் பெற வேண்டுமாயின், அந்நாடு, நிறைந்த வளம் உடைய தாதல் வேண்டும். உயிர், உண்டிமுதற்று; உணவு இல்லையேல், உயிர் இல்லை; ஆகவே, உயிர்ப்பன்மை வாழவேண்டுவார், அவ்வுயிர்களை ஓம்பும் உணவுச்

---

† மதுரைக் காஞ்சி: 156.

செல்வத்தைச் சிறக்கப் பெறுதல் வேண்டும்; பிறநாட்டு மக்கள் உள்ளத்தையும் ஒருங்கே பிணித்து, அவர்கள் பெருமளவில் வந்து குவிந்தவழி, அவர்க்கு வேண்டும் உணவுப் பொருள்களைக் குறைவறக் கொடுத்து ஓம்பும் [illegible] பெருவளம் வாய்ந்த நாடே, விழுமிய நாடாம்.

ஒருநாடு [illegible] நாடாய் விளங்க வேண்டுமாயின், அது, நிலவளம், நீர்வளம் ஆய இரு வளங்களையும் ஒருங்கே பெறுதல் வேண்டும். நிலவளம் நீர்வள இரண்டனுள்ளும், நிலவளத்தினும், நீர்வளமே நனிமிகச் சிறந்ததாம். நாடு நிலவள மற்றதாயின், மண்ணை மாற்றியும், நல்ல மண்ணைக் கொண்டுவந்து நிரப்பியும், நிறைய உரம் இட்டும் அந்நிலத்தை வளம உடையதாக்கிக் கொள்ளலாம். ஆனல், ஒருநாடு, நீர்வளம் அற்றதாயின், அந்நாட்டு நிலங்கள், வளம் மிகுந்திருப்பினும் பயன் இன்ரும். இல்லாத நீர்வளத்தை நாமே உண்டாக்கிக் கொள்ளுதல் இயலாது; ஆகவே, ஒருநாடு, நீர்வளத்தை இயல்பாகவே பெற வேண்டுவது நனிமிக இன்றியமையாததாம்.

நீர்வளம் வானத்து மழையால் வருவது. மழை பொய்யாது பெய்யும் நாட்டில் நீர்வளம் என்றும் குன்ருது. பெய்யும் மழைநீர், ஆற்றின்வழி ஓடியும், ஏரி குளங்களில் நிறைந்தும் நாட்டை நீர்வளம் உடையதாக்கும். ஒருசில ஆண்டுகளில், ஆறு குளங்கள் வற்றிப் போயினும், அவ்விடங்களில் தோண்டிய கிணறுகள் வழியே ஊற்றுநீர் தோன்றி உதவும். ஆகவே, ஒருநாட்டில் மழை தவருது பெய்தல்வேண்டும். ஆனல்,மழை எல்லா நாடுகளிலும் தவருது பெய்வதில்லை. குளிர்ந்த காற்று வீசி, மழைதரு மேகத்தை உண்டாக்கி, அவ்வாறு

உண்டாகிய மேகத்தைத் தடுத்து மழையாகப் பெய்யச் செய்யவல்ல, காடுகள் செறிந்த பெருமலைகளைக் கொண்ட நாடுகளில் மட்டுமே மழை தவறாது பெய்யும். ஆகவே, நாடு நல்ல வளம்நிறைந்த நாடாதலை வேண்டின், அந்நாடு பெருமலைகளையும், அம் மலைகளினின் தோன்றிப் பெருக்கெடுத்துப் [illegible] பேராறுகளையும், அப் பேராற்று [illegible] நிறையும் ஏரி குளங்களையும் பெறுதல் வேண்டும்.

ஒரு நாடு வளமற்றுப் போமாயின், அந்நாட்டில் பசி மிகும்; பசி மிகுந்தால், பிணிமிகும்; பசியும் பிணியும் மிக்கவழி, உள்ளத்தில் பகையுணர்ச்சி உரம் பெறும்; பகையுணர்ச்சி உற்றவர், ஒன்றையொன்று பகைக்கும் பல்வேறு கூட்டத்தாரோடு சேர்ந்து, ஒருவரோடொருவர் போரிட்டு அழிவர்; பகைவரை நேர் நின்று அழிக்க மாட்டாத விடத்து, அவரை எவ்வாற்றானும் அழிக்க வேண்டும் எனும் ஆர்வமிகுதியால், அடுத்துக் கெடுக்கத் துணிவர். உற்றார் போலவும், உறவினர் போலவும் நடித்து, ஊறுவிளைக்கும் உட்பகை யுடையராவர்; இறுதியில், அந்நாட்டு அரசியலையே அழிக்கும் அரக்க வுள்ளம் உடையவராய் மாறுவர்; அந்நிலை ஒரு நாட்டிற்கு நலம் பயப்பதாகாது. அது, அந்நாட்டை அழிவுப் பாதையில் கொண்டு சேர்க்கும்; அழிக்கும் அவ் வாற்றல்கள் அனைத்திற்கும் உரம் ஊட்டுவது உறுபசி; பசியே அனைத்திற்கும் மூலகாரணமாம்; பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது பழமொழி. ஆகவே, ஒரு நாடு நாடாக வாழவேண்டுமானால், அந்நாட்டில், பசி, தலை காட்டுதல் கூடாது; தம் நாட்டில், பசி இடம்பெறாமை யினை வேண்டுவார், அந்நாட்டில் குன்றாப் பெருவளம்

பெருகற்காம் வழி வகைகளைக் காண்பதில் விழிப் புடையராதல் வேண்டும். பசியின் கொடுமை யுணர்ந்தே, ஆசிரியர் இளங்கோவடிகளும், அவர் நண்பர் சீத்தலைச் சாத்தனரும், "பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க,"* என ஒரு நாட்டினின்றும் நீங்க வேண்டுவனவற்றுள் பசியை முன் னிறுத்திப் பாடிச் சென்றனர்.

நாடு, எக்காலத்தும் வளம் மிகுந்து விளங்க வேண்டுவது நனிமிக இன்றியமையாததாகும். ஆனல், அந்நிலையை ஒருநாடு என்றும் பெற்றிருத்தல் இயலாது. வளம் அழிக்கும் வாய்ப்புக்கள், நாட்டில் பல உள. மழை இல்லாமை, அம்மழை அளவிற்குமேல் பெய்தல், பயிர்களைப் பாழ்பண்ணும் பூச்சி வகைகள் ஆகிய காரணங்களால், ஒருசில ஆண்டுகளில், அந்நாடு வள மற்றுப் போதலும் உண்டு. நாட்டு மக்கள் இதை உணர்தல் வேண்டும்; உணர்ந்து, நாடுவளம் குறைந்த தற்கேற்பத் தம் வாழ்வின் வசதிகளைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் நாடு வாழும்; அதை விடுத்து, நாடு எதிர்பாரா வகையில் வளமற்றுப் போனதைப் பயன்கொண்டு, தம் செல் வாக்கால், தம் வாழ்வை, மேலும் வளமுடைய தாக்கிக் கொள்ள விரும்புவராயின், அந்நாடு வாழாது. ஆகவே, ஒருநாடு என்றும் அழியாது, எத்தகைய இடர்நிலை வந்துற்றபோதும் தளராது, நின்று நிலைபெற வேண்டு மாயின், அந்நாடு, ஆன்றோர் மலிந்த நாடாதல்

* சிலப்பதிகாரம்: 5: 72—73;
மணிமேகலை: 1: 70—71.

வேண்டும்; ஆன்றோர் நிறைந்த நாட்டில், அறம்வாழும்; அமைதி நிலவும்; தாமும் நன்னெறிக்கண் நின்று, அரசனும் மக்களும் நெறிதவறிய வழி, அஞ்சாது முன் வந்து, அவர் தவற்றினை எடுத்துக்காட்டி, இடித் துரைத்து, அவரைத் திருத்துவர்; அதனால், அந்நாட்டிற் குண்டாம அழிவு அகலும; "இவ்வுலகம் வாழ்வது ஆன்றோர் வாழ்வால்," என்றான், ஒரு பழந்தமிழ்ப் பாண்டிய மன்னன்.† "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அது இன்றேல் மண்புக்கு மாய்வதுமன்‡" என்றார் வள்ளுவர்.

ஆன்றோர் வாழ்வு, அவர் வாழும் நாட்டில் வளம் குறைந்து வறுமை யுற்றதன் விளைவாய்த் தோன்றும் அமைதி யின்மையை அழிவு நெறிகளைப் போக்க மட்டும் பயன் படுவதன்று; அது, அந்நாடு வளம் குறையாது விளங்கவும் பயன்படுவதாம், நல்லோர் வாழ்வால், நாட்டில் மழைவளம் குன்றுவதில்லை யாதலின். "நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்டு எல்லார்க் கும பெய்யும் மழை" என்பது நம் நாட்டவர் கண்ட உண்மை உரையன்றோ? ஆகவே, ஆன்றோர் வாழ்வு, அந்நாடு, வளம் பெறுவதினும், நனிமிக வேண்டற் பாலதாம்.

நாட்டில் நாகரிகம் வளர வளர, நாட்டு மக்களின் வேட்கையும், அவ்வேட்கை தீர்க்கும் தேவையும் பல வாம்; ஒரு நாட்டின் வயல் வளம், அந்நாட்டு மக்களின் வயிற்றை மட்டுமே நிரப்பும்; மக்களுக்கு வயிற்று

---

† புறநானூறு: 182.

‡ திருக்குறள்: 996.

வேட்கை மட்டும் நீங்கினுல் போதாது; ஏனைய வேட்கைகளும் நிறைவேறுதல் வேண்டும். மக்கள், தம் வேட்கை நிறைவேற வயலை மட்டும் நோக்கினுல் போதாது. அதற்கு, அந்நாட்டில் பணவளம் பெருகுதல் வேண்டும்; அந்நாட்டுச் செல்வர், பிற நாடுகளோடு வாணிக உறவு மேற்கொண்டு, பெரும்பொருள் கொணர்தல் வேண்டும்.

நாட்டில் செல்வர் சிறக்க வாழ்தல்வேண்டும்; ஆனுல், அச்செல்வர், செம்மைநெறி நிற்கும் சிந்தையராதல் வேண்டும்; செல்வர், பிறர்பொருளைத் தம் பொருளேபோல் பேணுதல் வேண்டும். பொருள் ஈட்டுங்கால், அறவழி அறிந்து ஈட்டுதல்வேண்டும். பிறர் வருந்த, தாம் பொருள்சேர்த்தல் பெரும் பழியாம் எனும் உணர்வுடையராய் இருந்து ஈட்டுதல்வேண்டும்; ஈட்டிய பொருளைப் பயன்கொள்ளாது பதுக்கி வைத்தல், நாட்டிற்குப் பெருங்கேடாம்; அதை ஈட்டுபவரும், அந் நாடும், அபபொருளால் அடையவேண்டிய பயனும் அழிந்துபோம். ஆகவே, அரிதின் முயன்று ஈட்டிய அப் பொருளைச் செலவிட்டுச் சிறந்த பயன்நுகரும் பரந்த சிந்தை செல்வர்க்கு அமைதல் வேண்டும். 'செல்வர்க்கு, அழகு செழுங்கிளை தாங்குதல்' என்பர். செல்வவாழ்வில் செமமாந்து வாழும் செல்வர், வறுமையால் வாடும் தம் சுற்றத்தினரைப் பொருள் அளித்துப் பேணும் பேருள்ளம் வாய்த்தவராதல் வேண்டும். அவ் வுள்ளம், அவர் ஆக்கம்பெருகப் பெருந்துணையாம். செல்வர், தம்மைச் சேர்ந்த சுற்றத்தினரை ஓம்புவது மட்டும் போதாது; தம்மோடு எவ்விதத் தொடர்பும் இலராகவும், வறுமையால் தமபால் வந்து பொருள்

வேண்டி இரந்து நிற்பார்க்குப் பொருள் அளித்துப் பேணுவதும் வேண்டும். வறியார்க்கு வழங்குவதும், அவ்வாறு வழங்குவதால் வரும் புகழ்பெற்று வாழ்வதும், விழுமிய வாழ்க்கை நெறியாம். அறவழி நின்று பொருள் ஈட்டி, தாம் துய்த்து, சுற்றம்பேணி, வறியோர்க்கு வழங்கி வாழும் வாழ்வால் நாட்டுவளம் பெருகும்; வாட்டம் ஒழியும்; ஆதலின் அத்தகைய செல்வர் வாழ்வு, நாட்டிற்கு நல்உறுப்பாம்.

ஒரு நாட்டில் வளம் மிகுந்துளது; பசியும், அதன் பின் விளைவுகளும் அந்நாட்டில் இடம்பெற்றில; ஆன்ரோர்களும், அறவழி அறிந்த வணிகர்களும் வாழ்கின்றனர்; இவ்வாறு எல்லா வகையாலும் சிறந்து விளங்கும் நாட்டில், அரசனும் நல்லனுதல் வேண்டும்; ஆளும் அரசன், ஆற்றலோ, அரசியல் அறிவோ உடையனல்லனயின், அந்நாடு பெற்றுள்ள ஏனைய சிறப்புக்களால் பயன் இன்ரும். அவன்பால் ஆண்மையில்லையேல், அது அந்நாட்டைப் பகையரசர்களின் வேட்டைக் காடாக மாற்றிப் பாழ்செய்யும். அவன்பால் அரசியல் அறிவு இல்லையேல், நாட்டு மக்கள்பால் அன்பற்று வன்புறுவன்; அவன் கோலின் கொடுமையால் துயர் உற்ற மக்கள், அவனையும் அவன் ஆட்சியையும் அழிக்க வீறுகொண்டு எழுவர். அதனுல், நாடு அமைதி இழந்து அல்லல் உறும்; மக்களுக்கு நெல்லும் உயிர் அன்று; நீரும் உயிர் அன்று; மன்னனே உயிர் என மதிக்கும் காலமாதலின், அக் காலத்தில், நாடு நல்ல அரசனைப் பெறவேண்டுவது பெரிதும் இன்றியமையாததாம்.

ஒருநாடு, இவ்வாறு, எல்லா நலமும் ஒருங்கே

அமைந்த அழகிய நாடாயின், அந் நாட்டின்மீது அண்டை நாட்டு அரசர் பலரும் நாட்டம் உடையராய் வாழ்வர். அரசனும், அவன் படையும் தளர்ந்த நிலைநோக்கித் தாக்கித் தமதாக்கிக்கொள்ளத் துணிவர். ஆதலின், ஆளும் அரசன், அந்நாட்டைப் பகைவர் அணுகற்கரிய அரண் அமைத்துக் காப்பதில் கருத்துடையனுதல் வேண்டும். பகைவர் படை புகுதற்கு இயலாவாறு, காடு மலை கடல்களை அரணுகக் கொள்ளுதல் வேண்டும்; அவ்வரண்களையும் அழித்துவிட்டுப் பகைவர் படை உட் புகுமாயின், அவ்வாறு புகுந்த பகைவர் படையால், தம் நாட்டுப் படைகள பாழுருது, பதுங்கியிருந்து, காலம் வாய்த்ததும் பாய்ந்து தாக்கி, அபபகைவர் படையைப் பாழ் செய்தற்கு ஏறற வாய்ப்பளிக்கும் வலிய அரணைத் தம் நாட்டகத்தே நிறுவிக் காத்தல்வேண்டும். நாடு குறித்து நம் பழந்தமிழ் மக்கள் கொண்டிருந்த கருத்து இதுவாம். அன்றைய தமிழ்நாடு, அந்நலம் பலவும் அமையப் பெற்றிருந்தது என்பதற்குச் சங்கத் தமிழ் நூல்கள் சான்று பகர்கின்றன.

நாட்டிற்குரிய நலங்கள் அனைத்தையும் தமிழ்நாடு நன்கு பெற்றிருந்தது. நாட்டின் இயல்பு இது எனப் புலவர்கள் கூறும் இக்காட்சி நலம், அவர் கனவிற் கண்ட கற்பனைக் காட்சியன்று; வடவேங்கடம் முதல் தென்குமரி வரையும் பரவியிருந்த தமிழ்நாட்டின் பல பகுதிகளையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்த அவர்கள், "யாம் கண்டு மகிழும் இத்தமிழகக் காட்சிக் கவினை, எம்பின் வருவார், தம் புறக்கண்ணுல் காணுராயினும், அகக்கண்ணுல் கண்டு மகிழ்க" எனக் கருதிய, அவர் நல்லுளளத்தின் விளைவே, அவர் பாடல்களில் நாம் காணும் தமிழ்நாட்டுக்

காட்சி. நாட்டைக் காணாதவர், நாட்டின் இயல்பு கூறுதல் இயலாது; இலக்கியம் கண்டதற்கன்றோ இலக்கணம் கூறுதல் இயலும்?

ஒருபால் ஞாயிற்றின் வெப்பம் மிக, ஒருபால் மழை தன் தொழிலை மறக்க, நாடு வற்கடம் உற்ற காலத்திலும், புதுப்புனல் கண்டு, மகளிர் மகிழ்ந்து ஆடவும், வயல்களில் விளைந்து காய்ந்த செந்நெற் கதிர்களை, அரிவாளால் அரிந்து மலைமலையாக அடுக்கி, அடித்துக் கடாவிட்டுத் தூற்றிக் குவித்த செந்நெற் குவியல்கள் மேரு மலைபோல் காட்சி நல்குவதைக் குதிர்களில் இனி இடம் இல்லையாமாறு இட்டு வைக்கும் வண்ணம் வேலி ஆயிரம் கலம் விளையவும், நறைக்கொடி, நரந்தம்புல், அகில், ஆரம் முதலாம் பெரும்பாரங்களை அடித்துக் கொண்டுவந்து, தான்பாயும். துறைகள்தோறும் ஒதுக்கி விட்டு, ஏரி குளம் முதலாம் எண்ணற்ற நீர் நிலைகளுள், வெண்ணுரை விளங்கப் பேரொலி எழப் புகுந்து நிறைத்துப் பாயும் காவிரியாற்றால் கவினுற்றது நம் கன்னித் தமிழ்நாடு.*

---

* "பெருவறன் ஆகிய பண்பில் காலையும்,
நறையும், நரநதமும், அகிலும், ஆரமும
துறைதுறைதோறும் பொறை உயிர்த்து ஒழுகி,
நுரைத்தலைக் குரைப்புனல வரைப்பகம் புகுதொறும்
புனல ஆடுமகளிர் கதும எனக்குடையக்
கூனிக குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடு கோடாகப் பிறங்கி, நாள்தொறும்
குன்றுஎனக் குவைஇய குனருககுப்பை
கடுநதெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்
சாலிநெல்லின சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு."

—பொருநராற்றுப் படை: 237—248.

தமிழகத்து நிலங்கள், தமிழ் நாட்டு மக்களுக்கு வேண்டும் உணவை மட்டுமே அளிக்கும குறைவளம் உடையவல்ல; அவை, தம் நாடு நோக்கிவந்த பிறநாட்டு மக்களுக்கும் உணவளித்துப் புரக்கும் உயர்ந்த வளம் வாய்ந்தனவாகும். வேங்கட மலைக்கு வடக்கே உள்ள நாடு வற்கடம்பெற்று, வறுமையுற்றதாக, அந்நாட்டினின்றும் வந்து புகுந்த வடநாட்டார்க்கு வாழ்வளித்துப் புரந்த பெருமையினைத் 'தமிழ்நாடு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பெற்றது எனப் பாராட்டி யுள்ளார் புலவர் கல்லாடனார்.*

தமிழகம், சோணாட்டு நன்செய்கள் அளிக்கும் செந்நெல்லால் சோற்று வளமும், பாண்டி நாட்டுக் கடல் அளிக்கும் முத்துக்களால் பண வளமும், சேர நாட்டு மலைகள் அளிக்கும் வேழங்களால் படை வளமும், தொண்டைநாட்டு ஆன்றோர்கள் அளிக்கும அறிவுரையால் மக்கள் வளமும் விளங்க, நாடடிற்குரிய நலமெலாம் பெற்றுப் பெருமையுற்ற காட்சியைப் புலவர் ஒருவர் கண்டு பாராட்டியுள்ளார்.†

தமிழ் நாட்டில், பண்டு, நகரங்கள் நிறைந்திருக்கவில்லை; அது சிற்றூர்களையே நிரம்பக்கொண்டிருந்தது. தொழில் வளத்தால் வாழ்வு பெறும் நாடுகளே, நகரங்களை நிறையக்கொண்டிருக்கும்; வயல் வளத்தால் வாழ்வு பெறும் நாடுகள், சிற்றூர்களையே சிறக்கப்

---

* ''வேஙகட வரைபபின் வடபுலம் பசித்தென
ஈங்கு வந்து இறுதத என் இரும்பே ரொக்கல்.

—புறநானூறு: 291

† வேழம உடைதது மலைநாடு.

பெற்றிருக்கும். தமிழகம், உழவுத் தொழிலை உயிர் ஓம்பும் தொழிலாகக் கொண்ட நாடு. தொழில் வளம் பெருகவேண்டும் என விரும்பி, அதை வளர்க்க அரசியலாரே முன்வந்து, தம்மால் ஆவன எல்லாம் புரியும் இக்காலத்திலும், தமிழகம், உழவுத் தொழிலைக் கைவிடமாட்டாது கடைப்பிடித்து வாழ்கிறது என்றால், தொழில் வளர்ச்சியில் கருத்தின்றி வாழ்ந்த பண்டு, அது முழுக்க முழுக்கச் சிற்றூர் வாழ்வையே விரும்பித் திகழ்ந்ததில் வியப்பில்லை.

மேலும், ஒரு நாட்டில், மக்கள் முதன் முதலாக வாழத் தொடங்கியபோது, அம்மக்கள் தம் வயிற்றை வளர்க்கும் உழவுத் தொழிலிலேயே, தம் கருத்தினைச் செலுத்துவர். உயிர் ஓம்பும் வாழ்வே, தொடக்கத்தில் அவர் கண்முன் தோன்றும். நாகரிக வாழ்வு வாழ வேண்டும் எனும் நினைப்போ, அவ்வாழவு பெற வாணிகம் முதலாம் தொழில்களை மேற்கொள்ளவேண்டும் எனும் அறிவோ, அவர்களுக்குத் தொடக்கத்தில் தோன்றுவ தில்லை. அஃது, அவர்கள் வாழத்தொடங்கிய காலத்திற் குப் பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரே தோன் றும; அதனால், தமிழகத்தைத் தாம் வாழ்தற்கேற்றவளம் உடையதாக ஆக்கி, ஆங்குத் தம் வாழ்க்கையைத் தொடங்கியகாலத்தில், தமிழர் வயல் வளம் ஒன்றையே கருத்தில் கொண்டனர்; காடுகளை அழித்து, நாடுகளை அமைத்து ஆண்ட கரிகாற் பெருவளத்தான், முதலில் குளம் பல தோண்டி, அந்நாட்டு வளத்தை வளர்த்து விட்ட பின்னரே, பேரூர் அமைப்பில் கருத்தைச் செலுத் தினன் என்பது வரலாற்றுச் செய்தி. தமிழ் நாட்டில், தொடக்கத்தில், சிற்றூர்களே இடம்பெற்றன. பிற்

காலத்திலேயே நகரங்கள் இடம் பெறலாயின என்பதைத உறுதி செய்கிறது.* சிற்றூர்கள், தொடக்க காலம் முதலாகவே தோன்றத் தொடங்கினமையால், தமிழ நாட்டில், பேரூர்களினும், சிற்றூர்களே பெருவாரியாகக் காணப்பட்டன; நாடெங்கும் நிறைந்திருந்த சிற்றூர்க் காட்சிகளைக் கண்டு, ஒன்றற்கொன்று அணித்தாக நெருங்க இருந்த அவற்றின் நிறைவை எண்ணி அறிய மாட்டாது வியந்த புலவர்கள், "ஊரிடை இட்ட நாடு" †, "குறும்பல்லூர் நெடுஞ் சோணாடு" ‡, "குறும்பல் ஊர யாம் செல்லும் ஆறு" § எனப் பாராட்டிப் பாடிச் சென்றனர்.

தமிழகம் இயல்பாகவே நால்வேறு வகையாகப் பிரிந்திருந்தது. அந்நிலங்களில் வாழ்ந்திருந்த மக்கள், நாள ஆக ஆகத் தம்முள் தொடர்புகொண்டு ஒன்று கலந்து வாழத் தொடங்கினராயினும், இயற்கையின் விளைவாய் அமைந்த அந்நில வேறுபாட்டினை அவர்களால் அறவே கைவிட இயலவில்லை. அதனால், வாழ்வு குறித்துப் பல நாட்டு மக்களும் வந்து வாழும் பேரூர்களில் மட்டுமே, மக்கள் தம் வேற்றுமை மறந்து வாழ்ந்தனர். சிற்றூற்களில் வாழ்ந்த மக்களிடையே

---

* "காடு கொன்று நாடாக்கிக
குளம்தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்குநிலை மாடதது உறநதை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழை அமைத்து
ஞாயில்தொறும் புதை நிறீஇ."

—பட்டினப்பாலை: 283—288.

† சிலப்பதிகாரம்: 10 : 153.

‡ பட்டினப்பாலை : 218.

§ நற்றிணை : 9.

அவ்வேற்றுமை அகலவில்லை. அதனால், குறிஞ்சி நிலச் சிற்றூர்களில் குறவர்களே வாழ்ந்தனர்; முல்லை நிலச் சிற்றூர்களில் ஆயர்களே வாழ்ந்தனர்; மருத நிலத்துச் சிற்றூர்களில் உழவர்களே வாழ்ந்தனர்: நெய்தல் நிலத்துச் சிற்றூர்களில் நுளையர்களே வாழ்ந்தனர்; பாலை நிலத்துச் சிற்றூர்களில் எயினர்களே வாழ்ந்தனர். நிலந்தோறும் மக்கள் வேறுபடுதற்கேற்ப, அந்நிலத்துச் சிற்றூர்களும், வேறு வேறு பெயர்களினாலேயே அழைக்கப் பெற்றன; குறிஞ்சி நிலத்துச் சிற்றூர் குறிச்சி எனவும், முல்லை நிலத்துச் சிற்றூர் பாடி எனவும், மருத நிலத்துச் சிற்றூர் ஊர் எனவும், நெய்தல்நிலத்துச் சிற்றூர் பாக்கம், பட்டினம் எனவும், பாலை நிலத்துச் சிற்றூர் சேரி எனவும் அழைக்கப் பெற்றன; நாளடைவில் மக்கள் கலந்து வாழத் தொடங்கவே, ஊர்ப் பெயர்களும் கலந்து வழங்கத் தலைப்பட்டன.

சுற்றிலும் புல் மூடிக் கிடக்கும்; அதனால் ஊரை அடையும் வழி எது என்பதை அறிதல் இயலாது; ஊரைச் சுற்றி முள்வேலி அமைந்திருக்கும்; அவ் வேலிக்கு இடையே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு சிறு குடில்கள் காணப்படும்; ஒவ்வொரு மனையின் முன்புறத்திலும் பருத்திச்செடி முளைத்துப பஞ்சு பரந்திருக்கும். அம்மனையின் ஒருபால் வேலியை அடுத்துப் பீர்க்கு முதலாம் கொடிகள் படர்ந்து அலையும்; அதை அடுத்து ஒரு குப்பை மேடும் காணப்படும்.*

* "புல் மூசு கவலைய, முள்மிடை வேலிப்,
பஞ்சி முன்றில், சிற்றில் ஆங்கண்
பீரை நாறிய சுரை இவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை"

—புறநானூறு: 116.

வேலியாக வளர்த்த பனைமரங்களில், பறவைகள் கூடுகட்டி வாழும்; தம்மை நோக்கி வீசும் கவண் கற்களைக் காணும் தொறும், அப்பறவைக் கூட்டம், அஞ்சிப் பறந்து ஓடி, மீண்டும் அவண் வந்து அமரும்; பன்றி ஒன்று, பல குட்டிகளை ஈன்று விட்டு, ஒருபால் படுத்து உறங்கும்; மற்றொருபால், பல இனக்கோழிகளும் ஒன்று கூடிக் குப்பையைக் கிளைத்துக் கொண்டிருக்கும்; ஊர் நடுவே, ஒரு சிறிய உறைக் கிணறு தோனறும்; அக் கிணற்றை அடுத்து ஊர்ப் பொதுவிடம்; தொழில் ஒழிந் திருக்கும் அவ்வூர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இருந்து, ஆட்டுக்கிடாய்களையும், கோழி, சிவல் முதலாம் பறவை களையும் பொரவிட்டு, அவை செய்யும் போர் கண்டு களித்திருப்பார்†. செந்தமிழ் நாட்டுச் சிற்றூர்களின் பொதுக்காட்சி இது.

ஆட்டுக்குட்டிகள் நின்று தின்னுமாறு தழைகள் கட்டப்பெறும் குறுகிய கால்களை நாட்டி, கழிகளை வரிந்து கட்டி, அவற்றின் மீது வரகு கற்றையால் கூரைவேய்ந்து ஆக்கிய சிறுகுடிசை. சிறு தூறு வளர்ந்து வளைந்து நிற்கும் வாயிற்குக், கழிகள் கொண்டு கட்டிய கதவு அமைத்து, ஆட்டுக்கிடாய்த் தோலைவிரித்து, அதன் மீது இருந்து காவல்மேற் கொண்டிருப்பன், அம் மனைக்குரிய முதியோன்; அக்குடிலின் முன்புறத்தே சிறு சிறு தறிகளை நட்டு, செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும், நீண்ட

---

† "கல் எறியும் கவண் வெரீஇப்
புள் இரியும் புகர்ப் போந்தைப்
பறழ்பபன்றிப், பல்கோழி,
உறைக்கிணற்றுப் புறஞ்சேரி
மேழகத்தகரொடு சிவல் விளையாட"
—பட்டினப்பாலை: 73—77

தாம்பில் வரிசையாகப் பிணைக்கப் பெற்றிருக்கும்; குடிலை யும், அதன் முற்றத்தையும் இடையே யிட்டு அவற்றைச் சுற்றி முள்வேலி அமைத்திருப்பர் ஆயர். இதுவே ஆயர் வாழிடத்தின் அமைப்பு; இத்தகைய வாழிடங்கள் பல ஒரு சேரக்கிடப்பதே ஆயர்பாடி*.

முள் நிரை மரங்களால் ஆன வேலி சூழ்ந்த தொழு ஒருபால் இருக்கும்; பார்ப்பவர்க்குப் பெண் யானைகள் போல்தோன்றும் பெரிய பெரிய குதிர்கள் மனையின் முன்புறத்தே நின்று காட்சி தரும்; களிற்றின் கால்போல் பருத்த கால்களை நாட்டி அமைந்த பந்தல் வருவார்க்கு நிழல் தந்து நிற்கும். தொழில் ஒழிந்து கிடக்கும் வண்டி யின் உருளைகளும், கலப்பையும் சார்த்திவைக்கப் பெற்ற ஒரு கொட்டிலும் ஆங்குக் காணப்படும். அக்கொட்டி லின் ஒரு பகுதி உணவறையாகவும் பயன்படுமாதலின், அக்கொட்டில் கரும்பு கைபடிந்து கிடக்கும். அக்கொட் டில், வரகு வைக்கோல் வேயப்பெற்று, கார்காலத்துக் கருமேகம் படர்ந்த வானம்போல் விளங்கித் தோன்றும்.

---

*"மறிய, குளகு அரை யாத்த குறுங்கால் குரமபைச்
செற்றை வாயில், செறிகழிக் கதவின,
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்,
அதளோன துஞ்சும் காப்பின், உதள
நெடுநதாமபு தொடுத்த குறுந்தறி முன்றில்
கொடுமுகத்துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள்வேலி எருப்படு விரைப்பு"

பெரும்பாணாற்றுப்படை: 147—154.

உழவர் ஊரில் உள்ள ஒருமனைக் காட்சி இது*.

பெரிய பெரிய தென்னங் கீற்றுக்கள் வேய்ந்து கட்டிய கூரையைக் கொண்ட வீடு; மனையின் முன் புறத்தே மஞ்சள் விளைந்திருக்கும்; தோட்டத்தில் மணம் நாறும் மலர்கள் நிறைந்த மரம் செடி கொடிகள் வளர்ந்திருக்கும்; மனை, மனைமுற்றம், மனைத்தோட்டம் ஆகியவற்றைச் சூழ்ந்து அடர்ந்த தோப்புக்கள் வளர்த்திருப்பர்; உழவர்வாழ் ஊரின் மற்றொரு மனைக்காட்சி இது.‡

மருத நிலத்து மனைகளுள் இதுவும் ஒன்று; கன்று ஈன்றபசு, ஊர்ப்பசு நிரையோடு புல் மேயச்சென்றுளது; அதன் இளங்கன்று, அது விரும்புமளவும் தடையின்றி ஓடி ஆடுமாறு, நீண்ட தாம்பில் பிணித்துத் தறியில் கட்டப்பெற்றுளது. நீண்ட ஏணி இடினும் எட்டாத நெடிய வடிவையும், தலைநிறையக் கொட்டிய நெல் முதலாம் உணவுப் பொருளையும் கொண்ட கூடுகள்,

* "முள்உடுத்து, எழுகாடு ஓங்கிய தொழுவுடை
வரைப்பின்
பிடிக்கணத்தன்ன குதிஉடை முன்றில்,
களிற்றுத்தாள் புரையும் திரிமரப் பந்தர்க,
குறுஞ்சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்"
—பெரும்பாண: 185—191.

‡ "வண தோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சள் முன்றில், மணம்நாறு படப்பைத்,
தண்டலை உழவர் தனி மனை."
—பெரும்பாணாற்றுப் படை : 353—355

ஓருபால் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன; கூடுகள் பழமையால் இற்றுப்போமாறு பல ஆண்டுகள் ஆகியும், அதில் இட்டுவைக்கப்பெற்றுள்ள உணவுப் பொருளகள் எடுக்கப்பெற்றில; அத்தகைய பழம் பெரும் கூடுகளை நிறையக்கொண்டிருந்தது அவ்வுழவர் மனை.†

தொழில் அறிந்த தச்சன், இளஞ்சிறுவர் உள்ளத்தை ஈர்க்குமாறு ஆக்கி அளித்த நடைதேரை, ஓர் இளஞ்சிறுவன் ஈர்த்து ஈர்த்துக் களைத்துப்போனான்; ஆடித்தளர்ந்த அவனை, அவன் வளர்ப்புத்தாய், அன்போடு ஏந்தியவாறே மனைபுகுந்தாள்; அவன் மனம் நிறையுமளவு பால் புகட்டினாள்; உடல் தளர ஆடி, உள்ளம் நிறையப் பால் உண்ணவே, உறக்கம் வந்துற்ற அவனை, அழகிய அமளியில் கிடத்தி உறங்கப் பண்ணினாள்; இத்தகைய அன்புக் காட்சி நல்கும் நல்ல மனைகளும் ஆங்குச் சில உள.‡

உழவர் வாழும் மருதநிலத்து ஊர்கள், தம் நிலத்து வாழ் மக்களுக்கு உணவளிப்பதோடு நில்லாமல், உலக

† "பகட்டா ஈன்ற கொடுநடைக் குழவிக்
கவைத தாம்பு தொடுத்த காழூன்று அல்குல்
ஏணிஎய்தா நீள்நெடும் மார்பின்,
முகடுதுமித்து அடுக்கிய பழம்பல் உணவின்
குமரி மூத்த கூடுஓங்கு நல்இல்."
பெரும்பாண் : 324—247

‡ "தச்சச்சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர்
"தளர் நடை வருத்தும் வீட, அலர்முலைச்
செவிலியப் பெண்டிர்த் தழீஇப் பால் ஆர்ந்து
அமளிதுஞ்சும் அழகுடை நல்லில்."
—பெரும்பாணாற்றுப் படை : 248—252

மக்களுக்கெல்லாம் உணவளித்து உதவும் உயர்வுடைய வாயின; அதனால், அவ்வூர்கள், ஒருபால், வறியவரின் வயிற்றுப்பசி போக்கும் வளமார் தொண்டையும், ஆளும் அரசனுக்கு ஆற்றல் அளிக்கும் அருந்தொண்டையும், தம் உழவுத் தொழிலால் உதவும் உயர்ந்தோர் வாழும் வெற்றிச் சிறப்பு வாய்ந்தன எனப் பாராட்டப் பெற்றுள்ளன*.

உழவர் ஊர்களை அடுத்து அடுத்து, அந்தணர்கள், வாழிடம் அமைத்து வாழ்ந்திருந்தனர். அக்காலத்தில், அந்தணர்கள், அறநூல்கள் அறிந்து, ஏனையோர்க்கு அறிவுரைக்கும் ஆசிரியர்களாய் விளங்கினர்; வேள்வி இயற்றலையும், வேதம் ஓதலையும் விழுமிய தொழிலாக மேற்கொண்டனர்; அவர்கள், அறிவால் நிறைந்த ஆன்றோர்களாய் வாழ்ந்தமையால், தங்கள் வாழிடங்களை, ஏனையோர் வாழிடம் போலாது, தூய்மையும், துப்புரவும் வாய்ந்து விளங்கும வண்ணம் வகுத்துக்கொண்டனர்; ஏனையோர் ஊர்களோடு தொடர்பு கொள்ளாது, அந்தணர்களை மட்டுமே கொண்ட ஊர்கள் பல, தமிழ் நாட்டில் ஆங்காங்கே காணப்பட்டன.

மனையின் முன்புறத்தே, சிறிய பந்தல் ஒன்று தாழ அமைந்திருக்கும்; பந்தல்காலில், வளமான ஆன் கன்று கட்டப்பெற்றிருக்கும்; மனை, அழகும், வாழ்தற் கேற்ற வாய்ப்பும் அமையப்பெற்றிருக்கும்; நாள் தோறும், ஆவின் சாணங்கொண்டு மெழுகப்பெற்றுத் தூசி நீங்கித் துப்புரவாகக் காணப்படும்; நாய் அவ்

---

* "இரப்போர் சுறறமும, புரபபோர் கொற்றமும
உழவிடை விளைப்போர் பழவிறல ஊர்கள்."
—சிலப்பதிகாரம் : 10 : 149—150

விடத்தை நணுகவும் அஞ்சும்; குப்பைமேடு இல்லை யாதலின், கோழி, அவண் குறுகுவதில்லை; ஆங்குள்ள மரங்களில் கூடுகட்டி வாழும் கிளிகள், அம்மறையோர் ஓதும் வேதங்களை நாள்தோறும் கேட்டுக் கேட்டுப் பழகினமையால், அவை வாய்திறக்குந்தோறும், அவற்றின் வாய், வேத ஒலியே மிழற்றும்; அப்பதிவாழ் அந்தணர், நாள்தோறும் எடுக்கும் வேள்வியினின்றும் எழும் வேள்விப் புகை, ஆங்குள்ள மாடங்கள்மீது படிந்து கிடக்கும் காட்சி, மேகம் படிந்த மலைபோல் தோன்றி, மனத்திற்கு மகிழ்ச்சி ஊட்டும்; இவ்வாறு எங்கு நோக்கினும் மங்கலக் காட்சியே மணக்கும் மறையோர் வாழ் ஊர்கள், தமிழ்நாட்டில் மிகப் பலவாம்.[1]

தமிழ்நாட்டுக் கடற்கரை ஊர்கள், தமிழகத்தின் வாணிகம் வளர்க்கும் விழுச்சிறப்புடையவாம்; வாணிகத் துறையுள், கடல் வாணிகமே பெருவளம் கொழிக்கும்; அதை உணர்ந்த தமிழர், கடல்களில் பெரிய பெரிய நாவாய்களைச் செலுத்திச் சென்று, சேய்மைக்கண்

"செழுங்கன்று யாத்த சிறுதாள் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்,
மனைஉறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப்பாளர் உறைபதி."
—பெரும்பாணாற்றுப்படை: 297—301.

"மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை
இறைஉயர் மாடம் எங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும்
மங்கல மறையோர் இருக்கை."
—சிலப்பதிகாரம்: 10: 144—147.

உள்ள நாடுகளோடு வாணிக உறவு மேற்கொண்டிருந் தனர்; நெடுந்தொலைவு சென்று, கடல் வாணிகம் புரிந்த தமிழர், நெய்தல் நிலப்பொருள்களை, அவை கிடைக்காத தமிழகத்துப் பிற இடங்களுக்குக் கொண்டுசென்று விற்று, ஆங்குக் கிடைக்கும் பொருள்களை வாங்கிவரும் உள்நாட்டு வாணிகத் துறையிலும் வளங்கண்டனர்; உள்நாட்டில் ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்குப் பொருள் களைக் கொண்டுசெல்ல, எங்கெங்கு இயலுமோ, அங்கெல்லாம் உப்பங்கழிகளை உண்டாக்கி, அவற்றில் சிறுசிறு படகுகளைவிட்டுப் பயன் கொண்டனர். அதனால், தமிழ் நாட்டுக் கடற்கரை ஊர்களில், கட லோடும் நாவாய்களும், கழி ஓடும் படகுகளும் எக்காலத்தும் நிறைந்து காணப்படும்; கடல் வாணிகத் தில் கருத்தூன்றிய தமிழா, கடலில் செல்லும் நாவாய் களுக்கு வழிகாட்டித் துணைபுரியவல்ல கலங்கரை விளக்குத் தம்பங்களைத் தமிழ்நாட்டுக் கடற்கரை யெங்கும் நாட்டிவைத்தனர். கலங்களையும், கலங்கரை விளக்கங்களையும் கொண்ட கடற்கரை ஊர்க்காட்சிகளைப் புலவர்பலர் பாடிப் பாராட்டி யுள்ளனர்.

பால்போலும் வெண்ணிறம் வாய்ந்து, வெள்ளிய தலையாட்டம் பெற்ற மேலைநாட்டு அராபிக் குதிரை களையும், வடநாட்டு வளங்களையும் ஏற்றிக் கொணர்ந்த எண்ணற்ற நாவாய்கள சூழ்ந்து கிடக்கும் காட்சியையும், கடல்விளை அமுதாம் வெள்ளுப்பை ஏற்றிச்சென்று விற்று, அதற்கு ஈடாகப் பெற்ற செந்நெல்லை ஏற்றிக் கொணர்ந்த ஓடங்கள், பந்தியில் வரிசையாகப் பிணித்து வைக்கப்பெற்ற குதிரைகள்போல், கரைக்கண் உள்ள தறிகளில் வரிசையாகப் பிணிக்கப் பெற்றிருக்கும்

காட்சியையும், வானுலகம் வீழ்ந்து விடாவண்ணம் தாங்கி நிற்கும் முட்டுக்கம்பமோ எனக் கண்டவர் மருளுமாறு விண்ணுற உயர்ந்து, இட்ட ஏணிமீது ஏறி அடைவதும் அரிதாமாறு, கல்லும் சாந்தும் சேர்த்துக் கட்டிய மாடிமீது, இராக்காலத்தில் ஏற்றி வைத்த பேரொளிகாலும் பெரிய திப்பந்தம், கடலில் கரை காணாது கலங்கும் கலங்களை கரைநோக்கி அழைக்கும் அரிய காட்சியையும் கடைச்சங்க இலக்கியங்கள் நம் கண்முன் கொணர்ந்து காட்டுகின்றன.*

வாணிக வளங்கொழிக்கும் கடலை அடுத்த இடங்களில், பரதவர் பலர், ஆங்காங்கே, கூடிக்குடிசை கட்டி வாழ்ந்திருந்தனர். கடற்கரையில் வளர்ந்து நிற்கும் வெண்ணிற மரங்கள் சிலவற்றை வெட்டிக் கால்களாக வும் கழிகளாகவும் கொண்டு, நாணல் தண்டுகளை வரிசையாகப் பரப்பி, அவற்றின்மீது தருப்பைப் புல்லைக்

"பால கேழ்,வால் உளைப்புரவியொடு வடவளம் தருஉம
நாவாய சூழ்ந்த நளிநீாப் படப்பை"
—பெரும்பாணாற்றுப் படை: 319—321.

"வெள்ளை உபபின் கொள்ளை சாற்றி
நெலலொடு வந்த வல்வாயப் பஃறி
பணைநிலைப் புரவியின் அணைமுதல பிணிக்கும
கழிசூழ்ப் படப்பை"
—பட்டினப்பாலை: 29—32.

"வானம ஊனறிய மதலைபோல
ஏணி சாத்திய ஏற்றரும சென்னி
விண்பொர நிவநத பேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும் துறை."
—பெருமபாணாற்றுப் படை: 346—351.

கற்றை கற்றையாக வைத்துத் தாழைநாரால் கட்டி வேய்ந்த கூரையும், குறிய இறப்பையும் உடையது குடிசை; மீன்பிடிக்கும் பறிகள், குடிசையின் முன்னிடத்தே கிடக்கும்; குடிசைக்கு முன்னே பரந்து கிடக்கும் மணல்வெளியில், ஆங்காங்கே வளர்த்துவிடப் பெற்ற சுரை முதலாம் கொடிகள், கப்பும் கிளையுமாக வெட்டி நாட்டிய புன்னைக் கிளைகள் மீது படர்ந்து, காய்த்துத் தொங்கும். இத்தகைய குடிசைகள் சிலவும் பலவும் கொண்ட பரதவர்சேரி, கடற்கரைப் பகுதியில் ஆங்காங்கே காணப்படும்.*

தமிழ்நாட்டை ஒருமுறை சுற்றிப் பார்ப்பவர் எவரும், தமிழ்நாடு ஈண்டு எடுத்துக் காட்டியனபோலும் சிற்றூர்கள் எண்ணற்றன கொண்டு விளங்கியதைக் காணத் தவறுர். சிற்றூர்ச் செல்வத்தால் சிறப்புற்ற தமிழ்நாடு, பேரூர்களால் பெறலாகும் பெருமையினையும் குறைவறப் பெற்றிருந்தது. அப்பேரூர்ப் பெருமையினை இனிப் பார்ப்போமாக.

---

*"வேழம் நிரைத்து, வெண்கோடு விரைஇத்,
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறிஇறைக் குரம்பைப் பறியுடை முன்றில்,
கொடுங்கால் புன்னைக் கோடுதுமித்து இயற்றிய
பைங்காய் தூங்கும் பாய மணற்பந்தர்."
—பெரும்பாணாற்றுப் படை : 263—267.

# 3. பேரூர்ப் பண்பு

**வா**ழ்க்கை வளர்க்கும் விழுமிய துணையாக வயல் வளத்தைக் கொள்ளும் நாட்டில், நகரங்கள் நிறைய இடம்பெறா; வாழ்வின் தேவைகளைக் குறைவாகக் கொண்ட மக்கள், தங்கள் தேவைகளின் பெரும் பகுதியை உழவுத் தொழில் ஒன்றினாலேயே நிறைவேற்றிக் கொள்ளும் மக்கள், அந்நிலங்களை அடுத்து வாழ்வதையே விரும்புவர்; அதனால் அம்மக்கட் குடியிருப்பு, அந்நிலங்களை அடுத்து அமைந்த சிற்றூர்களிலேயே நிலைத்து விடும்; இந்நிலைக்கு மாறாக, உலக நாகரிக வளர்ச்சிக் கேற்பத், தம் தேவைகளை வளர்த்துக் கொண்ட மக்கள், அத்தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள, பல்வேறு தொழில்துறையாளரின் துணையினைப் பெறவேண்டியவ ராவர்; அதனால், அவர்கள், அப் பல்வேறு தொழிலாள ரும் கூடி வாழும் இடந்தேடி வாழவதை விரும்புவர்; அதைப்போலவே, தம் உழைப்பு ஆங்குத் தேவைப் படுகிறது என அறியும் தொழிலாளர் பலரும், ஆங்குச் சென்று கூடி வாழ விரும்புவர்; அதனால், வாழ்வின் தேவையை வளர்த்துக் கொண்டவர் வாழும் நாடுகளில், மக்கள் கூட்டம் மலிந்த, பல்வேறு தொழில்துறை நிற் போர் பலரும் கூடிவாழும் பேரூர்கள் பெருமளவில் இடம்பெறும்.

பழந்தமிழ்க் காலத்தில், தமிழ் மக்கள், தம் தேவையை வளர்த்துக்கொள்ளாது வாழ்ந்தனர்; நாகரிக வளர்ச்சியால் வாழ்வின் தேவைகள் வளர்ந்த காலத்தும்,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல், அதனின் அதனின் இலன்" எனும் உணர்வுடையராய், வாழ்வின் தேவைகளைக் குறைத்துக் கொள்வதே வாழ்வில் இன்பமாம் எனும் கருத்துடையராய்த், தேவைகளைக் குறைத்தே வாழ்ந்தனர்; அதனால், தமிழ்நாட்டில் பேரூர்கள் பெருகவில்லை; அரசியல் தலைமை, வாணிக வாய்ப்பு முதலாம் இன்றியமையாக் காரணங்கள் கருதி ஒரு சில நகரங்களே தோன்றின; ஆனால், அவ்வாறு தோன்றிய நகரங்கள் ஒரு சிலவே என்றாலும், அவை, நாகரிக வளர்ச்சியின் உச்சியை எட்டிப் பிடித்திருந்தன. நாகரிக வாழ்விற்கு என்ன இருக்க வேண்டுமோ அவை அனைத்தையும் அந்நகரங்கள் பெற்று விளங்கின.

ஒரு பெரிய நகரம், தன்னை நோக்கி வருவார், தன்னை அணுக அடையா முன்பே, அவர் சிறிது தொலைவில் உள்ளபோதே, நகரம் நெருங்கிவிட்டது என்பதை, ஒரு சில குறிப்புக்களால் அறிவிக்கும். இரவாயின், தெருவுகளிலும், மாடங்களிலும் ஏற்றிய எண்ணற்ற விளக்குகளின் ஒளிகளெல்லாம் ஒன்று திரண்டு, உயரத்தே படர்ந்து, சேய்மைக்கண் வருவார்க்குத் தோன்றி, நகரம் நெருங்கிவிட்டது என்பதைப் புலப்படுத்தும்; பகலாயின், அந்நகரில் எழும் பல்வேறு ஒலிகளும் ஒன்று கலந்து பேரொலியாய் அந்நகர் நோக்கிப் போவாரின் காதுகளில், அவர் கண்களில், அந்நகர் தோன்று முன்பே, புகுந்து, நகர் நெருங்கிவிட்டது என்பதைப் புலப்படுத்தும்; பார்க்காத முன்பே தம் பெருமையினைப் புலப்படுத்தும் இங்கிலை பேரூர்களின் பண்பாகும்.

"மதுரை இன்னமும் எத்தனை காவதம் உளது?"

எனக் கேட்ட கோவலனை நோக்கிக், கோசிகன் என்ற காவிரிப்பூம் பட்டினத்து அந்தணன், "கோவல! இதோ தென்றல் வீசுவதைக் காண்; ஆனால், இது பொதிய மலைத் தென்றலன்று; பொதியத் தென்றல் சந்தன மணம் ஒன்றே நாறும்; ஆனால், இதோ வீசும் இத்தென்றல் மதுரைத் தென்றலாகும்; அகில், சந்தனம், மான் மதம் ஆகியவற்றின் சாந்தும், குங்குமம், நாவி இவற்றின் குழம்பும் கலந்த மணக்கலவைச் சேற்றில் திளைத்து, செங்கழுநீர், சண்பகம், மல்லிகை, முல்லை, மாதவி ஆகிய மலர்க்காட்டில் புகுந்து, அட்டிற்சாலையில் எழுப் பும் தாளிப்புப் புகை, அங்காடிகளில் அப்பவாணிகர் அபபம் சுடுங்கால் எழும் புகை, காதலனும் காதலியும் தம் ஆடைக்கும் அழகிய மாலைக்கும் மணம் ஊட்ட எழுப் பும் அகிற்புகை, அந்தணர் செந்தழல் எழுப்ப எழுந்த வேள்விப் புகை ஆகிய பல்வேறு புகைகளின் மணங் களையும் வாரிக்கொண்டு, நாறும் மணம் இன்ன மணம் என எவரும் நுகர்ந்து உணரமாட்டாத, அரண்மனையின் அரிய மணமும் கலந்து, அது வீசுவதை நீ அறிந்திலையோ? ஆகவே, மதுரை சேய்மைக் கண் இல்லை; நனிமிக அண்மையிலேயே உளது" எனக் கூறியதும்* மதுரை

---

* "காழ அகில் சாநதம, கமழ்பூங குங்குமம,
நாவிக்குழம்பு, நலஙகொள தேய்வை,
மானமதச சாந்தம மணஙகமழ் தெய்வத
தேமென் கொழுஞசேறு ஆடி, ஆஙகுத
தாதுசேர் கழுநீர், சணபகக் கோதையொடு,
மாதவி, மலலிகை, மனைவளர் முல்லைப்
போதுவிரி தொடையல பூவணை பொருந்தி,
அட்டிலபுகையும், அகல அஙகாடி
முட்டாக கூவியா யோதகப புகையும்,

நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் அவர்கள், அம்மதுரையைக் கண்ணால் காணலாம் அண்மையில் வாரா முன்பே, அரசன் கோயிலிலும், ஆண்டவன் ஆலயங்களிலும் எழும் காலை முரசின் ஒலியும, அந்தணர் ஓதும நான்மறை ஒலியும், மாதவர் ஓதும் மந்திர ஒலியும், வென்ற வீரர்களின் வெற்றிச் சிறப்புக் குறித்து எடுத்த விழா வொலியும், பகைவரை வென்று கைப்பற்றிக் கொணர்ந்த களிறுகளும், காட்டிலிருந்து புதியவாகப் பிடித்துக் கொணர்ந்த களிறுகளும் முழங்கும் பிளிற்றொலியும், பந்தியில் நின்ற குதிரைகள் கனைத்து எழுப்பும் ஆலிப்பு ஒலியும், வயல் வளம்பாடி வாழ்த்தும் பொருநர், வைகறைப் பொழுதில் எழுப்பும் மருதப் பறை ஒலியும் ஆகிய பல்வேறு ஒலிகளும், கடல் ஒலிபோல் கலந்து ஒலித்து அவரை எதிர் கொண்டதும் தமிழ் நாட்டுப் பேரூர்ப் பெருமையினைப் பறை சாற்றிப் புகழ்தல் உணர்க.†

---

மைந்தரும மகளிரும மாடத்து எடுத்த
அகதீப் புகையும், ஆகுதிப் புகையும்,
பல்வேறு பூம்புகை அளைஇ, வெல்போர்
விளங்குபூண் மார்பின் பாண்டியன் கோயிலின்
அளந்து உணர்வறியா ஆருயிாப் பிணிககும்
கலவைக் கூட்டம் காண்வரத் தோனறிப,
புலவா செங்நாப் பொருநதிய நிவப்பின்
பொதியிற் றெனறல் போலாது, ஈங்கு
மதுரைத் தென்றல் வந்தது; காணீர்;
நனி சேய்த்து அனறு அவன் திருமலி மூதூர்.''

''காலை முரசக கனைகுரல் ஓதையும்,
நானமறை அந்தணர் நவினற ஓதையும,
மாதவர் ஓதி மலிந்த ஓதையும,

தமிழ்நாடு, காடு மலை கடல் வயல் எனும் நால் வேறு நிலங்களையும் கொண்டிருப்பினும், அந் நாட்டுப் பேரூர்கள், அந்நாட்டு நிலங்கள் அனைத்திலும் இடம் பெறாது, வயல் வளம் வாய்ந்த அந்நாட்டு மருத நிலங்களில் மட்டுமே தோன்றி வளர்ந்துள்ளன. பேரூர்கள், பெருமபாலும், பேராற்றின் பாய்ச்சலால் வளம்பெற்ற நிலத்தில் அப்பேராற்றின் கரைகளிலேயே தோன்றும் என்பது உலகனைத்திற்கும ஒத்த நிகழ்ச்சியாம்; ஆறுகள் நாட்டின் வளம் வளரத் துணை புரிதலோடு, நகரங்களுக்கு நல்ல அரணாகவும் அமைதல் அறிந்த அக்கால மக்கள், பேரூர்களை, அப்பேராற்றங் கரைகளில் அமைத்தனர்; பழம்பெரும் நாகரிகம் மிக்க நாடுகளைக் காண்க.

எகிப்து நாட்டு நாகரிக நகரங்கள் நைல் நதியின் கரையிலேயே தோன்றியுள்ளன; மெசபடோமிய நாகரிகம், டைகிரஸ், யூப்ரடஸ் ஆறுகள் பாயும் பள்ளத் தாக்கிலேயே வளர்ந்தது; மோகஞ்சதாரோ, அரப்பாவில் கண்ட திராவிட நாகரிக நகரங்கள் சிந்து நதிக்கரையிலேயே தோன்றியுள்ளன. இன்றும், உலகம் புகழ் இலண்டன் மாநகரம், தேம்ஸ் நதிக்கரையிலேயே

---

மீளா வென்றி வேந்தன சிறப்பொடு
வாளோர் எடுத்த நாளணி முழவமும்,
போரில கொண்ட பொருகரி முழக்கமும்,
வாரிக் கொணட வயக்கரி முழககமும்
பணைநிலைப்புரவி ஆலும ஓதையும
கிளைநிலைப் பொருநா வைகறைப் பாணியும
கார்க்கடல ஒலியின கலிகெழு கூடல
ஆர்ப்பொலி எதிர் கொள."

—சிலபபதிகாரம. 13: 115 - 133; 140 - 150.

நிற்கிறது. இதைப்போலவே, செந்தமிழ் நாட்டுச் சிறந்த நகரங்களெல்லாம் பேராற்றங்கரைகளிலேயே தோன்றி யுள்ளன. சோணுட்டுத் தலைநகராம் உறையூர் காவிரிக் கரையிலும், சேர நாட்டுத் தலைநகராம் கருவூர் பொருநைக்கரையிலும, பாண்டி நாட்டுத் தலைநகராம் மதுரை வைகைக்கரையிலும தோன்றின. வாணிகம் வளர்க்கும் கருத்தோடு தோன்றிய, சோணுட்டுக் கடற் கரைப் பேரூராம் புகார், ஒரு கடற்கரைப் பட்டினமே என்ருலும், அதுவும், காவிரி கடலோடு கலக்குமிடத்தில், அக் காவிரிக்கரையிலேயே தோன்றிற்று.

பேராற்றங்கரைகளில் தோன்றிய தமிழ் நாட்டுப் பேரூர்களைச் சூழ, அக்கால அரசர்கள், காவற்காடுகளை வளர்த்தனர். நாடும், நகரமும், நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்ற இயற்கை அரண்கள் நான்கையும் பெற்றிருத்தல் வேண்டும் என அறிந்த அவர்கள், அவை நான்கையும் இயல்பாகப் பெறமாட்டா இடங்களில் அமைத்த நகரங்களுக்கு, அவ்வரண்களைத் தம் முயற்சியால் செய்து ஆக்க எண்ணினர்; அவ்வாறு எண்ணிய அவர்கள், அவற்றுள் மலையரண் நம்மால் ஆக்குதல் இயலாது என்பது அறிந்து, அதை ஒழித்து ஏனைய அரண்களை அமைத்தனர்; நகரங்களைச் சூழக் காடுகள் வளர்த்தனர்; காட்டரணை அடுத்து, சூழ்ந்த அகழ்களைத் தோண்டி நீர் அரண் அமைத்தனர். காட்டை அழித்து, அகழியைத் தூர்த்துப் பாயும் பகைவர் படையைப் பாழ்செய்யும் தம படைவீரர் நின்று பணி புரியுமாறு, மதிலரணுக்கும் அகழிக்கும் இடையே பெரு நிலப் பரப்பினை வைத்தனர்; அது அந்நகரின் செல்வ வாழ்விற்கோ, காவற் சிறப்பிற்கோ துணைபுரியமாட்டா

ராய மக்களின் வாழிடமாக விளங்கிற்று. அதைப் புற நகர் எனப் பேரிட்டு அழைத்தனர். புறநகரை அடுத்து பெரிய மதில் எழுப்பினர்; மதிலின் அகத்தே, அரசனும், அமைச்சர் முதலாம் அரசியல் உறுப்பினரும் வாழ்ந்தனர்.

ஆற்றைக் கடந்தால் காவற்காடு, அதைக் கடந்தால் அகழி, அகழியைக் கடந்தால் புறநகர், புறநகரைக் கடந்தால் மதில், மதிலைக் கடந்த வழி அகநகர் எனும் இதுவே பழந்தமிழ் நகரங்களின் அமைப்பு முறையாம் என்பது, கௌந்தி அடிகளோடு மதுரைக்குச் சென்ற கோவலனும் கண்ணகியும் வையையாற்றைப புணையில் கடந்து, ஆற்றின் தென்கரை அடைந்து, காவற்காடு சூழ்ந்த அகழியைக் கடந்து, புறநகர் புகுந்து தங்கினர் எனக் கூறும் சிலப்பதிகாரச் சான்றால் புலனுதல் உணர்க.*

**காவற்காடு :**

காடு, மரம் செடி கொடிகள் மண்டி, ஒன்றோ டொன்று பின்னிக்கிடப்பதால், மக்களும் மாவும் எளிதில் செல்ல இயலாவாறு இடையூறு பயக்கும்; அரசர்களின்

---

* "மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
தேமலா நறுமபொழில் தென்கரை எய்தி,
வானவர் உறையும மதுரை வளம கொளத்
தானனி பெரிதும தகவுடைத்து என்றுஙகு
அடுமிளை உடுத்த அகழிசூழ போகி

போா உழந்தெடுதத ஆர் எயில் நெடுஙகொடி
வாரல என்பனபோல் மறிததுக கைகாட்டப்,
.........................................
புறஞ்சிறை மூதூர் புககனர் புரிநது."
—சிலபபதிகாரம் : 13 . 179—196

நாற்படை, அதை ஊடறுத்துக்கொண்டு போதல் அறவே இயலாது; அதனால், அரசர்கள், காட்டை ஓர் இயற்கை அரணாகக் கொண்டிருந்தனர்; நாடு வளர வளரக் காடுகள் அழிவுற்றன; இயற்கை அரணாய காடுகள் அழியக் கண்ட அரசர்கள், தம் அரணைச் சூழச் செயற்கைக் காடுகளை வளர்த்தனர். அதனால், ஒரு நாட்டின்மீது படையெடுத்து வரும் பகையரசர் அந் நாட்டு அரணை அடைந்து முற்றுவதற்கு முன்னர், அக் காவற்காட்டை அழிக்க அரும்பாடு பட்டனர்.

கருவூர்க் கோட்டையை முற்றியிருந்த குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், அக்கோட்டையைச் சூழ இருந்த காவற்காட்டை அழிக்கத் தொடங்கினான்; காவற்காட்டு மரங்களை வெட்டி வீழ்த்தும் ஒலிகேட்டும், கருவூர் மன்னன் அரணைவிட்டு வெளியேறி வந்து, சோழர் படையை எதிர்த்தானல்லன். அப்போர் நிலை கண்ட புலவர் ஆலத்தூர்கிழார், கிள்ளிவளவனை அணுகி, "தன் காவற்காடு அழியவும் எதிர்க்கும் எண்ணம் அற்று, அஞ்சி அடங்கியிருப்பானோடு மேலும் போரிடல் ஆண்மையாகாது; அது பேரரசர்க்குப் பெரிதும் நாணுத்தரும்" எனக் கூறினார். அவர் கூற்று அடங்கிய புறநானூற்றுப் பாடல், காவற்காட்டின் இன்றியமையாமையினை உணர்த்துவதறிக.* காவற்

---

* "காவுதொறும்
கடிமரம் தடியும் ஓசை தனனூர்
நெடுமதில வரைபபின கடிமனை இயமப
ஆங்கினிது இருந்த வேந்தனோடு ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தக வுடைத்தே."
—புறநானூறு: 36

காடு, மிளை, இளை என்ற பெயர்களாலும் வழங்கப் பெறும்.

**அகழ் :**

காட்டை அழித்துப் புகுவது படைக்கு இயலும்; ஆனால் பெரிய நீர்நிலைகளைக் கடந்து போதல் அறவே இயலாது. அதனால் அரண்களுள் நீர் அரண் நனி சிறந்தது என்ப. "மணிநீரும், மண்ணும், மலையும் அணி நிழல் காடும் உடையது அரண்" என, நீரால் ஆகும் அரணையே முதற்கண் வைத்துப் பாராட்டினார் வள்ளுவர். நீர் அரண், நீர் அருப்பேராறுகளாலும் கடலாலும் ஆகும்; ஆற்றுநீர் பாய்வதால் உளவாகும் வளத்தோடு, அது அளிக்கும் அரணையும் கருதியே, அக்காலப் பெருநகரங்கள் பெரும்பாலும் ஆற்றங்கரைகளில் தோன்றின. ஆனால், ஆறோ கடலோ இல்லாத இடத்தில், நகரைச் சூழ ஆழமான பெரு நீர்நிலைகளை எடுத்தனர். அப் பெரு நீர்நிலைகளே அகழாம். அது கிடங்கு எனும் பெயராலும் அழைக்கப்பெறும். கிடங்கு அளந்து காணமாட்டா ஆழமும் அகலமும் வாய்ந்தது. மண் உள்ளளவும் தோண்டப்பட்டது. கல்லை அகழ்ந்து காணப்பட்டது எனவும், பெரு நீர்நிலைகளில் வாழும் இயல்புடையவாய முதலைகள் வாழுமளவு ஆழம் உடையது; அலைதோன்றி வீசுவதற் கேற்பக் கடல்போல் பரந்தது எனவும் அதன் ஆழத்தையும் அகலத்தையும், புலவர்கள் அறிந்து பாராட்டி யுள்ளனர்.*

---

'மண் உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கு."

—மதுரைக் காஞ்சி: 351.

'இரைதேர்ந்து இவரும் கொடுந்தாள் முதலையொடு
திரைபடக குழிந்த கலஅகழ் கிடங்கு"

மலைபடுகடாம: 90—91.

அகழ், ஒரு நகரத்திற்கு அரணாகிப் பயன் பட்டதோடு, பிறிதொரு வகையாலும் அதற்குப் பயன் பட்டது. நகரில் பெய்யும் மழைநீரும், நகர மக்கள் தம் மனைகளில் கழித்துவிடும் கழிநீரும் போக்கிடம் அற்று நகரத் தெருக்களிலேயே தேங்கி நகர மக்களுக்குப் பிணிவிளைக்கும் பெருங்கேடாய் ஆகாமல், அந்நீர் சென்று சேரும் இடமாய் அமைந்து, அந்நகரின் நல்வாழ் விற்கும் நற்றுணை புரிந்தது.

"மனைகளில் மகளிர் நீராடிக் கழிக்கும் கலவைநீரும், வேண்டும்போது நிரப்பவும், வேண்டாப்போது போக்கவும் தக்க பொறிகளோடு நகர நடுவண் அமைந்த நீராடு பொய்கையில், இளைஞரும், நங்கையரும் ஆடிக் கழித்த சந்தனம் மணக்கும நீரும, நாடாளும் அரசனின் பிறந்தநாள் விழாப்போலும் விழாநாட் காலத்தில், விழாவிற்கு வந்து சிறப்பிப்பார்மீது வீசும் வாசனை நீரும், அடியார்கள், அந்தணர், முனிவர் போன்ற ஆன்றோர் அடிகளை வழிபட்டுக் கழுவிக்கழித்த நீரும், அறவுள்ளம் வாய்ந்தார் ஆங்காங்கே வைத்து நடாத்தும் அகில் மணம் கமழும் தண்ணீர்ப் பந்தலில் உண்பார் உண்டு கழித்தநீரும், வாசனைப் பொருள்களை வகைசெய்யும் வழியறிந்தோர், அப்பொருள்களை முறைப்படி அரைத்து முடிக்குங்கால் கழிந்த நீரும் ஒன்று கலந்து சுருங்கை வழியே ஓடி, அவ்வகழியை அடையும்; மணநீர் வந்து கலப்பதால், அகழிநீரும் மணம்பெறும்; அதில் வாழும் மீன் இனமும், முதலை இனமும் தம் புலால் நாற்றம் கழிந்து, மணம் நாறும். அம்மட்டோ! பகற் பூக்களாம் தாமரையும் குவளையும் கழுநீரும், இரவுப் பூவாம்

ஆம்பலும் வண்டுகள் வந்து மொய்க்குமாறு மலர்ந்து மணப்பதால், அகழி பன்னிறம் காட்டி, வானவில் போலும் வடிவுடையவாய் வனப்புமிகு காட்சி நல்கும்'' என்ற மணிமேகலைக் காட்சி, அகழியின் மாண்பினைக் காட்டி நிற்றல் காண்க.†

**புறநகர் :**

அகழியைக் கடந்தால் அடைவது புறநகர்; அகழிக்கும், மதிலுக்கும் இடைப்பட்ட புறநகர், நகர மக்களோடு தொடர்பற்றவர் வாழும் இடமாம்; அரண்மதிலையும், அகழியையும், காவற்காட்டையும் காத்து நிற்கும் படை, பாசறை கொண்டிருப்பது, இப் புறநகரிலேயே யாம்.

---

† ''சுருங்கைத தூம்பின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவை நீரும்,
எந்திர வாவியில் இளைஞரும் மகளிரும்
தந்தமில் ஆடிய சாந்துகழி நீரும்,
புவி காவலன்தன் புண்ணிய நன்னாள்
சிவிறியும் கொமபும் சிதறுவிரை நீரும்,
மேலை மாதவர் பாதம் விளக்கும்
சீல உபாசகர் செங்கை நறுநீரும்,
அறம்செய் மாக்கள் அகில் முதல புகைத்து
நிறைநத பந்தல் தசும்புவார் நீரும்,
உறுப்பு முரண் உருமல் கந்தஉத்தியினுல்
செறித்து அறைப்போர்தம் செழுமனை நீரும்,
என்று இந்நீரே எங்கும் பாய்தலின்,
கன்றிய காரமும், இடங்கரும் மீன்களும்
ஒன்றிய புலவுஒழி உடமபினவாகித்
தாமரை குவளை கழுநீர் ஆம்பல
பூ மிசை பரந்த பொறிவண்டு ஆர்ப்ப
இந்திர தனுவென இலஙகுஅகழ் உடுத்து.''

—மணிமேகலை : 28 : 5—22.

பகைவர் படை காவற்காட்டை அழிப்பதையும், அகழி யைத் தூர்ப்பதையும், அந்நகரைச் சூழ வாழும் அந் நாட்டு மக்களை அலைப்பதையும் தடுத்து நிறுத்துதல், அரணகத்து உள்ள படையால் ஆகாது ஆதலின், அப்பணி, புறநகரில் பாடிக்கொண்டிருக்கும் படையாளர் பால் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

காவற்படையின் வாழிடமாய இப் புறநகர், போரில் கைப்பற்றிய பகையரசர்களையும், வேற்றுநாட்டு வேந்தர் களையும் வைத்துப் பேணற்கு வாய்ப்புடைய இடமாக விளங்கிற்று. வேற்றுநாட்டு வேந்தர் அகநகரில் வைக்கப் பெறுவரேல், அந்நாட்டு அரசனின் குடிவளம், கோல்வளம், படைபலம் முதலாயின குறித்த செய்தி களை அறிந்து கொள்வதற்கு இடமாகும் ஆதலாலும், போரில் சிறை பிடிக்கபபட்ட பகைவர், அகழியையும், காவற்காட்டையும், அவற்றைக காத்து நிற்கும் காவற் படையையும் கடந்து போவது இயலாது ஆதலாலும் அவ்வரசர்கள் வாழ்தற்கு அப்புறநகரே ஏற்ற இட மாகக் காணப்பட்டது.*

கண்ணகிக்குக் கோயில் அமைத்த செங்குட்டுவன், தமிழரைப் பழித்துத், தன்னைப் பகைத்துத் தன்னோடு போரிட்டுத் தோற்று, கண்ணகிச் சிலைக்குத் தேவை யான கல்லைச் சுமந்து வந்து சிறைப்பட்டுக் கிடந்த வட நாட்டு ஆரிய மன்னர்களாய கனகவிசயரை, கண்ணகிக்கு விழா எடுப்பதன் முன்னால் சிறை வீடு செய்து, வஞ்சிமா நகரில், அகழியை வேலியாகக்

---

* "வேற்று மன்னரும், உழிஞை வெம்படையும்
போரப்புறம சுற்றிய புறக்குடி"
—மணிமேகலை: 28: 3-4.

கொண்ட புறநகரில், அழகிய பூஞ்சோலைக்கு இடையே அமைந்திருந்த வேளாவிக்கோமாளிகை என்ற விருந்தினர் மாளிகைக் கண், விழா முடியுங்காறும் வைத்து, அவர்க்கு வேண்டுவன அளிக்குமாறு, தன்படைத் தலைவன் வில்லவன் கோதையைப் பணித்தமை உணர்க.†

நகரின் கழிநீர் பாய்ந்து வளம்பெற்ற அப்புற நகர், நெல் விளையும் நன் செய்களையும், மணம் நாறும் மலர்ச் சோலைகளையும், புள் ஒலிக்கும் பொய்கை, ஏரி முதலாம் பெருநீர் நிலைகளையும், வாழை, தென்னை, கமுகு முதலாம் கவின்மிகு தோட்டங்களையும், வேழக் கோல் வேய்ந்த தண்ணீர்ப் பந்தல்களையும் கொண்டு இயற்கை எழில்மிக்கு விளங்கிற்று. நகர வாழ்வின் ஆரவாரத்தை வெறுக்கும் ஆன்றோர்களும், அறவோர்களும், அறிவுடைப் பெரியோர்களும அமைதியின் இருப்பிடமாய் அப்புற நகரைத் தம் வாழிடமாக் கொண்டு வாழ்ந்தனர்; ஆங்கு வாழும் உரிமை வர்க்அகல்லது, வேறு எவர்க்கும் இல்லை. அதனால், அத்தகையார் இருந்து அறிவாராய்ச்சி பண்ணுவதற்கு வாய்ப்பளிக்கும் பள்ளிகளும், பொது மேடைகளும் ஆங்கு நிறுவப் பெற்றன; அம்மட்டோ. அவர்கள் வழிபாடு ஆற்றுதற் பொருட்டு,

---

† "ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்
பேரிசைவஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தணமலர்ப் பூமபொழில
வேளாவிகபோ மாளிகை காட்டி
நன்பெருவேள்வி முடித்தகன பின்னுள
தமபெரு நெடுநகர்ச சார்வதும சொலலி, அம
மன்னவர்க்கு ஏற்பன செயக நீ என
வில்லவன் கோதையை விருபபுடன் ஏவி".
—சிலப்பதிகாரம: 28: 195-202.

ஆலயங்கள் சிலவும் ஆங்கு எழுந்தன. புகார்நகர் விட்டுப் புறப்பட்ட கோவலனும் கண்ணகியும், புகார் நகரத்துப் பெருமதில் வாயிலைக் கடந்து செல்வுழி, ஆங்குக் கோயில் கொண்டருளிய மணிவண்ணனை வலம் வந்து சென்றனர் என்பது அறிக.*

அறவோர்களும், ஆன்றோர்களும் வழிபட்ட அவ்வாலயங்களில் உறையும் இறைவனை, அகநகர் மக்களும் சென்று வழிபட்டு வந்தனர். கண்ணகிக்கு அடைக்கலம் தந்த ஆயர்முதுமகள் மாதரி, மதுரைப் புறநகர்க்குச் சென்று, ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் இயக்கிக்குப் பால்படைத்து வருங்கால், கௌந்தி அடிகளைக் கண்டு கண்ணகியை அடைக்கலம் பெற்றாள்; ஆய்ச்சியர் குரவை முடிவில், வையைக் கரைக்கண் திருமாலை வழிபட, மலரும், மணம்தரு புகையும், சந்தனச் சாந்தும் கொண்டு சென்று வழிபட்டு வருங்கால், கோவலன் கொலைச் செய்தி கேட்டு வந்தாள் என்ற செய்திகளைக் காண்க.†

---

* "நீள் நெடு வாயில் நெடுங்கடை கழிந்து ஆங்கு
அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக் கழிந்து"
—சிலம்பு: 10: 8-10.

† "அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பாண்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்
ஆயர் முதுமகள் மாதிரி."
—சிலம்பு: 15: 115-118.

"ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்

**மதில் :**

காவற்காட்டை அழித்து, அகழியைத் தூர்த்து அவற்றைக் காத்து நின்ற வீரர்களை வென்றுவரும் பகைவர் படையால் பாழுருவண்ணம் நாட்டைக் காக்க வல்ல அரண் உறுப்பு மதில் ஒன்றே. அதனால், அம் மதில் பகைவர் படையால் எளிதில் அழிவுருது நெடிது நாள் நின்று தாங்கவல்ல வன்மை உடையதாதல் வேண்டும் எனக் கருதினர். பகைவர் மதிலை ஏணி யிட்டு ஏறியும், அடியை அகழ்ந்தும், அறவே இடித்தும் உட்புக முற்படுவர்; அதனால் அது ஏணியிட்டு ஏற மாட்டா உயர்வும், அகழ்ந்து கடக்கலாகா அடி அகலமும், எவற்றுலும அழிக்கலாகாத் திண்மையும் உடையதாதல் வேண்டும்; மேலும், பகைவர்படை பல நாள் முற்றி யிருக்க அடங்கியிருத்தல், அகத்தோன் ஆற்றலை அழிக்கு

---

நீடுநீர் வையை நெடுமால அடி ஏத்தத்
தூவித் துறைபடியப் போயினள்."
—சிலம்பு: 18: 2-5.

"புள்ளணி கழனியும் பொழிலும பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீர் ஏரியும்
காய்க்குலைத தெஙகும வாழையும் கமுகும
பேய்த்திரள பந்தரும விளங்கிய இருக்கை,
அறம்புரி மாந்தர் அன்றிச சேராப் புறஞ்சிறைமூதூர்"
—சிலம்பு. 13: 191-196.

"தேவகுலமும், தெற்றியும், பள்ளியும்,
பூமலர்ப் பொழிலும், பொய்கையும் மிடைந்து
நற்றவ முனிவரும் கற்றடங்கினரும்
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளஙகிய எயிற்புறம"
—மணிமேகலை: 26: 72-76.

மாதலின், அந்நாட்டுப் படைவீரர், அகத்திருந்தவாறே, பகைவர் படையைப் பாழ் செய்தல்வேண்டும்; அதற்கு வாய்ப்பளிக்குமாறு, பகைவர் படை காணுது, மதிலின் உச்சிக்கண் இருந்து அம்பேவிப் போர்புரிவதற்கேற்ப, அம்மதில் தலையகலம் உடையதாதலும் வேண்டும்'' என்பனபோலும் அரண் அறிவுகளை அவர்கள் பெற்றிருந்தனர். "உயர்வு, அகலம், திண்மை, அருமை இந்நான்கின் அமைவு அரண் என்று உரைக்கும் நூல்'' என, மதில் இலக்கணம் வகுத்தார் வள்ளுவர்.

அரண் மதில் பற்றிய தமிழர் அறிவு அம்மட்டோடு அடங்கிவிடவில்லை; பகையரசர் பெரும்படை, மதிலைக் கைப்பற்றுவதில் ஒரோ வழி வெற்றி பெறுதலும் உண்டாம் என்பதை உணர்ந்து, அந்நிலை உற்றவிடத்தும், பகைவர்க்குப் பணியாது, அவரைப் பாழ்செய்யவல்ல அரிய திறம் அம்மதிலுக்கு இருத்தல்வேண்டும் என எண்ணினர்; எண்ணிய அவர்கள், அத்திறம் அரிய பொறிகளால் ஆகும் என அறிந்து, அப்பொறிகளைக் கண்டு, மதிலில் பொறுத்திவைத்து வெற்றி கண்டனர்.

தானே வளைந்து அம்பு ஏவும் வில்; குரங்கு வடிவாய் இருந்து சேர்ந்தாரைப்பற்றிக் கடிக்கும் பொறி; கல் உமிழும் கவண்; உருகக்காய்ந்து சேர்ந்தார்மீது சிதறித் துன்புறுத்தும் நெய்; செம்பை உருக்கிப் பகைவர் படைமீது ஊற்றும் உலை; இரும்பை உருகக் காய்ச்சி ஊற்ற வைத்திருக்கும் இரும்பு உலை; கவணிற்கு வேண்டும் கல்லைத்தானே தேடிப்பெற்றிருக்கும் கூடை; தூண்டில்போல் இருந்து, மதிலை அடைவாரைப் பற்றி வலிக்கும் பொறி; மதில் தலையில் சேர்ந்தாரைக் கழுத்தில் மாட்டி இறுக்கி உயிர் போக்கும் தொடக்கு;

ஆண்டலைப் புள்வடிவாய் இருந்து, பகைவரைக் கண்ட வுடனே பறந்து பாய்ந்து அவர் தலையைக் கொத்தி. மூளையைப் பறிக்கும்பொறி; மதில்மீது ஏறினுரை மறித்துத் தள்ளும் இடுப்புக்கவை; கழுக்கோல்; அம்புக் கட்டு; அம்பிருக்கும் அறைகள்; சிற்றம்பு எய்யும் சிறிய சிறிய பொறிகள்; மதில்மீது வைத்த கையைக் குத்தித் துன்புறுத்தும் ஊசிப்பொறி; மீன் கொத்திப் பறவை போல் பாய்ந்து, பகைவர் கண்களைப் பறிக்கும் சிச்சிலிப் பொறி; பகைவர் உடலைக் குத்திக்கிழிக்கும் பன்றி போலும் பொறி; பகைவர் தலையைத் தாக்கி உயிர் போக்கும் தடிப்பொறி; கோல்; குந்தம்; வேல்: தமிழ் நாட்டுப் பேரூர்களைச் சூழ்ந்திருந்த மதிலில், தமிழரசர் அமைத்து வைத்த அரிய பொறி படைகளுள் சில வை.*

ம் :

அகத்தோர் புறம் செல்லவும், புறத்தோர் அகம் செல்லவும் வழிசெய்வது வாயில். வாணிகம்

"மிளையும், கிடங்கும், வளைவில் பொறியும்,
கருவிரல் ஊகமும், கல்உமிழ் கவணும்,
பரிவுறு வெங்நெயும், பாகுஅடு குழிசியும்,
காய்பொன் உலையும், கல்இடு கூடையும்
தூண்டிலும், தொடக்கும், ஆண்டலை யடுப்பும்,
கவையும், கழுவும், புதையும், புழையும்,
ஐயவித் துலாமும், கைபெயர் ஊசியும,
சென்றுஎறி சிரலும், பன்றியும், பணையும்,
எழுவும், சீப்பும், முழுவிறல் கணையமும்,
கோலும், குந்தமும், வேலும், பிறவும்
ஞாயிலும் சிறந்து."

—சிலபபதிகாரம். 15: 207—217.

வரும் பல்வேறு வண்டிகளும், பல நாட்டு மக்களும், அரசர் நாற்படையும் வழங்கும் வழியாதலின், வாயில், அகலமும், உயர்வும் உடையதாக அமைக்கப்பட்டது. போர் யானைகள், தம்மீது ஏற்றிய வெற்றிக் கொடிகள், சிறிதும் தாழாது விரிந்து பறக்க உட்புகுதற்கேற்ற உயர்வுடையதாமாறு, அவ்வாயில் அமைக்கப்பட்டது; மலையைக் குடைந்து இயற்றினாற் போலும் உயர்வடிவும், பெருவெள்ளம் பாயும் பேராற்றுப் படுகைபோலும் அகலமும், புலவர் பலரால் பாடிப் பாராட்டப் பெற்றுள்ளன. "கைலைமால்வரை கண்திறந்து பார்த்தது போன்றது வாயில்; வெள்ளம் இடையறு வையையாறு போல், மாவும் மக்களும் வழங்குதல்அறு வாயில்" என்பன அவர் பாராட்டுக்களுள் சிலவாம்.*

பேரரசின் தலைநகராகவும், பெரிய வாணிக நிலைக் களமாகவும் விளங்கும் நகரங்களுள் பகைநாட்டு ஒற்றர்களும் வீரர்களும், தம் உருவு கரந்து புகுந்து அழிவு வேலைக்கு அடிகோல முயல்வராதலின், நகர் வாயிற்கண், திறம் மிக்க வீரர்களை வைத்துக் காத்தனர்; அக்காவல் வீரர், உட்புகுவார் ஒவ்வொருவரையும், ஒவ்வொரு பொருளையும் ஐயமறத் தெளிந்த பின்னரே உட்புக விடுவர்; வாயிலில், காவல் வீரராக யவனர் எனும் மேலைநாட்டு வீரர்கள் வைக்கப் பெற்றனர் என்றும், அவர்கள், ஐயுற்றவரை உட்புக விடார்

---

* "கடவுள் மால்வரை கண்விடுத்தன்ன
அடையா வாயில்"
—சிறுபாணாற்றுப் படை. 205—206.

"வையை அன்ன வழக்குடை வாயில்.
—மதுரைக் காஞ்சி: 356.

என்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது.*

நகர வாயிலில், காற்சிலம்பு, தழையாடை, பந்து, பாவை முதலாம் மகளிர்க்குரிய ஆடை, அணி, ஆடும் கருவிகளைக் கட்டித் தொங்க விடுவர்; அவை, அந் நகரை முற்றி அழிக்கக் கருதும் பகையரசர்களுக்கு, "அரசர்காள்! அமர்புரிந்து, இவ்வரணைக் கைப்பற்று தல் உங்களால் இயலாது; ஆகவே, அவ்வெண்ணத் தைக் கைவிட்டு அகலுங்கள்; பொருவதே உங்கள் கருத்தாயின், போரில் நீங்கள் தோற்பது உறுதி; தோற்ற உங்கள் வீரக்கழலைக் களைந்து, காற்சிலம்பை அணிவிப்போம்; மார்புக் கவசத்தை மாற்றித் தழை யாடை சூட்டுவோம்; உம் கையில் வாளையும், வேலை யும் அகற்றி, 'ஆடி மகிழுங்கள்' எனப் பந்தும் பாவையும் தந்து உம்மை மகளிராக்கி மானம் இழக்கச் செய்வோம்" என அறிவித்து, அரணகத்து வாழ் வாரின் ஆண்மையைக் காட்டி நிற்கும்.†

நகர், எண்காவத நீள இடையளவு உடையதாக அகன்றிருந்தமையால், அந்நகர் மக்கள் அனைவரும் ஒரே வாயிலில் புகுவதும் கழிவதும் இயலாது ஆதலாலும்,

---

* "கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்ககு அயிராது புக்கு."
—சிலப்பதிகாரம்: 14: 66—67.

† "வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில."
—திருமுருகாற்றுப் படை: 68—69.

"செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின அம்புடை வாயில்."
—பதிற்றுப் பத்து: 53:6—7.

நகரின் மறுகோடியில் வாழ்பவர், நகரின்புறம் போக விரும்புந்தோறும், எண்காவதம் கடக்க வேண்டுமாதலாலும் நகரின் நாற்புறத்திலும் வாயில் அமைத்திருந்தனர். ஆனால், அவ்வாறு அமைத்த வாயில்கள் நான்கும், உயர்வும் அகலமும் ஒன்றேபோல் உடையவல்ல. ஒரோவழி, பகைவர் படை திடுமென வந்து நகரைத் தாக்குவதும் உண்டாம். அக்காலத்தில், பகைவர் படை பாய்ந்து வருதற்கு முன்னரே, வாயில்கள் அடைக்கப்படுதல் வேண்டும்; வாயில்கள் நான்கும் ஒன்றேபோல் பெரியவாயின், அவற்றை விரைந்து அடைத்தல் இயலாது. ஆதலின், வேந்தர்களின் நாற்படையும், வணிகப் பொதி ஏற்றிய வண்டிகளும் வந்து புகும்வாயில் ஒன்றே பெருவாயிலாம். ஏனைய அத்துணைப் பெரியன அல்ல; மக்கள் மட்டுமே வழங்குதற்கேற்ற சிறுமையுடையவாம். அவை வாயில் எனப்படா; நூழை எனும் பெயரால் அழைக்கப் பெறும்.*

வாயில்கள் எக்காலத்தும் திறந்தே கிடப்பது இல்லை. போர்க் காலங்களில், பகைவர் உட்புகாவாறு, அவை அடைக்கப்பெறும். அடைத்து நிற்கும் வாயிற் கதவுகளை உடைத்து உட்புகப் பகையரசர் முயல்வர். அதனால், அக்கதவுகள், அவர் யானைப் படை தாக்கினும் அழிவுறாத் திண்மை உடையவாக ஆக்கப் பெற்றன. பலகைகள் ஒன்றோடொன்று நன்கு பொருத்தப் பெற்றன. தாள்கள் தனியே செய்து பொறுத்தப் பெறாமல், கதவுகள் அமைக்கும்போது, அக்கதவு

* "நோக்கும் குறும்பின் நூழையும் வாயிலும்."
—புறப்பொருள் வெண்பாமாலை: கொளு: 7.

களோடு கடைந்து அமைக்கப் பெற்றன*; காற்றாலும் மழையாலும் கெட்டுப் போகாவாறு நாள்தோறும் நெய் பூசப் பெற்றன. அதனால், அது, தன் உள்ள நிறம் இழந்து கருநிறம் பெறறது.‡ அரசர்களின் கலையார்வ மிகுதியால் அக்கதவுகளில், அன்னம், மான்போலும் அழகிய திருவுருவங்கள் செதுக்கப் பெறுவதும் உண்டு.

கதவுகளில், கலையார்வம் கருதிய ஓவியங்கள் ஒரு பால் அழகு செய்ய, அக்கதவுகள், அந்நாட்டு அரசர்க் குரிய அடையாளச் சின்னங்களையும், அவர் வெற்றிப் புகழ் பாராட்டும் சின்னங்களையும் பெற்றுப் பெருமை காட்டி நின்றன. சேர அரசர்க்குரிய தொண்டி நகரத்து வாயிற் கதவில், அச்சேரர் பகைவன் மூவன் என்பா னுடைய பற்களும், மத்தி என்பானுக்குரிய வெண்மணி வாயில் எனும் சோணாட்டு நகரத்தின் வாயிற் கதவில், அவன் பகைவன் எழினி என்பானின் பற்களும் பறித் துப் பொறுத்தி வைக்கப் பெற்றிருந்தன.†

---

* "தாளொடு குயின்ற தகைசால் சிறப்பின்
நீள்நெடும் வாயில் நெடுங்கடை,"
—சிலப்பதிகாரம்: 10: 7—8.

"தாழொடு குயின்ற போர்அமை புணர்ப்பு"
—நெடுநல் வாடை: 84.

‡ "நெய்படக் கரிந்த திண்போர்க் கதவு."
—மதுரைக் காஞ்சி: 354.

† "புலிப்பொறிப் போர்க்கதவு" —பட்டினபபாலை: 40

"மூவன்
முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவின்
கானலம் தொண்டி." —நற்றிணை: 18: 2-4.

"கல்லா எழினி பல எறிந்து அழுத்திய
வன்கட் கதவின் வெண்மணிவாயில."
—அகநானூறு: 211: 13-14.

## இடை நகர்:

வாயிலைக் கடந்து நகருள் புகுந்ததும் முதற்கண் வருவது இடைநகர். நாற்புறமும் மதிற் சூழ, நடுவே இருக்கும் நகர், ஒரே நகராய். இடை நின்று வேறுபடுத்தும் வேலிகள் எதுவும இன்றித் தோன்றினும், சென்னை மாநகரம், அடையாறு, அமைந்தகரை என்பன போலும் பல உட் பிரிவுகளைக் கொண்டிருத்தல்போல், அது, இடைநகர், அங்காடி, அகநகர் எனும் முப்பெரும் பிரிவுடையதாக அமைந்திருந்தது. மதிலுக்கும் அங்காடிக்கும் இடைபபட்ட பகுதி இடை நகராம்; இடைநகர்க்கும் அகநகர்க்கும் இடைப்பட்ட பகுதியில் அங்காடி அமைந்திருந்தது. நகரின் நடுவே, அங்காடிசூழ இருந்தது அகநகர்.

இடைநகர், உடல் உழைத்து உயிர் ஓம்பும் தொழில் மேற்கொண்ட வறியோர்களின் வாழிடமாகவும், உயர்ந்தோரால் ஒழுக்கக் குறைபாடுடையவர் என ஒதுக்கப் பட்டோரின் வாழிடமாகவும் அது வகுக்கப்பட்டது. இடைநகரின் முதல்வீதி வாயில் காவலரின் வாழிடமாம்; வாயில்காப்போர், அவ்வாயிலை அடுத்து வாழ்விடம் அமைத்துக் கொண்டது ஆற்றவும் பொருத்தமே; அது மதிலை ஒட்டி ஞற்போல் அமைந்திருந்தது. அதை அடுத்து இருந்தது பரத்தையர் பெருந் தெருவு. பரத்தையர், தம்மை விரும்பித் தம் சேரி வந்து வாழும் செழுங்குடிச் செல்வரோடு, வாயிலைக் கடந்து சென்று, புறநகரில் பொழில் விளையாடியும், புனல் விளையாடியும் மகிழ்தற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தம் வாழிடத்தை வகுத்துக் கொண்டனர் போலும்.

பரத்தையர் வீதிகளை அடுத்து, மீன், உப்பு, கள்,

அப்பம், பிட்டு, வெற்றிலை போன்ற, வறியோர்கள் விரும்பி வாங்கும், விலை மலிந்த பொருள்களில் வாணிகம் புரிவார் வாழ்ந்தனர். அவர் வாழிடத்தை அடுத்து, நகர மக்களின் நால்வேறு விருப்பங்களும் நிறைவேறப் பணி புரியும் பல்வேறு தொழிலாளர்கள் வாழ்ந்தனர். வாழும் மனைகளை வகுத்துத் தரும் சிற்பி, தச்சர், கொல்லர்; கலங்கள் வனைந்து தரும் செம்பு கொட்டி, வெண்கலக் கன்னுர், குயவர்; அழகிய அணிபல ஆக்கித்தரும் பொற்கொல்லர் ஆகியோர் ஆங்கு வாழ்ந்தனர்; அவர்களை அடுத்துப், பட்டாலும், மயிராலும், பருத்தி நூலாலும் ஆடைகள் ஆக்கி அளிக்கும் நெசவாளர் வாழ்ந்தனர்; ஆடை நெய்யும் காருகர் வாழிடத்தை அடுத்து, மாலை கட்டிகளும், காலம் அறிந்து கூறும் காலக் கணிகளும், வாழ்ந்தனர்; பண் இசைத்து மகிழ்விக்கும் பண்புமிகு தொழிலோடு, பரத்தையர்க்கு அவர் விரும்பும் இளைஞர்களையும், செழுங்குடிச் செல்வர்க்கு அவர் விரும்பும் சேரிப் பரத்தையரையும் தேரேற்றிக் கொணர்ந்து துணைபுரியும் தொழில் மேற்கொண்ட பாணர் வாழ்வதும் அவ்விடைநகரே, பாணர் வாழிடத்திற்கு அப்பால், அங்காடியை அடுத்து, சங்கு அறுத்தல், முத்துக் கோத்தல், பவளத்திற்குத் தொளையிடுதல் முதலான, வாணிக வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிவோர் வாழ்ந்தனர்.* மதுரைமாநகர், வஞ்சிமாநகர், அமைப்

---

* "கொடிமிடை வாயிலகுறுகினள் புக்குக
கடைகாப்பு அமைந்த காவலாளர்
மிடைகொண்டு இயங்கும் வியன்மலி மறுகும;
பனமீன விலைஞர், வெள்ளுப்புப் பகருநர்,
கள் நொடை யாட்டியா, காழியா, கூவியர்,

புக் குறித்துச் சிலம்பும், மேகலையும் கூறுவன இதற்குச் சான்று காட்டி நிற்கும்.

**அங்காடி:**

அங்காடி, இடைநகர் மக்களும், அகநகர்ச் செல்வரும் ஒருங்கே வந்து வாணிகம் புரிதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அவ்விரு நகர்க்கும் இடைப்பட்ட இடத்தில் அமைந்திருந்தது. ஆங்குக், காலை முதல் மாலைவரை தொழில் புரியும் அ ங் கா டி க ள் ஒருபாலும், மாலை தொடங்கி விடியும் வரை தொழில் புரியும் அங்காடிகள் ஒருபாலும் விளங்கின. முன்னது நாளங்காடி எனவும், பின்னது அல்லங்காடி எனவும் அழைக்கப்பெறும். நாளங்காடியில், வாங்கவும் விற்கவும் வந்து கூடும் மக்கள், வெய்யில் வெப்பத்தால் வருந்தாவாறு, நிழல் தரும் மரங்களை நிறைய வளர்த்திருந்தனர். வரிசையாக வளர்ந்திருந்த அம்மரத்தடிகளில், கடைகள் ஒழுங்

---

மைந்நிண விலைஞர், பாசவர், வாசவர்,
என்னுநர் மறுகும்; இருங்கோ வேட்களும்,
செம்பு செயஞ்ஞரும, கஞ்சகாரரும்,
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்,
மரங்கொல் தச்சரும், மண்ணீட்டாளரும்,
வரந்தர எழுதிய ஓவிய மாக்களும்,
தோலின்வன்னரும், துன்ன வினைஞரும்,
மாலைக் காரரும், காலக் கணிதரும்,
நலந்தரு பண்ணும திறனும் வாய்ப்ப
நிலம், கலம், கண்டம் நிகழக் காட்டும்
பாணர் என்றிவர் பல்வகை மறுகும்;
விலங்கு அரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோடு
இலங்கு மணி வினைஞர் இரீஇய மறுகும்".

—மணிமேகலை: 28: 28-45.

காகக் கட்டப்பட்டிருந்தன. வாங்கவும, விற்கவும் வந்து கூடும் மக்கள் எழுப்பும் பேரொலி, எக்காலத்தும் ஓய்வ தில்லை.* மேகம் நீர் குடித்துப் போவதால் குறைவதோ, மழை நீர் வந்து பாய்வதால் நிறைவதோ இல்லாமல், என்றும் ஒரே அளவினதாகும் கடல்போல், வாங்குவார் வாரிக்கொண்டு போவதால் வளம் குறைவதோ, விற் பார் கொண்டுவந்து குவித்தலால் வளம் மிகுவதோ ஆகாமல், என்றும், ஒரே வளம் உடையதாக விளங் கும் அந்நாளங்காடியில் எழும் பேரொலி, பேரூர் விழாவில் எழும் பேரொலி போலாம்.† கடைகளுக்கு முன்னால் விடப்படும் திரைச்சீலைகள், பகற்காலத்தில் இரு கால்களால் தூக்கிவிடப்பெற்று, கடையின் முன் அமைந்த பந்தலாகியும், இரவுக்காலத்தில், கால்கள் நீக்கப்பெற்றுக் கீழே விடப்பெற்றுக் கடைகளை

* "இருபாற் பகுதியின் இடைநிலமாகிய
கடைகால் யாத்த மிடைமரச சோலைக்
கொடுப்போர் ஓதையும, கொள்வோர் ஓதையும
நடுக்கின்றி நிலைகிய நாளஙகாடி."
—சிலப்பதிகாரம்: 5: 60-63

† "மழைகொளக் குறையாது, புனல புக மிகாது
கரை பொருது இரங்கும் முந்நீர் போலக
கொளக கொளக குறையாது. தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின் நாடு ஆர்த்தனறே
மாடம பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாளங்காடி நனந்தலைக் கம்பலை."
—மதுரைக்காஞ்சி: 424-430.

அடைத்துக் கிடக்கும் கதவாகியும் பயன் தந்தன.*

நாகரிகம் வளர வளர, நாட்டில் பொருள்களின் வகையும் பலவாம்; நாகரிக நாட்டில் வாழும் செல்வர்களின் மனைகளில், இது இதற்குப் பயனுகும் என எளிதில் அறிந்துகொள்ள மாட்டாத எண்ணற்ற பொருள்கள் அழகின் பெயரால், ஆடம்பரத்தின் பெயரால் குவிந்து கிடக்கும். தமிழகத்துக் கடை வீதிகளிலும் அத்தகைய பொருள்கள் குவிந்துகிடந்தன. இன்னது இன்னதற்காம் என வகை செய்து காண மாடடாத அளவில் அவை ஆங்கு மண்டிக் கிடந்தன. தாமே சென்று, பொருள்களின் வகைகளைக் கண்டு வாங்கி வருதல் வேண்டும் எனும் ஆர்வம் அரசர்கள் உள்ளத்திலும் எழும் அளவு, அக்கால நாளங்காடியின் வளம் விரிந்து கிடந்தது. குதிரை வண்டி, கூடாரவண்டி முதலாம் வண்டி வகைகள்; கொடிஞ்சி முதலாம் தேர் உறுப்புக்கள்; கவசம், கையுறை, அங்குசம் முதலாம் போர்க் கருவிகள்; அரியாயோகம் முதலாம் மருந்து வகைகள்; வாசவுண்டை, வெண்கவரி, பன்றி முதலாம் உருவம் வரைந்த ஓவியப் படங்கள்; குத்துக்கோல், செம்பாலும், வெண்கலத்தாலும், வேறு புதுப் புதுப் பொருளாலும் பண்ணப்பட்டன; மாலை வகைகள்; வாளால் அறுத்து வனையப்பட்டன, தந்தத்தைக் கடைந்து செய்தன; புகை வகைகள, சாந்து வகைகள், பூ

* "காழ்சாய்த்து
நொடைநவில் நெடுங்கடை அடைத்து."
—மதுரைக்காஞ்சி : 621—22

வகைகள்; அங்காடிப் பொருள்களுள் சில இவை.

நாளங்காடி வணிகர், நாள்தோறும், மாலைக் காலத்தில், மாலைப்போதில் மலரும் பித்திகை மலர்வதால் மாலை வந்துற்றமை அறிந்து, இரும்பால் ஆன விளக்கில் நெய்யிட்டு நனைந்த திரியைக் கொளுத்தி விளக்கேற்றி வைத்து, மாலைப்பொழுதை மகிழ்ந்து வரவேற்று விழாக் கொண்டாடுவர்.†

ஊர்தி உடை முதலாம் மக்கள் தேவைகளையும், கவசம், கணை முதலாம் அரசர் தேவைகளையும் நாளங்காடியில் பெறலாம் என்றால், அல்லங்காடியில், அவர்கள் உணவிற்கு வேண்டும் காய், கனி,

---

* "வையமும், பாண்டிலும, மணித்தோக் கொடுஞ்சியும,
மெய்புகு கவசமும், வீண்மணித் தோட்டியும்
அதள்புனை அரணமும் அரியாயோகமும்,
வளைதரு குழியமும, வாலவெண் கவரியும்,
ஏனப்படமும், கிடுகினபடமும்,
கானப்படமும், காழ் ஊன்றுகடிகையும்,
செப்பிற் செய்நவும், கஞ்சத்தொழிலவும்
வம்பின் முடிநவும் மாலையிற் புனைநவும்,
வேதினத்துப்பவும், கோடுகடைத் தொழிலவும்
புகையவும், சாந்தவும், பூவிற் புனைநவும்,
வகை தெரிவு அறியா வளம்தலை மயங்கிய
அரசுவிழை திருவின் அங்காடி."

—சிலப்பதிகாரம: 14; 168—179

† "பைங்காற் பித்திகத்து
அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுது அறிந்து,
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லும் மலரும தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவணம் மாலை அயர"

—நெடுநல்வாடை: 40—44

கிழங்குகளைப் பெறலாம். சுவைமிக்க சாறும், இனிய சுவையும் நிறைந்த பலாக்கனி, பல்வேறு வகைப்பட்ட மாங்கனிகள், வாழை, வழுதுணம் முதலாம் காய் வகைகள், நிறைய நீர் பெற்று, தளிர்விட்டுத் தழைத்த கீரை வகைகள், கற்கண்டு, இறைச்சி கலந்து ஆக்கிய அரிசிச் சோறும் அவித்தெடுத்த வள்ளிக்கிழங்கும், ஆகிய இவை அல்லங்காடியின் வாணிகப் பொருள்களாம். பல்வேறு பண்டங்களைக் கலத்திலிருந்து கரைக்கு இறக்கி, கரையிலிருந்து கலத்தில் ஏற்றும் கடற்கரைப் பட்டினங்களில் எழும் பேரொலிபோல், அல்லங்காடியில் எக்காலத்தும் ஒலி மிகும்.† அல்லங் காடியின் வாணிகப் பொருள்களைப் பாளை இரவில் கொண்டு வந்து குவிப்பாரும், வாங்கிக்கொண்டு போவாரும் எழுப்பும் பேரொலி, பகலெல்லாம் இரை தேடி உண்ட பறவை இனம், மாலை வந்ததும் தம் பார்ப்புக்களை நினைந்து பறந்து வந்து அடையுங்கால்

---

† "சேறும் நாற்றமும் பலவின் சுளையும,
வேறுபடக் கவினிய தேமாங்கனியும்,
பல்வேறு உருவிற்காயும், பழனும்,
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி
மென்பிணி அவிழ்ந்த குறுமுறி அடகும்,
அமிர்து இயன்றனன தீஞ்சேற்றுக் கடிகையும்,
புகழ்படப் பண்ணிய பேருன் சோறும்,
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்."
"பல்வேறு பண்டம இழிதரும் பட்டினத்து
நல்லென இமிழ்இசை மானக் கல்லென"

—மதுரைக்காஞ்சி 527—583:

எழுப்பும் பேரொலி போலாம்.*

அல்லங்காடியில், வாணிகம் இரவுக் காலத்தில் நிகழுமாதலின், ஆங்குக் கடைதோறும் விளக்கேற்றி வைக்கப்பெறும்; அவ்விளக்குகள் அளிக்கும் ஒளியால் இரவு பகலாகும்; நுண்மணலில் வீழ்ந்த வெண்சிறு கடுகையும் விளக்கமாகத் தோற்றுவிக்கவல்ல பேரொளி அங்காடி எங்கும் பரந்து தோன்றும். ‡

**அகநகர் :**

அரசரும், அமைச்சர் முதலாம் அவன் ஆட்சிக் குழுவினரும், நாற்படையும், நாற்படைத் தலைவரும், மறையோரும், மண்வளம் காணும் பெருங்குடி உழவரும், வளங்கொழிக்கும் வணிகப் பெருமக்களும் வாழும்

---

* "உருகெழு பானாள் வருவன பெயர்தலின்
பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்றே
அல்லங்காடி அழிதரு கம்பலை."

—மதுரைககாஞ்சி : 542—544

† "வண்ணமும், சாநதும், மலரும், சுண்ணமும்
பணணியப் பகுதியும பகர்வோர் விளக்கமும்,
செய்வினைக் கம்மியா கைவினை விளக்கமும்,
காழியர் மோதகதது ஊழுறு விளககமும்,
கூவியர் கார்அகல் குடககால விளக்கமும்,
நொடைநவில் மகடூஉக் கடைகெழு விளக்கமும்,
இடையிடை மீன்விலை பகர்வோர் விளக்கமும,....
கழிபெரும் பண்டம் காவலர் விளக்கமும்
எணணு வரமபறியா இயைந்து ஒருங்கு ஈண்டி
இடிக்கலப் பன்ன ஈரயிர் மருங்கில்
கடிப்பகை காணும காட்சிய தாகிய."

—சிலப்பதிகாரம்

மனைகளும், மன்றமும், மலர்ச்சோலையும், பொதியிலும், பொய்கையும், செய்குன்றும் ஒருங்கே கொண்ட சிறந்த இடம் அகநகர்.

நாளங்காடியை அடுத்துப் பெருவாணிக நிலையங்கள் அமைந்திருந்தன; கண் ஒளி நுழையாவாறு நுண்ணிதாய் நெய்து, வகை வகையான வண்ணங்கள் ஊட்டப்பெற்ற அறுவை வாணிகர் வீதி, சாதரூபம, கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என நால்வேறு வகைப்பட்ட பொன் வாணிகர்வீதி; வயிரம்,வயிடூரியம, மரகதம், மாணிக்கம், முத்து, பளிங்கு, பவளம், புருடராகம், கோமேதகம் என்ற நவமணிவணிகரின் நிதி மிக்க வீதி; இவையே வாணிக வீதிகள்; இவற்றைக் கடந்தால் வருவது மறையோர் வீதி; அதை அடுத்து அமைச்சர் வீதி; அமைச்சர் வீதிக்கு அப்பால், படைத்தலைவர் முதலாம் அரசியல் பணி மேற்கொண்டோர் வீதிகள்; இவை அனைத்தையும் கடந்து சென்ருல், நகரின் இடையே இருப்பது அரசன் உறையும் அரண்மனை; அரண்மனையைச் சூழ்ந்து, அரசன், அவன் உரிமைச் சுற்றத்தோடு எளிதில் அடையலாகும் அணிமைக்கண், செய்குன்று, தண்ணீர்ப்பொய்கை, நன்மலர்ச்சோலை போலும் இன்ப நுகர்விற்காம் இனிய இடங்கள் இடம் பெற்றிருந்தன. களிற்றின்பாகரும், குதிரைச் சேவகரும், தம் ஊர்திகளை ஓடவிட்டுப் பழக்கும் பெருவெளிகள் இருப்பதும் ஆண்டே; நகரின் இடையிடையே, மூன்று தெருக்கள் கூடும் சந்தியிலும், நான்கு தெருக்கள் கூடும் சதுக்கத்திலும் மன்றங்களும், பொதியில்களும் கிடந்து மாண்புறும். அறச்சாலையும், அழகிய பொன் னம்பலமும், தவப்பள்ளியும் அக நகர்க்கு அணிசெய்து

கிடக்கும்.*

**தெருவின் அமைப்பு:**

அகநகர்த் தெருவுகள் அரசியல் குறித்தும், வாணிகம் கருதியும் வருவாரும், அரசன் நாற்படையும், வாணிகப் பொருளேற்றிய வண்டிகளும் தடையின்றி வழங்குதற்கு ஏற்ப, மிக மிக விரிந்துகிடந்தன. இருபாலும், வானளாவ உயர்ந்த மாடங்கள் விளங்க, அகன்று தோன்றிய அவ் வீதிகள், உயர்ந்த இரு கரைகளுக்கிடையே பரந்து ஓடும் பேராறு போல் காட்சி அளித்தன.† அந்நகர் அறச்சாலைகளில்

---

*"கண்நுழை கலலா நுண்நூலகைவினை
வணண அறுவையர் வளம்திகழ் மறுகும்,
பொன் உரை காண்போர் நனமனை மறுகும்,
பன்மணி பகர்வோர் மன்னிய மறுகும்,
மறையோர் அருந்தொழில குறையா மறுகும்,
அரைசியல் மறுகும, அமைச்சியல் மறுகும்,
எனைப் பெரும் தொழில்செய் ஏனோர் மறுகும்,
மன்றமும, பொதியிலும், சந்தியும், சதுக்கமும்,
புதுககோள் யானையும, பொன்தாாப் புரவியும்
கதிககுற வடிப்போர் கவின்பெறு வீதியும்,
சேணோங்கு அருவி தாழ்ந்த செய் குன்றமும்,
வேணவர் மிடுக்கும விரைமாக்கவும,
விண்ணவர் தஙகள் விசுமபிடம் மறநது
நண்ணுதற்கு ஒத்த நனனீர் இடங்களும்,
சாலையும், கூடமும், தமனியப் பொதியிலும்
கோலம் குயின்ற கொள்கை இடங்களும்
கண்டு மகிழ்வுற்று."

—மணிமேகலை: 28: 52—68.

†"மாடம் ஓங்கிய மல்லல்மூதூர்
ஆறுகிடநதன்ன அகல் நெடுந்தெருவு."

—நெடுநல்வாடை: 29-30.

ஆக்கிய பெருஞ்சோற்றினை வடித்து விடுத்த கஞ்சி, ஆறுபோல் பாய்ந்து அவ்வீதிகளை வழுக்கற்றுப் போகப் பண்ணும்; பின்னர், கஞ்சி பாயக்கண்டு வந்துகூடிய எருதுகள் ஒன்றோடொன்று போரிட்டுக் கலக்கி அவ்விடங்களைச் சேருக்கிச் சிதைக்கும்; சேறுபட்ட அத் தெருவில் ஓயாது ஓடும் தேர்கள், அச்சேற்றினைப் புலர்த்தித் துகள் எழப் பண்ணும்.* ஆனால் எழுந்த புழுதி ஆங்கு நெடிதுநேரம் பறந்து படர்வது இல்லை. தேர்ப்படையைத் தொடர்ந்து, அவ்வீதிவழியே செல்லும் யானைப் படையால் புழுதி அடங்கிவிடும்; யானைகளின் மதநீர், அருவியெனப் பாய்ந்து, பரந்து எழும் புழுதிகளை அடக்கும்†. சோறுவடித்த கஞ்சியால் காலையில் சேறு பட்ட தெருவு, மாலைக்குள் புலர்ந்து, புழுதியாகி, மீண்டும் பண்டேபோல் புழுதி அடங்கிப் போகுமளவு, போக்குவரவு மிக்கிருந்தது அவ்வீதிகளில். இவ்வாறு அரசன் தேர்ப்படை முதலாம் நாற்படையும் நாள்தோறும் ஓயாது ஓடி ஓடி, ஆங்காங்கே ஆழ்ந்த குழிகளை உண்டாக்கி அவ்வீதிகளைப் பாழாக்குவதும் உண்டு§.

---

*"அறம நல்லிய அகன அடடில
சோறு ஆககிய கொழுஙகஞசி,
ஆறுபோலப் பரந்து ஒழுகி,
ஏறுபொரச் சேறு ஆகித்
தேர்ஓடத் துகள் கெழுமி"
—பட்டினப் பாலை: 43–49.

†"அண்ணல் யானை அருவி துகள்அவிப்ப
நீறு அடங்கு தெருவு"
—சிறுபாண்: 200-201,

§"திண்தேர்க்குழித்த குண்டு நெடுந்தெருவு"
—பெரும்பாண். 397.

அகநகர், அரசரும் அவரொத்த செல்வரும் வாழும் இடமாதலின், ஆங்கு வாழ்வார், தமக்கு வேண்டும்' பொருள்களை வாங்கிவர, அகநகரை அடுத்திருக்கும் அங்காடிக்குச் செல்வதும் தம் தகுதிக்கு இழுக்காம் என எண்ணும் செல்வச் செருக்குடையராவர். அதனால், அவர்கள் விரும்பி வாங்கும் வண்ணக்குழம்பு, சுண்ணப் பொடி, சந்தனச் சேறு, மணநிறை மலர், புகைதரு பொருள்கள், மணம்தரு விதை இவற்றை அங்காடிகளில் அமர்ந்து வாணிகம் புரிவார், அவற்றை உடன் கொண்டு சென்று, அகநகர்த் தெருக்களில் விலைகூறித்திரிவர்.*

அரசர் பிறந்த நாள் குறித்தும், அவர் முடிகொண்ட நாள குறித்தும், போரில் அவர் பெற்ற வெற்றிப் புகழ் குறித்தும், கோயில்களில் குடிகொண்டிருக்கும் கடவுளர்த் திருநாள் குறித்தும் அந்நகர்த் தெருக்களில் மக்கள் விழாக் கொண்டாடி மகிழ்வர்; அக்காலை ஆங்கு முழவு ஒலி ஓயாது ஒலிக்கும்.‡

விழாக் காலத்தில் நகர வீதிகள் நன்கு ஒப்பனை செய்யப்படும். நகர மாந்தர், வீதிகளில் தோரணங்களைத் தொங்கவிடுவர்; பூரணகும்பம், பொற் பாலிகைகளைப் பரப்பிப் பாவை விளக்கேற்றி வைப்பர்; காய்த்துக் குலை தொங்கும் கமுகு, வாழை, வஞ்சி முதலாம் மரங்

---

*''வண்ணமும், சுண்ணமும், தண்ணறும் சாந்தமும்,
பூவும், புகையும், மேவிய விரையும்,
பகர்வனர் திரிதரும் நகரவீதி''
—சிலப்பதிகாரம்: 5: 13–15.

‡''முழவு இமிழும் அகல் ஆங்கண்
விழவு நின்ற வியன் மறுகு.''
—மதுரைக்காஞ்சி: 327–328.

களையும், வல்லிக் கொடியையும். செங்கரும்பையும் நாட்டுவர்; வரிசையாக அமைந்த திண்ணைகளில் நிற்கும் பசும்பொன் தூண்களுக்கு இடையே, முத்துச் சரங்களைத் தொங்க விடுவர்; பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்புவர்; கதலிகை, விலோதம் என்ற வகை வகையான துணிக் கொடிகளைக் கொடுங்கையிலும், வாயிலிலும் வரிசையாக வனப்புறக் கட்டுவர். நகர்வாழ் மக்கள் இதை மறப்பினும் நாடாளும் மன்னவன் இதை மறவான்; விழாத் தொடங்குவதன் முன்னர், மக்களுக்கு முரசடித்து அறிவிப்பன்.*

திரிந்து பொருள் விற்கும் வணிகர்களாலும், விழாக் காட்சிகளாலும் சிறந்து தோன்றும் நகரப் பெருந் தெருவுகளில், தொழிலின்றிச் சோம்பித்திரியும் வீணர்கள் அலைவதும் உண்டு. புகார் நகரத்து வீதிகளில், வம்பர்கள், கள்ளுண்டு களித்துக் கூறத்தகாதன கூறித் திரியும் குடிகாரனையும், சிந்தை கலங்கிச் செய்வன அறியாது அலையும் பித்தனையும், ஆடவர்க்

*"தோரணவீதியும், தோம் அறுகோட்டியும்,
பூரண கும்பமும், பொலம்பாலிகைகளும்,
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்,
காய்க்குலைக் கமுகும், வாழையும், வஞ்சியும,
பூக்கொடி வல்லியும, கரும்பும் நடுமின்;
பத்திவேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்;
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்;
கதலிகைக் கொடியும், காழ்ஊன்று விலோதமும்
மதலைமாடமும் வாயிலும் சேர்த்துமின்"
—மணி: 1: 43-53.

குரிய தாடியும், மகளிர்க்குரிய கூந்தலும் கொண்டு-பிறந்த பேடியையும் சூழ்ந்து திரிந்தும், வீதிகளில் வரிசையாக நிற்கும் வீட்டுச் சுவர்களில், வெண்சுதைமீது, வணணம்பல கொண்டு, வானவர் முதலா விலங்கு ஈறுக உள்ள உயிர்களின் வடிவங்களை வனப்புறத் தீட்டிய ஓவியங்களை நின்று கண்டும், தாய் ஒருத்தி, தன் அழகிளம் மகனைப் பொற்றேர்மீது அமைத்த யானைச் சிலைமீது ஏற்றி வைத்து, முருகன் திருவுலா வரும் காட்சி இதோ காண்மின் எனக் களித்துக் கூறக் கேட்டுக் கண்டும் நின்ற காட்சிகளை மணிமேகலை மாண்புறக் கூறுகிறது.*

வேலையற்ற வம்பர்களே யல்லாமல், செல்வக் குடியில் பிறந்தும் ஒழுக்கம் கெட்ட ஒரு சில இளைஞர்களும், அந்நகர வீதிகளில் அலைந்து திரிவர்; அவர்கள் தனியே திரியாது, தம் ஒழுக்கக் கேட்டிற்கு உற்ற துணைவர்களாய பாணன், பரத்தன் போன்ருேர் சூழ்ந்துவர அலைந்து திரிவர். கோவலன் அவ்வாறு திரிந்த இழிசெயலை, ஆசிரியர் இளங்கோவடிகள் எடுத்துக் காட்டி இடித்துக் கூறியுள்ளார்.‡

நற்குடிப் பிறப்பும் நல்லொழுக்க நெறியும் வாய்ந்த நல்ல இளைஞர்கள், மாலைக்காலத்தில், நகரின் நலங்

---

*மணிமேகலை: 3: 86–144.

‡"பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபின் கோவலன் போல
விளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு
மலயமாருதம் திரிதரு மறுகு"

—சிலமபு: 5: 200–203.

காணும் ஆர்வத்தால் அந்நலம் விளங்கும் தெருவுகளில் நடந்து மகிழ்வதும் உண்டு.+

ஒரு பேரூரில் எழும் பல்வேறு ஒலிகளும், அவ்வூர் மனைகளிலும், மன்றங்களிலும், மறுகுகளிலும ஏற்றிய எண்ணற்ற விளக்குகள் அளிக்கும் பேரொளியும் போலவே, ஆங்கு நாட்டிய பல்வகைக் கொடிகளும், அப்பேரூர்ப் பெருமையை, அந்நகர் நோக்கி வருவார்க்கு, அவர் அதை அடையா முன்பே அறிவிக்கும் இயல்பின வாம். நாடாளும் அரசனுக்குரிய கொடி, நகர் வாயிற் கண் நெடிது ஓங்கி நிற்கும்; கோயில் விழாக் குறித்தும், கொற்றவன் விழாக் குறித்தும். ஏற்றிய கொடிகளும், அரசன் பகைவர் அரணைக் கைப்பற்றிய வெற்றிச் சிறப்பு விளங்கவும், அவன், பகைவர் யானைப் படையை அழித்துத் துரத்திய ஆண்மை குறித்தும் ஏற்றிய கொடி களும், இன்ன இடத்தில் இன்ன பொருள் விற்கும் என்பதைச் சேய்மைக்கண் இருப்புழியே அறிவிக்க எடுத்த கொடிகளும், கற்றுத்துறைபோன பெரியோர்கள், தம் கல்விச் செருக்கு விளங்க ஏற்றிய கொடிகளும் நகரின் நால்வேறு பகுதியிலும் நின்று பறக்கும். பல் பொருள் குறித்துப் பல்வேறு வடிவில் பறக்கும் அக் கொடிகள் எங்கும் நிறைந்து, ஞாயிற்றின் ஒளியும் உட் புகாவாறு தடுத்து நிழல் அளிக்கும். ஆற்றின் இரு கரையிலும், வேழக் கரும்பு வெண்பூப் பூத்து நிற்கும் அழகிய காட்சியை நினைப்பூட்டி, மறுகுகளின் இரு மருங்கும்* நின்று அளிக்கும் கொடிக் காட்சி, காண்பார்

---

*"நகர நம்பியர் திரிதரு மறுகு"

—சிலம்பு: 3: 168.

கண்ணிற்குப் பெரு விருந்தாம்.*

வடகிழக்குப் பருவக்காற்று, தென்மேற்குப் பருவக் காற்று என்ற இருவகைக் காற்றும், இரு வேறு பருவங் களில் வீசிப் பயன் அளிக்கும் நல்வாய்ப்புடையது தமிழகம். வடகிழக்குப் பருவக்காற்றை, வாடை, கொண்டல் என்ற பெயராலும், தென்மேற்குப் பருவக் காற்றைக் கோடை, குடகாற்று, தென்றல் என்ற பெயரா லும் தமிழர்கள் அறிந்திருக்கின்றனர். அக்காற்றுகளின் ஓட்ட நிலையை உணர்ந்திருந்த அவர்கள், அவை தடை யின்றி உட்புகுந்து வீசி நகர மக்களுக்கு நலம் பயக்கும் வகையில், நகரங்களை அமைத்திருந்தனர்; அதனால், தமிழ் நாட்டுப் பேரூர்த் தெருக்களில் அக்காற்றுகள், அவை வீசும் காலத்தே புகுந்து வீசிப் பயன் நல்கின.†

---

*"வருபுனல் தந்த வெணமணல கான்யாற்று
உருகெழு கரும்பின் ஒண்பூப்போல...
மேலூன்றிய துகிற்கொடி"
"பல்வேறு உருவின் பதாகை நீழல்
செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பு"
பட்டினப்பாலை: 161-183.

†"மலைய மாருதம திரிதரு மறுகு"
—சிலப்பதிகாரம்: 5: 203.

"குடகாற்று எறிகது கொடிநுடங்கு மறுகு"
—சிலப்பதிகாரம்: 14. 70.

"கொண்டலொடு புகுந்து கோமகன கூடல்
வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கம்."
—சிலப்பதிகாரம்: 14: 110-112.

"கோடையொடு புகுந்து கூடல் ஆண்ட
வேனில் வேந்தன்"
—சிலப்பதிகாரம்: 14: 122-123.

**மன்றமும் பொதியிலும் :**

நகரின் நடுவே, அரசன் வாழும் அரண்மனைக்கு அருகில் பரந்து கிடக்கும் திறந்த வெளிகளில் ஆல் போலும் நிழல் தரு மரங்களையும், வேம்பு போலும் மருந்தாகிப் பயன் தரு மரங்களையும், மா, பலா, விளாம், இலந்தை போலும் கனி தரு மரங்களையும் வளர்த்து, அம்மரத்தடிகளில் மேடைகள் அமைத்து வைப்பர்; அவ்விடங்கள் மன்றம் என அழைக்கப் பெறும். "மன்றமாவது ஊர்க்கு நடுவாய் எல்லாரும் இருக்கும் மரத்தடி" என்றார், நச்சினார்க்கினியர்;* "மன்றம், அரண் இல்லா வீடு" என்றார் சிலப்பதிகார அரும்பத ஆசிரியர்.‡

அம்மன்றங்களில், அரசனைப் பாடிப் பரிசில் பெற்று மீளும் கருத்தோடு, அந்நகர் வந்துபுகும் பாணர், கூத்தர், பொருநர், புலவர் போலும் புதியோர், வழிநடை வருத்தம் ஒழிந்து வாழ்ந்திருப்பர்.§

நகரமக்கள், தொழில் ஒழிந்திருந்த காலத்தில், அம் மன்றங்களில் கூடியிருந்து ஆட்டுக்கிடாய்ச் சண்டை, கோழிச் சண்டை முதலாயின விட்டும், கண்டும் களித்துக் காலம் போக்குவர்.†

---

* "திருமுருகாற்றுப்படை: 226. உரை.

‡ சிலப்பதிகாரம்' 23: 46: உரை.

§ "மன்றில் வதியுநர் சேட்புலம் பரிசிலர்
வெல்போர்ச சேரப் பெருவிறல் உள்ளி
வந்தோர் மனற"

—மலைபடுகடாம். 492-494.

† "மலர்தலை மன்றததுப் பலருடனகுழீஇ...
மேழகத் தகரொடு சிவல விளையாட"

—பட்டினப்பாலை: 69-77.

இளஞ் சிறுவர்கள், மன்றம் அடைந்து, ஆங்கு அம்மரங்கள் தரும் இனிய கனிகளைத் தின்றவாறே வில்லேந்திக் கணை பயிலும் விளையாட்டையும், ஆடரங்கு இழைத்து, நெல்லிக்கனிகளை நல்ல வட்டாகக்கொண்டு ஆடும் பாண்டில் ஆடலையும் விரும்பி மேற்கொள்வர்.*

பரிசில் வேண்டி வந்து வாழும் பாணர் முதலாம் இரவலர், முழவு முதலாம் தம் இசைக்கருவிகளை, மறைத்து மரங்களில் கட்டித் தொங்கவிடுவதும், அக் கருவிகளுக்கு அம்மரங்களை விட்டுப் பிரியாது வாழும் மந்திகளால் கேடு நிகழ்வதும் உண்டு; பல நாடுகளி லிருந்தும் வந்து வாழும் அவர்கள், உள்ளம் திறந்து உரையாடி மகிழ்வதும், ஆங்கு அறவோர் அளிக்கும் அறுசுவை உணவை ஆர உண்டு அகம் மகிழ்வதும் உண்டு.†

---

* "மன்றத்து,
அலந்தலை இரத்தி அலங்குபடு நீழல
கயந்தலைசசிறுஅர் கணைவிளையாடும்"

புறம்: 325.

"பொரியரை வேம்பின் புள்ளி நீழல்
கட்டளையன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட்டாடும்"

—நற்றிணை: 3.

† "மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடின் தெண்கண் கனிசெத்து அடிப்பின்"

—புறம்: 128.

"இரந்தி நீடிய அகன்தலை மனறத்துக்
காப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொடுஞ்சோறு ஆர்ந்த பாணர்"

—புறம்: 34.

மன்றங்களில், மரத்தடிகளில் வந்து வாழும் புதியோரை, வெய்யிலும் மழையும் வருத்துவது கண்ட, அறவுள்ளம் வாய்ந்த அந்நகர்ப் பெருங்குடிச் செல்வரும், அரசரும், ஆங்கு அவர் இடையூறின்றி இனிதுவாழ அம்பலங்கள் பலவற்றை அமைத்தனர்; அம்பலம், பலர்க்கும் உரிய, பலநாட்டு மக்களும் உரிமையோடு வந்து வாழவல்ல இடமாதலின், அது பொது இல் என அழைக்கப்பெற்றது. அப்பெயர் நாளடைவில் பொதியில் என மருவி வழங்கலாயிற்று. நகர் நோக்கி வருவார் தொகை பெருகப் பெருக, நகரில் அருள் உள்ளம் வாய்க்கப் பெற்ருர் வளரவளர, நகர் மன்றங்களில், அம்பலங்களும் பலவாயின; வெள்ளி ஓடும், பொன் ஓடும் வேய்ந்த அம்பலங்களும் எழுந்தன.* "மன்றப் பொதியில் வெள்ளியம்பலம்" என்ற தொடரையும், அதற்கு "மன்றத்தின்கண் பொதியிலாகிய வெள்ளியம் பலம்" என்று உரை கூறும் தொடரையும் காண்க.†

நகர் நோக்கி வரும் புதியோரை வரவேற்று, உணவளித்து ஓம்பி வாழவைக்கும் விருப்பத்தால் எழுந்த ஊர் அம்பலங்களில், நகர்வாழ முதியோர், உணவொழிந்த காலத்தில் ஒன்றுகூடி இருந்து வட்டிழைத்து, விளையாட்டாகச் சூதாடி மகிழ்வர்; சூதாடும் கருவியைப் பலகால் உருட்டி உருட்டி ஆடுவதால், அவ்விடம் குழிவிழுந்து போகும்.‡

---

* "தமனியப்பொதியில்" —மணி: 28: 66.

† "சிலப்பதிகாரம்: பதிகம்: 40: உரை.

‡ "பொதியில்
நரை மூதாளர் நாம இடகுழிந்த
பலவின் நல்லகம்" —புறநானூறு: 52.

புதியோரும் முதியோரும் மகிழ்ந்துறையும் அம் மன்றத்தில், மதியிழந்த மாந்தர்களும் சென்று வாழ்ந் திருப்பர். நாடு வறுமையுற்றோ, நல்லரசு இழந்தோ போக, நகரம் பாழுற்ற காலத்தில், அம்மன்றங்களில், புதியோர் புகார்; முதியோர் வாரார்; அறச்சாலை இராது; உணவளிக்கும் அரவம் எழாது; அதற்கு மாருக, ஒழுக்கநெறி உணராதவரும், பரத்தையர் பின் திரியும் பண்பற்றவரும், உற்ருராலும், பெறரோராலும் ஊரைவிட்டு விரட்டப் பெற்றவரும், வட்டாடுவாரும், சூதாடுவாரும், வம்பர்களும் வந்து வாழத்தொடங்குவர்.‡

அறம் கருதி எழுந்த அம்பலங்களுள் சில, அறத்தை நிலைநிறுத்தும் அவைகளாகவும் மேற்கொள்ளப்பட்டன. அறநூல் பல அறிந்து, நடுவுநிலை பிறழா நெஞ்சத்துணிவு வாய்க்கப்பெற்ற நல்லோர் பலர் கூடி இருந்து, தம்பால் வந்து வழக்குரைப்பாரின் குறைகளையும், முறைகளையும் கேட்டுக் குறைபோக்கி முறைநாட்டும் நல்ல இடமாகவும் பொதியில் விளங்கிற்று.*

---

‡ "அம்பலப் பீடிகை
ஊண்நலிஅரவம் ஒடுங்கியதாகி
விடரும் தூர்த்தரும் விட்டேற்ருளரும்
நடலை மாக்களும் நகையொடுவைகி
வட்டும் சூதும வம்பக் கோட்டியும்
முட்டாவாழ்க்கை முறைமையது ஆக."
—மணிமேகலை: 14: 59-64.

* "அவை இருந்த பெரும்பொதியில்"
—மதுரைக்காஞ்சி: 161.

"தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்உரை அறிவீர்! பொருந்துமின்."
—மணி: 1: 58-59.

**சோலையும் செய்குன்றும் :**

தமிழ் மக்கள் வாழும் வகையறிந்திருந்தனர்; நுகரலாம் இன்பங்கள் உலகில் எத்தனை உளவோ, அத்தனை இன்பங்களையும், நுகரும் வழியறிந்து நுகர்ந்தனர்; பூஞ்சோலை புகுந்து புதுமணம் நுகர்வதிலும், புது வெள்ள நீரில் புகுந்து ஆடுவதிலும், மலைநாடு சென்று மலைவளம் காண்பதிலும் அவர்கள் இன்பம் கண்டனர். அதனால், அவ்வின்பத்தை இடையறாது பெறவிரும்பினர்; இவ்வின்பவேட்கையில் மன்னனுக்கும், மக்களுக்குமிடையே வேற்றுமையில்லை. எந்நாழிகையும் நாடாட்சி நாடுகாவல் பற்றிய நினைவிலேயே ஆழ்ந்திருக்கும் அரசரும் அவ்வார்வத்தில் குறைந்திலர். ஆனால், மக்களைப்போல், மனம் விரும்பும்போதெல்லாம், மதிலைக்கடந்து சென்று இன்பம் நுகர்தல் அரசர்க்கு இயலாது. ஆதலின், அவ்வின்ப நுகர்விற்காம் வாய்ப்பினை, அரிதின் முயன்று, மதிலகத்தே கண்டு மகிழ்ந்தனர்; நகரின் இடையே பூஞ்சோலை பல வளர்த்துவைத்தனர்; புதுநீர் பாயும் பொய்கையைத் தோண்டிவைத்தனர்; குன்றுகளையும் செய்து வைத்தனர்.

அரசனும், அவன் உரிமைச்சுற்றமும் மட்டும் கண்டு களிக்கும் காவற் சோலையும், மக்கள் மனங் களித்துத் திரியும் மலர்ச்சோலைகளும் நகரில் இடம் பெற்றன; அரசர்க்கு உரியது உய்யானம் என்றும், மக்கட்கு உரியது உவவனம் என்றும் பெயரிடப் பெற்றன.* வேந்தர்

* "உய்யானத்தின் உறுதுணை மகிழ்ச்சியும்"

—சிலம்பு: 14: 127.

களின் புனலாட்டு விருப்பம், இலவந்திகைச் சோலையால் இனிது நிறைவேறிற்று. சுற்றிலும் மணம் தரும் மலர் மரங்கள் நின்று நிழல் செய்ய இடையே பொய்கையைத் தோண்டிப் புது நீர் பாய்ச்சி வைத்தனர்; அதில், நீரை வேண்டும்போது வேண்டுமளவு நிறைக்கவும் போக்க வும் வல்ல பொறிகளையும் பொறித்து வைத்தனர்.*

கல்லும் மண்ணும் இட்டு உண்டாக்கிய செய்குன்று, மன்னர்களின் மலைவளம் காணும் வேட்கையை நிறை வேற்றித் தந்தது. மரஞ் செடி கொடிகள் வளர்க்கப் பெற்றும், தண்ணீர் அருவி என ஓட ஒழுகப் பெற்றும், உண்மைக் குன்றின் உருவ நலம் பெற்று நின்றது அச் செய்குன்று.†

---

"உய்யானத்திடை உணிர்ந்தோர் செல்லார்"
—மணி. 3: 52.

"பன்மரம் பூக்கும்
உவவனம் என்பது ஒன்று உண்டு...
அவ்வனம அல்லது அணிஇழை! நினமகள்
செவ்வனம் செல்லும் செம்மை தானிலள்"
—மணி: 3: 61–81.

* "பன்மலர் அடுக்கிய நன்மரப்பந்தர்
இலவந்திகையின் எயிற்புறம் போகின்,
உலக மன்னவன் உழையோர் ஆங்குளர்"
—மணி: 3: 44-46.

"நிறைக்குறின் நிறைத்துப போக்குறின் போக்கும்
பொறிப்படை அமைந்த பொங்கிலவந்திகை."
—பெருங்கதை: 1: 40: 211.

† "இடுங்கற் குன்றமும் வந்துவீழ் அருவியும்"
—மணி: 19: 102.

"சேண் ஓங்கு அருவி தாழ்ந்த செய்குன்று"
—மணி: 28: 62.

**கோயில்கள்:**

சங்க காலம், சமயத் துறையில் சமரசம் நிலவிய காலம்; சைவம், வைஷ்ணவம், சமணம், பௌத்தம் முதலாம் பல்வேறு சமயங்களும் தமிழகத்தில் தழைத்தோங்கி நிலவின. மக்கள், தாம் தாம் விரும்பும் சமய நெறிகளைச் சார்ந்து வாழ்ந்தனர்; அரசர்கள், அச் சமயங்கள் அனைத்தையும் ஒன்றாக மதித்துப் பாராட்டினர்; அதனால் நகரில், பல்வேறு சமயத்தவரும் வாழ்ந்தது போலவே பல்வேறு சமயங்களுக்குரிய கோயில்களும் இடம்பெற்றிருந்தன. சிவன், முருகன், திருமால், பலதேவன், ஞாயிறு, திங்கள், இந்திரன் முதலாம் கடவுளர்க்கும், இந்திரன் ஊர்தி வெள்ளை யானை, படைக்கலம் வச்சிராயுதம், தரு கற்பகம் ஆகியவற்றிற்கும் எடுத்த கோயில்களும், புத்த பீடிகையும், அருகத்தானமும் அக நகரில் இடம பெற்றிருந்தன.*

**புறங்காடு :**

ஒரு நகருக்குக், கோயில் குளங்களினும் நனிமிக இன்றியமையாதது புறங்காடு; மாண்டார் உடல்களை மனையினின்றும் வேறுபடுத்தி அடக்கம் செய்தல், அறங்கள் பலவற்றுள்ளும் தலையாய அறமாம். அதனால், பிணங்களை அடக்கம் செய்யும் புறங்காடு, நகரின் இன்றி

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளைமேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்,"
—சிலம்பு: 5: 169-172.

"அறததுறை விளங்கிய அறவோர் பள்ளி"
—சிலம்பு: 14: 10.

யமையா உறுப்புகளுள் ஒன்ருகக் கருதப்பட்டது; ஊர் தோன்றும்பொழுதே புறங்காடும் உடன் தோன்றிற்று.*

பிணங்களை அடக்கம் செய்வதில், மக்கள் பலமுறைகளைக் கையாளுவர்; சிலர் சுட்டுச் சாம்பலாக்குவர்; சிலர் புதைத்து மண்ணோடு மண்ணாய் மாற்றுவர்; சிலர் தோண்டிய குழிகளில் இட்டு அடைத்து வைப்பர்; சிலர் குயவன் வனைந்து கொடுத்த தாழியில் இட்டுத் தாழியோடு புதைப்பர்.†

ஒரு நகர் தோன்றிய நாள் தொட்டு, அந்நகரில் இறந்தார் அனைவரையும் அடக்கம் செய்யவும், அவரவர் வழக்கத்திற்கு ஏற்ப, பல்வேறு வகையாக அடக்கம் செய்யவும் மிகப் பரந்த இடம் வேண்டியிருத்தலின், நனிமிகப் பரந்த இடத்தில் புறங்காடு அமைத்தனர்; இறந்தார்க்கு இறுதிக் கடன் செலுத்த, உட்செல்லும் மக்கள் நிற்பதற்கு ஆங்கு நிழல் தரும் மரங்கள் பல வளர்த்தனர்; இறந்தார் உடலையும், இறந்தார் உடலை எரித்துப் பெற்ற எலும்புகளையும் புதைத்த இடங்களில், அவர் நினைவாய், அவரவர் தகுதிக்கேற்ப, சிறியவும், பெரியவுமாய கோயில்களைக் கட்டினர்.‡ புறங்காட்டுள்,

---

* "நாமப் பேரூர் தன்னொடும் தோன்றிய
ஈமப் புறங்காடு". —மணி: 6: 37-38.

† "சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்"
—மணி: 6: 66-67.

‡ "இறந்தோர் மருங்கில சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும குன்று கண்டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக்கோட்டம்"
—மணி: 6: 57-59.

பிற காலங்களில் புகுவது பொருந்தாது ஆதலின், சுற்றிப் பெருமதில் வளைத்து நாற்புறமும் வாயில் அமைத்தனர்.

**கழிநீர்ச் சுருங்கை :**

மக்கள் நெருங்கிவாழும் நகரங்களில் நோய் பெருக இடங் கொடுத்தல் கூடாது. நாடாளும் அரசன், தன் ஆட்சிக் கீழ் வாழும் மக்கள், பசியற்றிருந்தால் போதும், பெரு வாழ்வு அளிக்கும் பெரும் பொருள் பெற்றிருந்தால் போதும் என்ற அளவோடு அமைதி கொள்ளுதல் கூடாது. ஒரு நாடு, பசியும் பகையும் அற்றிருந்தால் மட்டும் போதாது; அந்நாட்டு மக்கள் நோயற்ற நல்வாழ்வுடையராதலும வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாம். நோய் மலிந்த நாட்டில் வாழும் மக்களால், பசிநீங்க உழைக்கவோ, பகை நீங்கப் போரிடவோ இயலாது. நோயற்ற நல்லுடல் வாய்க்கப் பெற்றவரே, உழைப்பால் பசியையும், உடல் உரத்தால் பகையையும் அழிப்பர். ஆகவே, நாடு நோயற்றிருத்தல் வேண்டும் என்பதில் நாடாள்வோர்க்கு நாட்டம் இருத்தல் வேண்டும். அது, பண்டு நாடாண்டிருந்த நம் பழந் தமிழ் அரசர்களிடத்தில் அமைந்து இருந்தது.

நோய், தெருவுகளில் தேங்கி நிற்கும் நீராலும், குவிந்து கிடக்கும் குப்பை கூளங்களாலும் உண்டாகி, ஊறு விளைக்கும். அதனல், நகரத் தெருக்கள், தூய்மையும் துப்புரவும் உடையவாதல் வேண்டும். மழை நீரும், மனைகளின் கழிநீரும் நகரத் தெருக்களில் நில்லாது, நகருக்கப்பால் சென்று சேர்தல் வேண்டும்; குப்பை

* "நாற்பெரு வாயிலும் பாற்பட்டு ஓங்கிய
காப்புடை இஞ்சிக் கடிவழங்கு ஆரிடை."
—மணி: 6: 48-49.

கூளங்கள் அகற்றப் பெறுதல் வேண்டும்; பழந்தமிழ்ப் பேரூர்களில் அவ்விரு தொழிலும் நாடோறும் நடை பெற்றன.

மனைகளிலும், மன்னவன் கோயிலிலும், மற்ற இடங்களிலும் கழித்துவிடப் பெற்ற நீரை, நிலத்திற்கு அடியில் ஒழுங்காக அமைத்த கழிநீர்க் கால்வாய் வழியாகக் கொண்டு சென்று, நகருக்குப் புறத்தே, காவற்காட்டை அடுத்திருந்த ஆழ்ந்த அகழியில் விடுவர்.*

சிறியவும் பெரியவுமாய கழிநீர்க் கால்வாய்கள் வழியே வந்த, நகரத்துக் கழிநீர், ஒன்றுகூடி ஓடி அகழியில் விழும் இடத்தில், அச் சுருங்கை, யானைநிரை செல்லலாம் அளவு வாய் அகன்றிருக்கும்.†

அரண்மதிலை ஊடறுத்துப் பண்ணிய மதகுகளின் வழியாக விரைந்து வந்து விழும் கழிநீர்க்காட்சி, யானை உண்டநீர்; அதன் துதிக்கை வழியே வந்து விழும்

---

* "சுருங்கைத் தூமபின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவைநீரும்
...............................
என்று இந்நீரே எங்கும் பாய்தலின்
கன்றிய கராமும் இடங்களும் மீன்களும்
ஒன்றிய புலவொழி உடம்பின வாகித்
தாமரை குவளை கழுநீர் ஆம்பல்
பூமிசை பரந்து, பொறிவண்டு ஆர்ப்ப
இந்திர தனுவென இலங்கு அகழ்"

—மணி: 28: 5-22.

† "பெருங்கை யானை இனநிரை பெயரும்
சுருங்கை வீதி"

—சிலப்பதிகாரம்: 14: 64-65.

காட்சிக்கு ஒப்பாகும்.*

நகரமக்கள், தம் மனைகளில் கழித்து ஒதுக்கும் பொருள்களைத் தெருவில் கண்ட இடங்களில் எறிதல் கூடாது என்ற நல்லறிவினைப் பழந்தமிழ் மக்களும், அக்கால அரசர்களும் அறிந்திருந்தனர்; கழிபொருள்களை எறிதற்பொருட்டுத் தெருவுகளின் பல பகுதிகளில், கல்லும் சுண்ணும்பும் சேர்த்துக் கட்டிய தொட்டிகளை வைத்திருந்தனர்; மக்கள், தங்கள் வீட்டுக் குப்பைகளை அத்தொட்டிகளில் எறிய, அவற்றை, நகர்க்காவலர் நாள்தோறும் அப்புறப் படுத்தினமையால், நகரவீதிகள், தூய்மையும், துப்புரவும் பெற்றுப் பெருமையுற்றன.†

மக்கள் பெருக்கமும், மாநிதிப் பெருக்கமும் உள்ள இடத்தில், அப் பொருள்களைக் களவாடி உண்ணும் கள்வர்களும் பெருகவந்து வாழ்வர். தமிழ்நாட்டுப் பேரூர்கள், பெரிய வாணிக நிலையங்களாய் விளங்கின; மக்கள் செல்வவளத்தில் சிறந்திருந்தனர்; அதனுல், அந் நகர்களில் கள்வர்களும் வாழ்ந்து வந்தனர்; அதனுல் நாடாண்ட அரசர்கள், தம் நாட்டு மக்கள் செல்வத்திற்குக் கள்வரால் கேடுவருதல் கூடாது என்ற கருத்துடையராய், நகர மக்களையும், அவர் மாநிதிகளையும் கள்வர் கொண்டு போகாவாறு காக்கவல்ல காவல் வீரர்களை நகரத்

---

* "அருவிசொரிந்த திரையில் துரந்து
நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து
கடுமா களிறு அணத்துக் கைவிடுநீர் போலும்"
—பரிபாடல: 20: 103-105.

† "உயர்பூரிம விழுத்தெருவு"
—மதுரைக்காஞ்சி: 18

தெருக்களில், நாற்சந்திகளில் இரவிலும், பகலிலும் நிறுத்திவைத்தனர்; பகற்பொழுதினும், இரவுக்காலமே கள்வர்க்கு ஏற்றகாலமாம்; ஆதலின், இரவுக்காவலைத் தலைசிறந்த காவலர்பால் ஒப்படைத்திருந்தனர்.

காவல்வீரர், களிறுவாழும் இடம் அறிந்து, அதன் மீது பாய்ந்து தாக்குதற்கேற்ற இடம் வரும்வரை, அது அறியாவாறு அதைப் பின்தொடர்ந்து செல்லும் புலி போல், கள்வர் வாழிடம அறிந்து, ஒடுங்கி ஒடுங்கிச் செல்லும் அவரை, அவர் அறியாவாறு மறைந்து மறைந்து பின்தொடர்வர். கடமை மேற்கொண்ட அவர் கண்கள் உறங்கார்; எவர்கரும் எதற்கும் அஞ்சார்; காவல் முறைகளைக் கற்றுத் துறைபோய வீரர் தலைவரால் பாராட்டப் பெறத்தக்க பேரறிவு உடையார்; காவல் நூல் கூறும் விதிகளில் ஒரு சிறிதும் பிழையாது நின்று காக்கும் கடமைவீரர்; தப்பாது பாயவல்ல கணையேந்தி நிற்பர். தேரோடும் தெருவில், நீரோடுமளவு பெருமழை பெய்யினும் தம் கடமையில் தவறுர்; பெருமழை பெய்யும் பேய் உலாவும் நள்ளிரவிலும், அவர் உள்ளம் நகர்க் காவலைக் கைவிடக் கருதாது. அந்நிலையிலும், அதை விரும்பி மேற்கொள்வர்.* உறங்குவார்க்கு விழிப்பு

* "கண்மாறு ஆடவர் ஒடுககம் ஒற்றி
வயககளிறு பார்க்கும் வயப்புலிபோலத்
துஞசாக் கண்ணர், அஞசாக கொள்கையர்,
அறிநதோர் புகழ்ந்த ஆண்மையர், செறிந்த
நூலவழிப் பிழையா நுணஙகுநுண் தேர்ச்சி
ஊர்காப்பாளர், ஊககரும் கணையினர்,
தேர்வழங்கு தெருவில் நீர்திரண்டு ஒழுக
மழை அமைந்துற்ற அரைநாள் அமையமும்
அசைவிலர் எழுந்து நயமவந்து வழங்கலின்

உண்டாக்கவும், களவு கருதி உலாவரும் கள்வர்க்கு அச்சம் உண்டாக்கவும், இரவுக்காலத்தில் பறை ஒலி எழுப்பிச் செல்வர்.*

நகரில், முச்சந்தியும், நாற்சந்தியும் போன்ற இடங்களில், வீரர்கள் யானைமேல் இருந்து நகரைக் காத்தலும் உண்டு.†

**மாடங்கள் :**

சிற்றூர்களில், வாழுமிடம் பரந்துகிடக்க, வாழும் மக்கள் குறைந்திருந்தமையால், ஆங்கு ஒவ்வொரு மனையும், முன்றில், மனை, புழைக்கடை, இவற்றை உள்ளடக்கிய முள்வேலி என இடமகன்று விளங்கிற்று; மாநகர்வாழ் மக்களுக்கு அவ்விடவாய்ப்பு இல்லை. நகரங்களில் வாழும் மக்களின் தொகை வளர்ந்து கொண்டேயிருந்தமையாலும, அந்நகரைச் சூழ, ஒரு காலத்தில் வளைத்த மதிலை நகரமக்களின் வளர்ச்சிக் கேற்ப மாற்றிக்கொண்டே செல்லுதல் இயலாமையாலும், நகரங்களில் இடநெருக்கடி உண்டாயிற்று; அதனால், நகரத்து மக்கள், தங்கள் மாடங்களை விரிந்து பரந்தும்

கடவுள் வழங்கும் கையறு கங்குலும்
அச்சம அறியாது ஏமம் ஆகிய"
—மதுரைக்காஞ்சி: 642-652.

"தேர்வழங்கு தெருவும், சிற்றிடை முடுக்கரும்
ஊர் காப்பாளர் எறிதுடி ஓதை"
): 7: 68-69.

† "தெருவில்
கவலைமுற்றம் காவல நின்ற
தேம்படு கவுள சிறுகண யானை."
—முல்லைப்பாட்டு: 29-51.

விளங்க அமைக்கமாட்டாராயினர்; மாடங்களைப் பல மாடிகளை உடையவாக ஆக்கினர்; அதனால் நகரங்களில் எங்கும் நெடுநிலை மாடங்களே நிறைந்து நின்றன. அகன்றவீதியின் இருமருங்கும், உயர்ந்த மாடங்களை வரிசையாக அமைத்தனர்; அகன்று ஓடும் ஆற்றின் இரு மருங்கும், ஆற்றுவெள்ளத்தில் ஆழ்ந்துவிடாவாறு உயர்ந்து நிற்கும் கரைகள் போலும் காணும், மாநகர் மாடங்களின் காட்சி அழகைக் கண்டுகண்டு களித்தனர் அக்காலப் புலவர்கள்.*

தமிழர்கள், பல அடுக்கு மாடிகளைக் கொண்ட மாடங்களைக் கட்டி வாழும் மாண்பினைப் பண்டைக் காலத்திலேயே பெற்றிருந்தனர். "வான் தோய் மாடம்",† "முகில்தோய் மாடம்"‡ என்ற செந்தமிழ்ச் சொற்றொடர்கள், அம்மாடங்களின் உயர்வை உணர்த்துவனவாம்; பழந்தமிழ்ப் பேரூர்களில் செல்வர்கள் கட்டிய ஏழடுக்கு மாடங்கள் நகரங்களுக்குச் சிறப்பளித்து நின்றன. செல்வத்தில், ஆளும் அரசனினும் சிறந்து வாழ்ந்த கோவலன் மனையைக் குறிக்கும் "நெடுநிலை மாடத்து இடைநிலம்" என்ற சிலப்பதிகாரத்தொடர்க்கு, அடியார்க்கு நல்லார், "ஏழுநிலத்தை உடைய மாடத்து நாலாம் நிலத்து" என உரை கூறுவது உணர்க.§

---

* "யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவு"
—மதுரைக்காஞ்சி: 359.
"ஆயாறு எனக் கிடந்த தெரு"
—மலைபடுகடாம்: 481.

† "பெரும்பாணாற்றுப்படை: 333.

‡ "சிலப்பதிகாரம்: 14: 68.

§ சிலப்பதிகாரம்: 13: 69: 2: 13.

“மாடங்களில், உயர்ந்த கம்பங்களில், பல்வேறு கொடிகள் கட்டப் பெற்றிருக்கும்; காற்று வீசி அலைக்குந் தோறும், அக்கொடிகள், கடல் அலைபோல் ஆடி அசையும்; காதில் மகரக் குழை மின்ன, அம்மாடங்களின் மேல் நிலத்தில் உலாவரும மகளிர் முகங்கள், ஆடும் அக் கொடிகளால் மறைந்து மறைந்து தோன்றும் காட்சி, மேகத்திற்கிடையே மறைந்து மறைந்து தோன்றும் வெண்மதிக் காட்சி போன்று பேரின்பம் நல்கும”* எனவும், மலர், மலர் மாலை, மங்கலப் பொடிகள், வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு முதலாம் பொருள்களைத் திரிந்து விலை கூறி விற்கும் சிறு வணிகர் கூட்டம், மலைபோல் உயர்ந்த மாடங்கள் அளிக்கும் குளிர்ந்த நிழலில் இருப்பர்”† எனவும் கூறும் முகத்தான், மாடங்களின் உயர்வை உணர்த்திச் சென்றனர்.

வானளாவ உயர்ந்து விளங்கிய அம்மாடங்கள், விருந்தினரை வரவேற்கவும், அவரோடு இருந்து விருந்துண்ணவும், அறுசுவை உணவை ஆக்கவும், உணவு முதலாம் பொருள்களைக் கொட்டி வைக்கவும், இர்விற் கிடந்து இனிது துயிலவும் வாய்ப்பளிக்கும் வண்ணம், மண்டபம், கூடம், தாய்க்கட்டு, அடுக்களை என்ற பல்

---

* “ஒண்டுழை திகழும் ஒளிகெழு திருமுகம்
திண்காழ் ஏற்ற வியல் இருவிலோதம்
தெண்கடல் திரையின் அசைவளி புடைப்ப
நிரைநிலை மாடத்து அரமியம் தோறும்
மழைமாய் மதியில் தோன்றுபு மறைய.”
—மதுரைக்காஞ்சி: 448–452.

† “பல்வேறு பண்ணியம் தழீஇத்திரிவிலைஞர்
மலையுரை மாடத்துக் கொழுநிழல் இருத்தர்”
—மதுரைக் காஞ்சி: 405–406.

வேறு பகுதிகளைக் கொண்ட பெருமையுடையவாமாறு அமைக்கப் பெற்றன. நகரெங்கும் மாடங்களே நிறைந்து விட்டமையாலும், அம் மாடங்கள் பலப்பல மாடிகளைக் கொண்டனவாய் அமைக்கப்பட்டமையாலும், மாடங்களில் வாழும் மக்கள், தங்களுக்கு வேண்டும் காற்றையும் ஒளியையும் குறைவாகப் பெற்று, அதனால் பல்வேறு வகைப் பிணிகளுக்கு ஆளாகி அல்லற்பட நேருமோ என அஞ்சிய அக்காலக் கட்டிட அமைப்பாளர், அம் மாடங்களுள் காற்றும் ஒளியும் வேண்டுமளவு புகுமாறு சாளரங்கள பல அமைத்திருந்தனர்*. மாடங்களில், ஏனைய எப்பகுதியினும், இரவின் பெரும்பகுதியை உறங்கிக் கழிக்கும் இடமாய பள்ளியறைகளைத் தெருவை யடுத்து அமைத்து, அவ்வறைகளுள் வேண்டுமளவு காற்று விரைந்து புகவல்ல சாளரங்கள் பல அமைத்து வைத்தனர். சோழ அரசிளங்குமரன் உதய குமரனின் நண்பனுய எட்டி குமரன் என்பான், புகார் நகரத்துப் பரத்தையர் தெருவில், பொன்னிழைத்துப் பண்ணிய பெரிய மாடத்தில், வீதியை அடுத்திருந்த அறையில், வேண்டுமளவு காற்று விரைந்து புகுமாறு அமைத்த சாளரத்தருகில் போடப்பட்ட பள்ளியில் கிடந்தவாறே, தெருக்காட்சிகளைக் கண்டு களித்திருந்தான் என மணிமேகலை கூறுவது காண்க.†

---

* "வகைபெற எழுந்து வானம் மூழ்கிச்
சில்காற்று இசைக்கும் பல்புழை நலஇல்"
—மதுரைக்காஞ்சி: 357–358.

† "ஆடகச் செய்வினை மாடத்து ஆங்கண்
சாளரப் பொளித்த கால்போடு பெருவழி
வீதிமருங் கியன்ற பூவிணைப் பள்ளி"
—மணி: 4: 52–54.

தட்பமும் வெப்பமும் பருவந்தோறும் வேறுபடும்; ஓர் ஆண்டை, அத் தட்ப வெப்பங்களை அடிப்படையாகக் கொண்டு ஆறு பருவங்களாகப் பிரித்தனர்; ஆவணியும் புரட்டாசியும் கார்; ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்; மார்கழியும் தையும் முன்பனி; மாசியும் பங்குனியும் பின் பனி; சித்திரையும வைகாசியும் இளவேனில்; ஆனியும் ஆடியும் முதுவேனில். இவற்றுள, கார், குளிர் தொடங் கும் காலமாம்; கூதிர் மிக்க குளிர்காலம்; முன் பனி அது குறையும் காலம்; பின் பனிப் பருவம் வெப்பம் தொடங்கும் காலம்; இளவேனில் மிகு வெப்பக் காலம். முதுவேனில் அது குறையும் காலம். குளிர் காலத்தில் வீசும் இயல்புடையது வாடைக்காற்று; அது அக்காலக் குளிரை மேலும் கொடுமையுடையதாக்கும்; வெப்பக் காலத்தில் வீசும் இயல்புடையது தென்றல்; அது அக் கால வெப்பத்தைத் தணித்து, மக்களுக்குத் தணியா இன்பம் நல்கும்.

பருவ நிலைகளையும், அப் பருவங்களில் வீசும் காற் றுக்களின் இயல்பையும் அறிந்த பழந்தமிழர்கள், அவற் றின் கொடுமைக்கு ஆளாகாமல், அவற்றுலாம் இன் பத்தை நுகர்தற்கு ஏற்றவாறு தம் மனைகளையும், மாடங் களையும் வகுத்துக் கொண்டனர்.

எழுநிலை மாடங்களில் மேலே நிற்கும் ஏழாம் நிலம், எத்திசைக் காற்றும் எளிதில் புகுதற்கு ஏற்புடைத்து ஆதலின், அந்நிலத்து வாழ்க்கையை, தன் வருகையால் உயிர்கள் வருந்தும் வாடைக்காற்று வீசும் காலத்தில், மக்கள் விரும்புவதில்லை. வெப்பம் மிகுந்து வியர்வை வழியும் வேனிற் காலத்தில், சிறு காற்றும் உடற்குப் பேரின்பமாம் ஆதலின், அக்காலத்தில், மக்கள் அனை

வரும் அம்மேனிலை வாழ்க்கையையே விரும்புவர். காற்று உலாவும் இடமாயினும், ஆங்குக், கோடை காலத்துக் கொடுமை மிக்க வெயில் காயும் பகற் காலத்தில், சிறிது பொழுது இருத்தலும் இயலாது ஆதலின், மக்கள், வெப்பம் தணிந்த மாலையிலும், வெயிற் கொடுமை யற்று வெண்மதியின் தண்ணொளி வீசும் இரவிலும் மட்டுமே, அவ்விட வாழ்க்கையை விரும்புவர்.

புறத்துப் போய் விளையாடும் பருவம் கடந்த மகளிர், மாலைக் காலத்தில், அம்மேனிலை மாடத்தில் ஒன்றுகூடி, தம் காற்சிலம்பு ஒலிக்க ஓடி ஓடிப் பந்தாடி மகிழ்வர்; மலையில் மகிழ்ந்தாடும் மயில்கள்போல் அம்மேனிலைகளில், மகளிர் மகிழ்ந்தாடும் காட்சியைக் கண்டு களித்தார் ஒரு புலவர்.* இளங் காதலர்க்கு, இன்ப வாழ்விற்கு ஏற்ற இடமாவதும, எல்லோரும் இருந்து, நிலவொளியின் நலம் நுகர்வதற்கு வாய்ப்புடைத்தாவதும் அம் மேனிலைகளேயாம். அதனால், அம்மேனிலை, நிலா முற்றம் எனவும் அழைக்கப் பெறும்.†

நிலா முற்றத்தில் வெய்யிலின் வெப்பம் நீங்கிய நிலையினை விருப்பத்தோடு எதிர் நோக்கும் மக்கள் அது காறும், அந் நிலா முற்றத்தை அடுத்துக் கீழே இருக்கும் நிலைக்கண் வாழ்வர். அந்நிலையுள், ஞாயிற்றின் கதிர்

---

* "மால்வரை சிலம்பில் மகிழ் சிறந்து ஆலும்
பீலி மஞ்ஞையின் இயலிக், கால
தமனியப் பொற்சிலமபு ஒலிப்ப, உயர்நிலை
வானதோய் மாடத்து வரிப்பந்து அசைஇ"
—பெருமபாண்: 330-333.

† "நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றம்"
—சிலம்பு: 4: 31.

புகாது ஆதலின், வேனிற் காலத்துப் பகற் பொழுதின் பெரும் பகுதியை மக்கள், அந்நிலையில் கழிப்பர்; அந்நிலை மேனிலைபோலாது, சுற்றுச் சுவர்களும் மேல் தளமும் பெற்றிருத்தலின், அந்நிலைக்குள், ஒளியும் காற்றும் உட்புகல் இயலாது. அவையற்ற இடத்தில், மக்கள் வாழ்தல் அதிலும் வெப்பம் மிக்க வேனிற் காலத்தில் வாழ்தல்-இயலாது. அதனால் அந்நிலையுள், வேனிற் காலத்து வீசும் இயல்புடையதான தென்றல் காற்று எளிதில் புகுதற்கேற்ப, அந்நிலையின் தென்பாற் சுவர்களில், சாளரங்கள் பல பொறிக்கப் பெற்றிருக்கும், அச் சாளரங்கள் வழியே புகும் தென்றல், அந்நிலையின் வெப்பத்தை மாற்றி, விரும்பும் இன்பம் நல்கும்.*

நிலா முற்றம், வேனிற் காலத்தில் மட்டும் பயன் படுவதன்று; குளிர் மிக்க கூதிர்க் காலத்தும், அது பயன் பட்டது; குளிர்காலத்தில், காலைக் குளிர் போகவும், தம் உடலுக்கு உரம் ஊட்டும் ஒளியினைப் பெறவும் இளஞாயிற்று ஒளியை எதிர்நோக்கி, கூதிர்க் காலத்துக் காலைப்பொழுதில், மனைவாழ் மகளிரும் மைந்தரும் ஒன்றுகூடி, அந்நிலா முற்றத்தில் சிறிது பொழுது இருப்பதும் உண்டு.†

* "வானுற நிவந்த மேனிலை மருங்கின்
வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை"
—நெடுநல்: 60-62.

† "வளமனை மகளிரும் மைந்தரும் விரும்பி
இளநிலா முன்றில் இளவெயில் நுகர,
விரிகதிர் மண்டிலம் தெற்கேற்பு வெண்மழை
அரிதில் தோன்றும் அச்சிரக்காலை."
—சிலம்பு: 14: 102-105.

கூதிர்க் காலத்தில், மாடத்து மேனிலைகளில், மக்கள் சிறிது பொழுதே இருப்பர்; அக்காலத்து நாட்களின் பெரும் பகுதியை, அவர்கள், அம் மாடத்தின் இடை நிலைகளில் கழிப்பதையே விரும்புவர்; இடைநிலை மாடம், குளிர்காற்று எளிதில் புகமாட்டாத இடமாதலின், அக் கால வாழ்க்கைக்கு அதுவே ஏற்ற இடமாம். அதனால், மக்கள், இரவுக்காலத்தை அந்நிலையிலேயே உறங்கிக் கழிப்பர். பகற்பொழுதில் மகளிரும் மைந்தரும் ஒன்று கூடியிருந்து, தம் இடையே நெருப்புச் சட்டியை வைத்து, அதில் அகில் முதலாம் பொருள்களை இட்டுப் புகை எழுப்பி, அப் புகையால் தம் உடற் குளிர் ஒழிந்து மகிழ்வர்; வீசும் பனிக்காற்று, அந்நெருப்பின் வெப்பத் தையும் கெடுத்துக் குளிர் மிக்குக் கொடுமை செய்யக் காணின், அக்குளிர் காற்று உட்புகும், மாடத்தின் கீழ்ப் பாற்சுவரிலும், வடபாற் சுவரிலும் உள்ள சாளரங்களை அடைப்பர்.*

தமிழர்கள் கலையார்வம் நிரம்பியவராவர்; அன்னார் உள்ளம், வாழ்வின் தேவைக்கு வேண்டும் பொருள்கள் கிடைத்தால் போதும் என அமைதி கொள்வதில்லை. கிடைக்கும் அப்பொருள்கள், பிறர் பார்த்து, வியந்து

---

* "வேனிற் பள்ளி மேவாது கழிந்து
கூதிர்ப் பள்ளிக் குறுங்கண அடைத்து"
—சிலம்பு: 4: 60-61.

"முகில்தோய் மாடத்து அகில்தரு விறகின்
மடவரல் மகளிர் தடவு நெருப்பு அமர்ந்து,
நறுஞ்சாந்து அகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்கண் அடைக்கும் கூதிர்க்காலை"
—சிலம்பு: 14: 98-101.

பாராட்டவல்ல வனப்புடையவாதல் வேண்டும் எனவும் விரும்பும். அவ்வாறே, அவர் கைப்பட்ட ஒவ்வொரு பொருளிலும், அவர் கலையார்வம் புலனுமாறு, அப் பொருள்கள் ஒவ்வொன்றும் வனப்பு மிக்க வேலைப் பாடுகள் அமையப் பெற்றிருக்கும்.

தமிழர்களின் இக்கலையார்வத்தின் விளைவாய் உடல் நலத்தின் இன்றியமையா இரு தேவைகளாய ஒளியை யும் காற்றையும் பெறும் நோக்கத்தோடு அமைக்கப் பெற்ற சாளரங்கள், அழகுடையன வாகவும் ஆக்கப் பெற்றன. சாளரங்களில் காற்றுநுழையப் பண்ணிய புழைகள், மான்கண்கள் போலும் மாண்புடையவாகப் பண்ணப்பட்டன; வண்டுகள் நுழையுமளவே பண்ணிய புழைகளைக் கொண்ட அச்சாளரங்களில், மணிமாலைகளை வரிசையாகத் தொங்கவிட்டு, அழகு செய்து அக மகிழ்ந்தனர்.*

ஒரு நாட்டில் மக்கள் வாழும் மனைகளே இவ்வளவு மாண்புடையவாயின், அந்நாட்டு அரசன் வாழும் அரண்மனை, செப்ப ஒண்ணுச் சிறப்பு வாய்ந்திருக்கும் எனக் கூறவேண்டுவதில்லை. மக்கள் வாழும் மாட வீதிகளும், வாணிக வீதிகளும், அரசியல் துணைவர்கள் வாழும் வீதிகளும், அமைச்சர், அந்தணர் வீதிகளும் நாற்புறமும் சூழ்ந்துகிடக்க, நகரின் நடுவே அமைந்த அர

"மான்கண் காதலர் மாளிகை"

—சிலம்பு: 5: 8.

"மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங்கண் நுழைந்து
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்."

—சிலம்பு: 2: 22-24.

சன் பொற்கோயில், கடல் சூழ்ந்த உலகின் இடையே, நனிமிக உயர்ந்து நிற்கும் மேருமலைபோல் தோன்றும்.*

அரண்மனை, மக்கள் வாழும் மாடங்கள் போல், தெருவின் இரு மருங்கும் அமைந்த அம் மாடங்களை அடுத்து அமைக்கப்பெறுவதில்லை. நகரின் நடுவே, நாற்புறமும் மதில்கள் சூழ அமைந்த நறுமணப் பொழிலுக்கு இடையே அமைக்கப் பெறும். அப்பொழிலில், வேண்டும் போது, வேண்டுமளவு நீரை நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறிகள் அமைந்த பொய்கைக் கரையில் அமைக்கப்பெறுதலால், அரசன் மாளிகை,இலவந்திகை மாடம் என்றும் அழைக்கப் பெறும்.†

மக்கள் மனைகள், சுட்ட செங்கல்லால் கட்டப் பெற்று, சுட்ட ஓடுகளால் வேயப் பெறும்; அரசர் வாழும் அரண்மனை, மக்களுக்குரிய மாடங்கள்போல் சுட்ட ஓடும் செங்கல்லும் கொண்டு கட்டப்பெறும் பொருட் குறைபாடுடையதன்று. குடிகள்பால் பெற்ற ஆறிலொரு பொருளும், போரில் பகைவரை வென்று கைப்பற்றிக்

---

* "படுதிரை சூழ்ந்த பயங்கெழு மாநிலத்து
இடைநின்று ஓங்கிய நெடுநிலை மேருவின்
கொடிமதில் மூதூர் நடுநின்று ஓங்கிய
தமனிய மாளிகை"

—சிலம்பு: 28: 47-50.

† "விளங்கு இலவந்திகை வெள்ளி மாடம்"

—சிலம்பு: 25: 5.

"இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்
[சென்னி"

"இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்"

என்ற அரசர் பெயர்களையும் காண்க.

கொணர்ந்த பொருளும் அளவிறந்து குவிந்து கிடக்கும் அது, முழுதும் செம்பொன்னினுலேயே அமைக்கப் பெறும்.*

பொன்னும் பவளமும் முத்தும் மணியும் கொண்டு அமைக்கப் பெற்ற அரசன் கோயிலை, தமிழ்நாட்டுச் சிற்ப நூல் வல்லார் மட்டும் அமைத்தாரல்லர். அக்கால அரசர்கள், நவமணிகள் இழைத்து நன்கலம் அமைப்பதில் வல்ல மகத நாட்டுப் பணியாளரையும், மராட்டிரநாட்டுக் கம்மாரையும், அவந்தி நாட்டுக் கொல்லரையும், தச்சத்தொழில்வல்ல உரோமர்களையும் கிரேக்கர்களையும் தமிழ்நாட்டுச் சிற்பநூல் வல்லார்க்குத் துணைபுரியத்தந்து, தம் அரண்மனைகளை அமைத்துக் கொள்வதில் ஆர்வம்காட்டினர்; அவ்வரசர்களின் ஆர்வம் நிறையுமாறு, பல்வேறு நாட்டுத் தொழி லறிஞர்களும் ஒன்றுகூடி, பவளக்கம்பங்களை நாட்டிப், பலமணிகள் இழைத்துப் பண்ணிய போதிகைகளைப் பொருத்தி, முத்துச் சரங்களை நாலவிட்டு ஆக்கி அளித்த அரசன் பொற்கோயில், கண்ணொளி பறிக்கும் கவின் உடையதாய்க் காட்சி அளித்தது.†

* "சுடுமண்ஏரு, வடுநீங்கு சிறப்பின்
முடியரசு ஒடுங்கும் கடிமனை"
—சிலம்பு: 14: 146-147.

† "மதக வினைஞரும், மராட்டாக் கம்மரும்,
அவந்திக் கொல்லரும், யவனத் தச்சரும்,
தண் தமிழ் வினைஞர் தமமொடு கூடிக்
கொணடினிதியற்றிய கண்கவர் செய்வினைப்,
பவளத்திரள்கால், பன்மணிப் போதிகைத்
தவள நிததிலத்தாமம் தாழ்ந்த

மலைநாட்டு மகளிர், தம் மனைக்கு அருகில் வீழ்ந்தோடும் அருவியொலி, இனிய தாலாட்டு ஒலியாகத் தம் மனைமுன்றில் கிடந்து உறங்கும் இனிய இயற்கைநலம் வாய்ந்தது தமிழ்நாடு; அத் தமிழ்நாட்டில் பிறந்த தமிழ் அரசர்களும், அவர் மனைவியரும், அவ் வியற்கை இன்பநுகர்வில் சிறிதும் ஆர்வம் குறைந்தவரல்லர்; ஆனால், அரசர்குலத்து வந்த அவர்களால் ஏனையோர்போல் காட்டிலும் மலையிலும் கடற்கரையிலும் திரிந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்தல் இயலாது. அதனால், அரசர்கள், இயற்கை நலங்களைத் தம் செல்வச் சிறப்பால், அரண்மனைக்கு உள்ளாகவே கொண்டு கண்டு மகிழ்ந்தனர்.

தூய வெண்ணிறம் வாய்ந்த நீண்ட மயிரையுடைய கவரிமான்களையும், குறுகிய கால்களையுடைய அன்னங்களையும் அரண்மனை முன்வாயிலிடத்தில் துள்ளி விளையாடவிடுத்து மகிழ்ந்தனர்.*

அரண்மனையின் நிலாமுற்றத்தில், ஒருபால் மகர மீன்வடிவுபோல் பண்ணிய அகன்ற வாயை உடைய நீர்த்தூம்பினின்றும், நீர் இடையறாது வீழ்ந்து, ஓ எனும் ஒலியினை எழுப்பும்; மற்றொருபால், அவ்வருவி நீர் கண்டும், அதன் ஒலிகேட்டும் மகிழ்ந்த மயில், தன்

---

கோணச்சந்தி மாணவினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பின
பைஞ்சேறு மெழுகாப பசும்பொன் மண்டபம்''
—மணி: 19: 107-115.

* ''நெடுமயிர் எகினத் தூநிற ஏற்றை
குறுங்கால் அன்னமோடு உகளும் முன்கடை''
—நெடுநல்: 91-92.

அழகிய தோகையை விரித்து ஆடி அகவும். அருவியும் *மயிலும் விளங்கும் அம்மாடம், மலைக்காட்சியைக் காட்டி

அரண்மனையில், அரசமா தேவியார்க்குரிய மாளிகை, தனியே அமைந்திருக்கும்; அது அரசரல்லது வேறு ஆடவர் எவரும் அணுகாவகையில் அரிய காவலைக் கொண்டிருக்கும்.†

அரசன் கோயிலில், யவனநாட்டு வணிக மக்கள் தந்த அழகிய பாவை விளக்கில், நிறைய நெய்வார்த்துப் பருத்த திரியிட்டு ஏற்றிய சுடர்கள், இரவின் இருள் போக்கி ஒளி வீசும்.‡

அரசர்க்குரிய அரண்மனைகளும், மக்களுக்குரிய மாடங்களும் சிற்பக் கலையில் தேர்ந்த சிறந்த அறிஞர் களைக் கொண்டே அமைக்கப் பெறும். கட்டிடம் அமைக் கும் பணிமேற்கொண்ட கலைஞர்கள், அவற்றை அமைத்

---

* "நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்
கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறையக்
கலுழ்ந்து வீழ்அருவிப் பாடுவிறந்து அயல
ஒலிநெடும் பீலிஒல்க மெல்லியல்
களிமயில் அகவும் வயிர் மருள் இன்னிசை
நளிமலைச சிலம்பில் சிலம்பும் கோயில்"
நெடுநல: 95-100.

† "பீடுகெழு சிறப்பின பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பு"
—நெடுநல். 106-107.

‡ "யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கைஏந்து ஐஅகல் நிறைய நெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்எரி"
—நெடுநல்: 101-104.

தற்கு ஏற்புடைய இடங்களைத் தேர்ந்து, அவற்றின் அகப்புற அளவுகளுக்கு ஏற்ப, அவ்விடங்களைக் கயிறு களின் துணையால் நுண்ணிதாக அளந்துகொண்டு, பின்னர் எடுத்த வினை இனிது முடிக என இறைவனைப் பணிந்து, பணிமேற் கொண்டு முடிப்பர்.*

**மக்கள் வளமும் மாநிதிப் பெருக்கமும்**

நாகரிக வாழ்வில் நனிமிகச் சிறந்து விளங்கும் இன்றைய நகரங்களின் நலங்கள் பலவும் ஒருங்கே பெற்றிருந்த பழந்தமிழ்ப் பேரூர்கள், பேரூர்க்கு மாண்பளிக்கும் மக்கள் வாழ்விலும், மாநிதிப் பேற்றிலும் சிறந்து விளங்கின. தன்னகத்தே வாழும் மக்கள் தன்பால் வாழ்வற்றுப் போகத், தாம் பிறந்த அப்பேரூரைப் பிரிந்து அவ்வாழ்வு தரும் பிற பேரூர்களைத் தேடிப்போதல், ஒரு பேரூர்க்குப் பெருமை யளிக்காது. ஒரு பேரூரில் வழி வழி வந்த பழம் பெரும் குடிகளில் பிறந்த மக்கள் பல்லாண்டு பல்லாண்டு காலமாய் வாழ்ந்து வளம்பெற்று மகிழ்தல் வேண்டும். அதுமட்டுமன்று; பேரூரின் பெரு வளம் அறிந்த பிறவூர் மக்களும், பிறநாட்டு மக்களும் அப்பேரூர் வாழ்வைப் பெரிதும் விரும்பி, நாள்தோறும் பெருந்திரளாக வந்து புகுவதும் வேண்டும். பேரூரின் பழங்குடிகள் வாழ்வு மறந்து பிரிந்து போகாதிருக்கவும், பிறநாட்டு மக்கள் பெருங்கூட்டமாய், அப்பேரூர் வாழ்வை விரும்பி வந்து புகவும், அப் பேரூர் வயல் வள

* "நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டுத்
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கிப்
பெருமபெயர் மன்னர்க்கு ஒப்ப மனைவகுத்து"

நெடுநல்: 76-78.

முத்தாலும், வாணிக வளத்தாலும் வற்ருப் பெருநிதி பெற்று விளங்குதலும் வேண்டும். பழம்பெரும் பேரூர்களின் பாராட்டற்குறிய பண்புகள் இவை. இவ்விரு வகைச் சிறப்புக்களையும் நம் செந்தமிழ் நாட்டுப் பழம் பேரூர்களும் பெற்றிருந்தன.*

* "பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்"
—சிலம்பு: 1: 15-15.

"கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந்து உறையும் இலங்குநீர் வரைப்பு",
—சிலம்பு: 5: 11-12.

"நிலன் எடுக்கல்லா ஒண்பல் வெறுக்கைப்
பயன் அறவு அறியாவளங்கெழு திருநகர்"
—மதுரைக்: 215-162.

# 4. மதுரை

வடவேங்கடம் தென்குமரிகளுக்கு இடைப்பட்ட தமிழகம், பண்டு பலப்பலபேரூர்களைத் தன்னகத்தே கொண்டிருந்ததேனும், மூவேந்தர்களின் அரசியல் தலைமை நிலையங்களாய்த் திகழ்ந்த மாநகர்கள், மதுரை, உறையூர், வஞ்சி, புகார் என்ற நான்கேயாம். மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாட்டிற்குக் கொற்கை போலவும், வஞ்சியைத் தலைநகராகக்கொண்ட சேர நாட்டிற்குத் தொண்டிபோலவும், உறையூரைத் தலைநகராகக்கொண்ட சோழநாட்டிற்குக், கடல் வாணிகம் வளர்க்கும் துறைமுகப் பட்டினமாய் விளங்கிய புகார், சோழ அரசர்களுள் ஒரு சாராரின் தலைநகராகவும் விளங்கிற்று ஆதலின், மூவேந்தர்ப் பேரூர்களாய், இந் நான்கு நகரங்களும் கொள்ளப்பட்டன. அதனாலேயே சிலப்பதிகாரம் பாடிய சேரர் கோவாகிய இளங்கோவடிகளார், தமிழகத்தின் பேரூர்களாக, இந்நான்கு நகரங்களையும் குறித்துள்ளார்.*

சேர, சோழ நாடுகளுக்கு இல்லாத ஒரு பெரிய பகை, பாண்டி நாட்டிற்கு இருந்தது. அந்நாடு பகையரசர்களால் பாழுறுவதோடு, அவ்வப்போது கடல் கோள்களாலும் அழிவுற்று வந்தது. காய்சின வ(

* "நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும்
தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு
மாடமதுரையும், பீடார் உறந்தையும்,
கலிகெழு வஞ்சியும், ஒலிபுனல் புகாரும்."
—சிலம்பு: 8: 1-4.

முதல் கடுங்கோன் ஈருக உள்ள எண்பத்தொன்பது அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்த காலம்வரை, பாண்டி நாட்டுத் தலைநகராக விளங்கிய தென் மதுரையும் பஃறுளி, குமரி எனும் இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரை நாடும், ஏழ்குறும்பனை நாடும், குமரி, கொல்லம் முதலாம் பன்மலைநாடும் உள்ளடக்கிய பாண்டி நாட்டின் பெரும் பகுதியும், கடுங்கோன் காலத்தில் கடல்கோளால் அழிவுற்றன. தெற்கண் தம்நாடு அழியக்கண்ட தென்னவனும், தென்னவன் நாட்டு மக்களும் சிறிது வடக்கே வந்து, கபாடபுரத்தைத் தலைநகராகக்கொண்டு வாழ்ந்தனர்; வெண்தேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் ஈருகஉள்ள வேந்தர் நாற்பத்தொன்பதின்மர் இருந்து அரசாண்ட கபாடபுரமும், குமரிக்குன்றும், பஃறுளியாறும் கடல்கோளால் பாழாயின.

தென்திசைக்கண், நீண்டு பரந்திருந்த பாண்டிநாடு, இவ்வாறு பாழுற்றமையால், கபாடபுரத்தில், கடல்கோள் காலத்தில் இருந்து அரசாண்ட முடத்திருமாறன், தன் னாட்டின் மேற்கே நாடாண்டிருந்த சேரர்களையும், வடக்கே வாழ்ந்திருந்த சோழர்களையும் வென்று துரத்தித், தன் னாட்டை அடுத்திருந்த அவர் நாட்டு நிலயங்களைக் கைப் பற்றிப், பாண்டிநாடு கடல் கோளால் இழந்த நிலக் குறையை நிறைவாக்கினான்*. தம் பழைய தலைநகரங்கள்

---

* "மலிதிரை ஊர்ந்து தன்மண் கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்,
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணங்கிய வாடாசீர்த் தென்னவன்"
—கலித்தொகை: 104: 1-4.

இரண்டும், கடல்கோளால் பாழுற்றமை கண்ட பாண்டி நாட்டு மக்கள், நாடும், நகரமும் புதியவாகக் காணுங்கால்,- அவற்றிற்கு அத்தகைய கேடு மீண்டும் வராமை வேண்டும் என்பதில் பெரிதும் விழிப்பாயிருந்தனர். அன்று அவர்கள் கண்ட பாண்டிநாட்டின் புதிய தலை நகரே, இன்றைய பழம்பெரும் நகராகிய மதுரைமா நகரம்.

நாடும் நகரமும் கடல்வாய்ப்படவே, கலங்கிய பாண்டிய மன்னன், வடதிசைக்கண் உள்ள மணலூர் வந்து தங்கினை; ஆங்கிருந்தவாறே தலைநகர் அமைத்தற்குத் தகுதிவாய்ந்த இடத்தைத் தேர்ந்துகொண்டிருந்தான். அக்காலை, அம்மணலூர் வணிகன் ஒருவன், மேற்கே உள்ள நாடுகளுக்குச்சென்று வாணிகம் புரிந்து, ஊர்நோக்கி மீண்டு வருவாணுயினன். அவ்வாறு மீண்டு வருங்கால், மணலூரை அடையச் சிறிது தொலைவே இருந்த அளவில், ஞாயிறு மறைந்து இரவு வந்துறவே மேற்கொண்டு செல்லமாட்டாது அங்கேயே தங்கினுன். அவ்வாறு அவன் தங்கிய இடம், கடப்ப மரங்கள் நிறைந்த ஒரு காடு; அக்காட்டில் தன் வாணிக வளத்தோடு தங்குவதற்கு வாய்ப்புடைய இடம் தேடித் தங்கிய வணிகன், தன் மாலைக் கடனுற்று முன்னர், மாசுபோக நீராடுதற்கேற்ற நீர்நிலை தேடித்திரியுங்கால், அக்காட்டின் ஒருபால், ஒரு பொய்கையும், அப்பொய்கைக் கரையில் ஒரு சிவலிங்கமும் இருக்கக் கண்டான். பொய்கையில் நீராடி இறைவனை வழிபட்டு இரவைக் கழித்தான். பொழுது விடிந்ததும், பொய்கை இருக்கும் இடம்சென்று உற்று நோக்க, பொய்கை, பொன்னிறத்தாமரை மலர்ந்து மணம் கமழவும், பொய்கைக் கரைக்கண்

இருக்கும் இறைவன் திருவுருவம், செடிகளாலும், கொடி களாலும் மறைப்புண்டு கிடக்கவும் கண்டான். மீண்டும் ஒரு முறை அவ்விறைவனை வணங்கி, வாணிகப்பொருள் களோடு மணவூர் வந்துசேர்ந்தான். ஊர் அடைந்த வணிகன், தலைநகர் அமைக்கும் தகுதிவாய்ந்த இடம் காணாது கலங்கி நிற்கும் மன்னவன்பால் சென்று, இரவு தான் தங்கிய கடம்ப வனம், ஆங்குள்ள பொய்கை, பொய்கைக்கரையில் கோயில் கொண்டிருக்கும் இறை வன் திருவுருவம் ஆகியன குறித்து அறிவித்தான். வணிகன் கூறியன கேட்ட வேந்தன், தன் அமைச்சர் உடன்வரக், கடம்பவனம் சென்று அவற்றைக்கண்டான்; அவ்விடம் கடலுக்கு மேற்கில், அக்கடல்நீர் எளிதில் புகமாட்டாத் தொலைவில் இருப்பதாலும், திருக்குளமும் திருக்கோயிலும், அவ்விடம் பண்டு ஒரு பெருநகரின் இருப்பிடமாம் என்பதை அறிவிப்பதாலும், அக்கடம்ப வனக்காடு, தலைநகர் அமைப்பிற்குத் தகுதிவாய்ந்த இடமாம் எனத்துணிந்தான். தலைநகர் அமைக்கும் பணி உடனே தொடங்கப்பெற்றது; மரங்கள் அழிக்கப்பட்டன; மண் செப்பம் செய்யப்பட்டது. இறைவன் திருவுருவம் இருக்கும் இடத்தை நடுவாக வைத்துப் பெரிய கோயிலை எழுப்பினர்; கோயிலைச்சூழ, அங்காடி முதலாம் பெரிய தெருவுகளும், பெருந்தெருவுகளை ஒன்று சேர்க்கும் சிறிய தெருவுகளும் அமைத்தனர்; நகரின் இடையிடையே மன்றங்களும், பொதியில்களும் எழுந்தன; பொய்கை களும், பூஞ்சோலைகளும் பலப்பல இடம் பெற்றன. அரசனுக்குரிய அரண்மனை, நகரின் வடகிழக்கே அமைக் கப்பட்டது. இவை அனைத்தையும் சூழ உயர்ந்த மதிலும், ஆழ்ந்த அகழியும், அடர்ந்த காவற்காடும் எடுத்து

நகருக்கு அரண் அமைத்தனர்.

மதுரைமாநகர் அமைப்புக்குறித்து, அம்மதுரையில் இறைவன் செய்த திருவிளையாடல்களை எடுத்துக்கூறும் திருவிளையாடற் புராணம் கூறுவது இது.

மதுரை நோக்கி வரும் மக்கள், மதுரை நெருங்கி விட்டது என்பதை, அம்மாநகரில் எழுப்பும் பல்வேறு ஒலிகளும் ஒன்றுகலந்து பொருள் விளங்காப் பேரொலியாய்வந்து ஒலிக்கக்கேட்டு உணர்ந்துகொள்வர். அத்தகைய ஒலி அலைகள் ஓயாது எழும் வண்ணம் மக்கள் கூட்டம் மண்டிவாழ்வது மதுரைமாநகரம். இறைவன் திருக்கோயில்களிலும், அரசன் அரண்மனையிலும் எழும் முரசொலியும், செந்தழல் ஓம்பும் அந்தணர்களின் நான்மறை ஒலியும், அருள்நெறி நிற்கும் முனிவர்களின் மந்திர ஒலியும், வேந்தனும் வீரர்களும் பெற்ற வெற்றிகுறித்து மக்கள் எடுக்கும் விழாவொலியும், அரசன் நாற்படை வரிசையில் நிற்கும் வேழங்களின் பிளிற்றொலியும், குதிரைகளின் கனைப்பொலியும், போர்க்களமும், ஏர்க் களமும் பாடும் பொருநர்களின் பாட்டொலியும் ஆகிய பல்வேறு ஒலிகளும், மதுரைநோக்கி வருவாரை, அவர்கள் சேய்மைக்கண் வரும்போதே, வருக வருக என வரவேற்கும்.*

மக்கள் மதுரையை நெருங்க நெருங்க, மதுரை மாநகரின் பல்வேறு மணங்களையும் நுகரத் தொடங்கி விடுவர். மதுரை மாநகரத்து மகளிரும் மைந்தரும் மகிழ்ந்து பூசிக்கொள்ளும் அகில், குங்குமம், கத்தூரி, சந்தனம் முதலாம் மணப் பொருள்களின் மணத்தையும், மைந்தர் மார்பிலும், மகளிர் கூந்தலிலும் அணிந்து

* சிலம்பு: 13: 137-150.

கொள்ளும் சண்பகம், மல்லிகை, முல்லை, மாதவி முதலாம் மலர் மாலைகளின் மணத்தையும், அறுசுவை உணவாக்கும் அட்டிற்சாலையிலும், அப்பம் சுடும் அங்காடி வீதியிலும் எழும் பல்வேறு மணத்தையும், மாடங்களில் எழுப்பும் அகில் முதலாம் மணப் புகைகளின் மணத்தையும், அரசனும் அரசியாரும் அகமகிழ்ந்து பூசிக்கொள்ளும் அருள்நெறி மேற்கொண்ட அறவோர்களையும் அடிமையாக்கவல்ல அழகிய மணத்தையும் வாரிக்கொண்டு வந்து வீசும் மதுரைக் காற்று, "மக்காள்! நீங்கள் கருதிச் செல்லும் மாநகர் சேய்மைக்கண் இல்லை; நனிமிக அணித்தாயிற்று" என அறிவித்து, அவர்களை வரவேற்கும்.†

குரவம், கோங்கு, வேங்கை, வெண்கடம்பு, சுரபுன்னை, மஞ்சாடி, மருது, செலுந்தில், செருந்தி, சண்பகம், பாதிரி, குருக்கத்தி, செம்முல்லை, முசுட்டை, மோசி,மல்லிகை, வெண்நறுந்தாள், வெட்பாலை, பிடவம், இருவாட்சி எனும் பன்னிறமலர்கள், நன்னிற ஆடையென மேலே படர்ந்து, தண்ணீரைமறைத்துத் தவழ்ந்து செல்ல, கோங்கு,வேங்கை, முதலாம் மரங்கள் வளர்ந்த மணல் மேடுகள் இடையிடையே இடம் பெற, இரு கரையிலும் நிற்கும் முருக்க மரமும், முல்லைக்கொடியும் செம்மலரும் வெண்மலரும் சொரிய, கயல்மீன்கள் கண்ணெனத் தோன்றி ஆடித்திரிய அறல்பட்ட கருமணல், கூந்தலெனக் காட்சி நல்க ஓடிவரும், பொய்யா வளம் வழங்கும் வையையாறு, மதுரையின் வடகிழக்குப் பகுதிகளை வளைத்துஓடி, அம்மாநகரின் ஒருபால் அரணாய்

† சிலம்பு 13: 115-133.

விளங்கிற்று.*

வையையாறு, மக்கள் வழங்கலாகா ஆழம் உடை யது; அதனால், மதுரை மாநகர்க்கு வடநாட்டினின்றும், வருவார், வையை இடையூறின்றிக் கடந்து வருவதற்கு ஏற்ற எண்ணற்ற ஓடங்கள் நிற்கும் துறைகள் பல இரு கரையிலும் அமைந்திருந்தன. குதிரை முகம் போலவும், யானை முகம் போலவும், சிங்க முகம் போலவும் பண்ணப்பட்ட அவ் வோடங்கள் ஆற்றைக் கடந்து செல்லும் காட்சி காண்பார் கண்களுக்குக் களிப்பூட்டும் கவின்மிகு காட்சியாம்.†

வையையாற்றைக் கடந்து வந்தால், நகரின் நாற் புறமும் வளர்ந்திருக்கும் காவற்காடு, பகைவர் படை எளிதில் புகாவாறு தடுத்து நகரைப் பாதுகாத்து நிற்கும். காவற்காடுகளைக் கடந்து சென்றால் வருவது, மதுரை மாநகரின் புறநகர்; தாமரைப் பொய்கையும், தண் ணறும் சோலைகளும், நெல்லும் கரும்பும் விளையும் நன்செய்களும் நிறைந்த அப்புறநகர், இயற்கையோடு இரண்டறக் கலந்துறையும் இன்ப வாழ்வினரான அற வோர்களின் வாழிடமாம்; ஆங்கு அவ்வறவோரல்லது, பிறர் எவரும் சென்று வாழ்தல் இயலாது. அறவோர்கள் வாழும் அறப்பள்ளிகளும், அவர் வணங்கும் திருமால் கோயிலும், இயக்கிபோலாம் சிறு தெய்வக் கோட்டங் களும் மிக்கது அப்புறநகர்; கடவுள் வழிபாட்டுணர்வு மிக்க மதுரை மக்கள், காலையிலும், மாலையிலும், மதிலைக் கடந்து புறநகர் போந்து, ஆங்குக் கோயில் கொண் டிருக்கும் கடவுளரை வழிபட்டுச் செல்வர்.‡

---

* சிலம்பு 13: 155-170.
† சிலம்பு: 13: 176-179.
‡ சிலம்பு: 13: 191-196; 15: 115-116; 18: 3-5.

புறநகரையும் அகநகரையும் இடை நின்று பிரிப்பன, அகழியும் மதிலும். காவற்காட்டை அழித்து மேல்வரும் பகைவர் படை, மதிலைத் தாக்கிப் பாழாக்காவாறு தடுத்து நிறுத்துவது அகழி. வையையாற்று நீராலும், நகரின் மாடங்களிலிருந்தும் மனைகளிலிருந்தும் ஓடிவரும் கழிநீராலும் நிறைந்த அவ்வகழி, எளிதில் கடக்கலாகா அகலமும், ஆழமும் உடைத்து. கருநிறக் குவளையும் செந்நிறத் தாமரையும், வெண்ணிற ஆம்பலும் மலர்ந் துள்ளமையால், அவ்வகழி, கழிநீர் தந்த நாற்றம் அற்று மணம் வீசும் மாண்பும் உடைத்து*.

அகழிநீர் அலைக்க, நகரை வளைத்து நெடிய மதிற் சுவர் நிற்கும். விண்ணுற உயர்ந்து அகழலாகா அகலமும், அழிக்கலாகாத் திண்மையும் வாய்ந்து விளங்கும் அம்மதில்கள். அகழியைத் தூர்த்துப் பகைவர் படை, தன்மீது பாயுமாயின், அந்நிலையில் அவர் படையைப் பாழாக்கும், தாமே இயங்கவல்ல இயந்திரப் படைகள் எண்ணற்றன பொறுத்தப் பெற்றிருக்கும்.†

நகரின் உள்ளே நால்திசைக் காற்றும் நன்கு நுழை தற்கேற்ற நெடிய வாயில்கள் நகரின் நாற்புறமும் அமைந் திருக்கும்; பகைவென்று மீளும் பாண்டிநாட்டு வேழப் படை, வென்று உயர்த்திய வெற்றிக்கொடிகளோடும் புகுதற்கேற்ற உயர்வுடையன அவ்வாயில்கள்; மலையைக் குடைந்து பண்ணினாற்போலவும், மழை மேகம்படிந்த மலைகளைப்போலவும் தோன்றும் நெடிய அவ்வாயில்கள், என்றும் வெள்ளம் வற்றாது விளங்கும் வையையாறு போல், மக்கள், இரவு பகல் எப்பொழுதும் இடையறாது

---

* சிலம்பு: 13: 183–184.

† மதுரைக்காஞ்சி: 352; சிலம்பு: 15: 207–17.

வழங்கும் மாண்புடைய.*

வாயிற்றலையில், மதுரைமன்னன் மாற்றலரைவென்று பெற்ற வெற்றிகளை விளக்கிக்காட்ட, நாள்தோறும் நாட்டியகொடிகள் வரிசையாக நின்று பறக்கும். நான்கு வாயில்களிலும், வாளேந்திய யவனவீரர்கள், இரவுபகலாக இருந்து காவல் புரிவர். அவர் காவலைக்கடந்து அகநகர் புகுவது அரிதினும் அரிதாம். அகநகர் வாழ்வார் புறநகர் போகவும், புறநகர் வாழ்வார் அகநகர் புகவும் வாயில்கள்தோறும், அகழியின் குறுக்கே சுருங்கை வழிகள் அமைக்கப்பெற்றிருக்கும். வாயிலைக் கடந்து செல்லும் மாவும் மாக்களும் எண்ணிக்காண இயலாப் பெருந்திரளினராதலின், அச்சுருங்கைகள், யானைப்படை புகினும் பாழாகாத் திண்மை உடையவாமாறு அமைக்கப்பெற்றிருந்தன.†

மதுரைமாநகரின் அகநகர்த்தெருவுகள், அகன்றும் நீண்டும் ஆறுபோலும் காட்சி நல்கும் அழகுடையவாம்; அதனால் அத்தெருவுகள், காற்று எக்காலத்தும் வீசும் வாய்ப்புடைய; அத்தெருவுகளில், தென்றலும் வாடையும் தடையின்றிப் புகுந்து உலாவும்.‡

வாயிலைக்கடந்து, அந்நகர்க்குட் செல்வார், முதற்கண் அடியெடுத்துவைப்பது, நகரத்துக் செல்வக்குடியில் பிறந்த நம்பியர் விரும்பும் பரத்தையர் வீதி. பரத்தையர் அப்பெருங்குடிச் செல்வரோடு புறநகர் புகுந்து, பொழிலாடியும் புனலாடியும் மகிழ்தற்கு வாய்ப்பளிக்கும் வண்ணம், அவர் வாழும் வீதி, புறநகரை அடுத்து

---

* நெடுநல்வாடை: 87–88; மதுரைக்காஞ்சி: 356.
† சிலம்பு: 15: 217; 14: 63–67:
‡ நெடுநல்வாடை: 30; சிலம்பு: 14:70; 122–123.

அமைந்திருந்தது.*

பரத்தையர் வீதியை அடுத்துவரும் பெரிய வீதிகள் இரண்டும் நாடாளும் மன்னவன் காணத்தக்கனவும், நாட்டில் வாழும் மக்கள் காணத்தக்கனவுமாய் இரு வகைக் கூத்துக்களிலும் வல்ல கூத்தியர் வாழும் இடங்களாம்.†

கூத்தியர் வீதியைக் கடந்தால் வருவது தொழிலாளர் வாழிடம். சங்கை அறுத்துக் கைவளை முதலியன கடைந்து தருவாரும், தூயமணிகளுக்குத் துளையிட்டுத் தருவாரும், உருக்கி வார்த்த பொன்னால் அணி பல ஆக்கி அளிப்பாரும், பொன்னை உரைத்து நோக்கி, மாற்றும் மதிப்பும் காண்பாரும், ஆடை நெய்து அளிப்போரும், செம்பால் கலம்புனைவாரும், கச்சும், குச்சும் கட்டித் தருவாரும், மலர் வகையும், மணப் புகைவகையும் அறிந்து தருவாரும், ஓவியரும், இவர்போலும் பிற தொழிலாளர்களும், நகரின் அப்பகுதியில் ஒன்று கலந்து வாழ்ந்திருப்பர்.‡

தொழிலாளர் வாழும் வீதியை அடுத்து, அவர்கள் தொழில் புரிந்து அளித்த பல்வகைப் பொருள்களும் விற்கும் நாளங்காடி அமைந்திருந்தது. ஆங்கு வகை வகையான வண்டிகள், வட்டைகள், தேர்மொட்டு, மெய்க்கவசம், அங்குசம், தோலால் ஆன கையுறை போலும் போர்க்குப் பயன்படும் பொருள்கள், அரியாயோகம் முதலாம் மருந்து வகைகள், குழியம் முதலாம் மணப்பொருள்கள், வெண்மயிர் விசிறி, பன்றி முதலாம்

---

* சிலம்பு: 14: 70–145.
† சிலம்பு: 14: 146-167.
‡ மதுரைக் காஞ்சி: 511–518.

உருவம் வரைந்த ஓவியப் படங்கள், குத்துக்கோல், செம்பாலும், வெண்கலத்தாலும் வனையப்பெற்ற புதுப் புதுக் கலங்களை, மாலை வகைகள், வெண்சங்கை வாளால் அறுத்துப் பண்ணிய பல்வகைப் பொருள்கள், தந்தத்தைக் கடைந்து தந்த கணக்கற்ற பொருள்கள், மணம் வீசும புகைதருபொருள்கள், மேனிக்கும் மயிருக்கும் பூசும் சாந்து வகைகள் என்பன போலும் இனம் விளங்கா எண்ணற்ற பொருள்கள் குவிந்து கிடக்கும்.*

அங்காடி வீதியை அடுத்து, அதற்கு இனமான, பல்வேறு வணிக வீதிகள் வரிசையாக அமைந்திருந்தன. முதலில் நிற்பது நவமணிக் கடைவீதி. மரகதம், மாணிக்கம், முத்து, பளிங்கு, பவளம், புருடராகம், வயிரம், வயிடூரியம், கோமேதகம் என்ற நவமணிக் குவியல்களும், அவற்றின் வகை தெரிந்துரைக்கும் மக்கள் தொகையும் ஆங்கு மண்டிக்கிடக்கும்.†

நவமணிக் கடைவீதியை அடுத்து, அம்மணிகளை அழுத்தி அணிகலன் ஆக்கத்துணைபுரியும் பொன்விற்கும் பொன் வாணிகர்வீதி அமைந்திருந்தது. ஆங்குச் சாத ரூபம், கிளிச்சிறை என்ற மாற்றுக்குறைந்த இளம்பொன் வகையும், ஆடகம், சாம்பூநதம் என்ற மாற்று மிகுந்த பெரும் பொன்வகையும் விற்கப்பெறும்; வாங்கவருவார், இன்ன இடத்தில் இன்னபொன் உளது என்பதை எளிதில் உணர்ந்துகொள்ளுமாறு, அதை அறிவிக்கும் நால்வேறு கொடிகளும் ஆங்காங்கே நின்று பறக்கும்.‡

---

* சிலம்பு: 14: 168-179.

† சிலம்பு. 14: 180-200.

‡ சிலம்பு: 14: 201—204.

பொன்வாணிகர் வீதியை அடுத்து வருவது அறுவை வீதி ; ஆங்கு நூலாலும், மயிராலும், நுண்ணிய பட்டாலும், இனத்திற்குப் பலநூறு வகையாக நெய்யப்பெற்ற ஆடைகள் அடுக்கிவைத்து விற்கப்பெறும்.*

ஆடைகள் விற்கும் அறுவை வீதியை அடுத்து, உணவிறகுப் பயன்படும் பல்வகைப் பொருள்களும் விற்கும் பலசரக்குக் கடைவீதி அமைந்திருக்கும். ஆங்கு, நெல்லரிசி, புல்லரிசி, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என்ற ஈரெண்வகை கூலப் பொருள்களும் குவியல், குவியல்களாய்க் கொட்டி வைக்கப்பெறும். மிளகுப்பொதிகளும், பாக்குப்பொதிகளும், காலமல்லாக் காலத்தும் வந்து அவண் குவியும் ; நிறுக்கும் துலாக்கோலும், அளக்கும் மரக்காலும் உடையராய தரகர், ஓரிடத்தே நிற்கமாட்டாது ஓடி ஓடித்திரிந்து வாணிகம் புரிவர்†.

வாணிகவீதிகளுள் கடைசியில் இருப்பது காயும்கனியும் விற்கும் மாலைக் கடைவீதி. கூலவாணிகர் வீதியில், சோறுஆக்க உதவும் உணவுப்பொருள்களை வாங்கியவர், கறிக்கு உதவும் காய்கறிகளை வாங்கிச்செல்ல வாய்ப்பளிக்கும் வகையில், அவை விற்கும் கடைவீதி; கூலவீதியைஅடுத்து அமைக்கப்பெற்றது. ஆங்கு, மா, பலா, வாழை முதலாம் கனிவகைகளும், வாழை, வழுதுணம், பாகல்போலும் காய்வகைகளும், வள்ளிபோலும் கிழங்கு வகைகளும், பருவத்தே மழைபெய்யத் துளிர்த்துவளர்ந்த வகைவகையான கீரைகளும், கற்கண்டுக் கட்டிகளும்

---

* சிலம்பு 14 : 205—207.
† „ 14 : 208—211.

விற்கப்படும். வெளியூர் வணிகர்க்கு, இறைச்சிகலந்து ஆக்கிய இனிய சோற்றினை விற்கும் வாணிகமும் ஆங்கு நடைபெறும்.*

வாணிக வீதிகளை யெல்லாம் கடந்து சென்ருல், நகரின் நடுவே அந்தணர்களும், அமைச்சர்களும், அரசரோடொத்த பெருஞ் செல்வர்களும்; அரசர்க்கு மகட்கொடை அளிக்கும் உரிமைபெற்ற உயர்ந்த வேளாளர்களும், அரசர்களும் வாழும் அழகிய மாளிகைகள் ஆங்காங்கே காணப்படும். நகரின் இடையிடையே, மூன்று வீதிகளும் நான்கு வீதிகளும் வந்துகூடும் சந்திகளிலும், சதுக்கங்களிலும், மன்றங்களும், பொதியில்களும், ஆன்ருேர் உறையும் அறங்கூர் அவைகளும அமைந்திருக்கும்.

மக்களும், மன்னவனும் வாழும் மனைகளுக்கும், மாடங்களுக்கும், மன்றங்களுக்கும் இடையிடையே, ஏற்புடைய இடங்களில் எல்லாம் கடவுளர் உறையும் கோயில்கள் காணப்படும. மதுரைமாநகரில், சிவனுக்கும், செவ்வேளுக்கும், திருமாலுக்கும், பலதேவனுக்கும் எடுத்த கோயில்கள் எண்ணற்றன உள.†

மதுரைமாநகரம், ஒரு பெரிய வாணிக நிலயமாதலோடு, அது ஒரு பேரரசின் தலைநகரும் ஆம். அதனுல் அந்நகரத்து வீதிகளில் வந்து குவிந்து நிற்கும் பல நாட்டு மக்களுக்கு, அரசன் நாற்படையால், அவ்வப்போது இடையூறு உண்டாவதும் உண்டு. வேந்தன் படைகள், அவ்வீதிகளில் பலகால் போவதும் வருவதும் செய்யும். வீதிகளில்திரிந்து விலைகூறி விற்கும் சிறுவணிகர் கூட்டமும், அவ்வணிகர்களைச் சூழ்ந்துநின்று வாணிகம் புரியும்

---

* மதுரைக்காஞ்சி : 527—544.

† சிலம்பு : 14 : 6—10.

மக்களும், அரசன் நாற்படை அவ்வீதியுள் வரக்கண்ட வுடனே, தம் உயிரிழந்து போனாற்போல் அஞ்சி, அலறிப் புடைத்து, அங்கும் இங்கும் ஓடி, வீதியின் இருமருங்கும், மலையென உயர்ந்து நிழல்தந்து நிற்கும் மாடங்களில் ஒடுங்கி, அவற்றின் நிழலில் ஒதுங்கியிருந்து, படைஅகன் றதும், பழையபடியே வீதியில் புகுந்து வாணிகம்புரிவர்.*

பெருவெள்ளம் வந்து பாய்வதால் பெருகாமல், மழை மேகம் குடிப்பதால் குறையாமல் என்றும் தன் னிலையில் திரியாது விளங்கும் கடல்போன்றது மதுரை. அரசியல் பணிகுறித்தும், வாணிகவளம் கருதியும் வரு வாரும், போவாரும் மல்கிய மதுரைமாநகரும், வாழும் மக்கள்தொகையில் எக்காலத்தும், எவ்வித மாற்றமும் பெறுவதில்லை. ஆங்கு மக்கள் தொகையில் மாற்றம் நிகழ்வதுமில்லை.†

மதுரை மாநகரின் மாலைத்தோற்றம், மனமகிழ்ச்சி தரும் மாண்புடைத்தாகும். நாகரிகம் மிக்க நம்பியர், தம்மை ஆடை அணிகளால் அழகு செய்துகொண்டு, காற்றெனக் கடுக ஓடும் குதிரைகள் மீது அமர்ந்து, வீதிகளில் உலாவந்து, ஆங்காங்குள்ள அழகு நலங் களைக் கண்டு மகிழ்ந்து திரியும் காட்சியும், அகன்ற வீதிகளின் இருமருங்கும் வானளாவ உயர்ந்த மாளிகை களின் மேல் மாடத்தில் இருந்தவாறே, நகர் அழகைக் கண்டு மகிழும் மகளிர் முகங்கள், அம் மாளிகையில் ஏற்றிய கொடிகள் காற்றால் ஆடுந்தொறும், மறைந்து மறைந்து, கருமேகத்தினிடையே புகுந்து புகுந்து வெளிப்படும் வெண்மதி போல் தோன்றும் காட்சி

---

* மதுரைக்காஞ்சி: 375—406.

† ,, 424—429.

யின்பமும், மதுரை வீதிகளின், மாலைககாலத்து மறக்க வொண்ணு மாண்புகளாம்.*

ஞாயிறு மறைந்து இருள் பரவத் தொடங்கியதும், மனையுறை மகளிர், மாடங்களில் விளக்கேற்றி வைத்து, இல்லுறை தெய்வங்களுக்கு மலர் தூவி, மணப்புகை காட்டி வழிபடுவர். நாடக மகளிரும், அவர் நலம் விரும்பும் நகர நம்பியரும் ஆடியும் பாடியும் அகமகிழ்வர். மகவீன்ற மகளிர், மூதாட்டியர் துணைவரச் சென்று, தம் மாசுபோகக் குளத்தில் நீராடி மீள்வர். முதற் சூல்உற்ற தன் மகள் இனிதே மகவீன்று மாண்புறுதலை வேண்டும் தாய், வேலனையும் தேவராட்டியையும் வரவழைத்து வெறியாடி வழிபாடாற்றுவள். ஊர் மன்றங்களில் குரவைக் கூத்து ஓயாது. நாற்சந்தி களிலும், முச்சந்திகளிலும் பேச்சு மேடைகளில் சொற் பொழிவும, இசையரங்குகளில் இசை விழாவும், நாடக மேடைகளில் நாடகமும் நடை பெற, மதுரை மக்கள் கண்டும் கேட்டும் களித்துச் செல்வர். இரவின் முன் யாமம் இவ்வாறு இனிதே கழியும். பின்னர் ஊரில் சங்கு, ஒலி அடங்கும். வணிகர் தம் கடைகளைத் திரை யிட்டு அடைத்து உறங்கப்போவர். அப்ப வணிகர், விடிந்ததும் அப்பம் சுடுதற்கு வேண்டும பாகு, பருப்பு, கற்கண்டு, கரைத்த மாவு இவற்றைப் பதம் பண்ணி வைத்துவிட்டு, அவற்றின் அருகிலேயே கிடந்து உறங்கத் தொடங்குவர். திருவிழாக்களில் தெருக் கூத்தாடும் கூத்தர், தம் கூத்து முடிந்து உறங்கப்போவர்; ஊரே ஒலி அடங்கி உறங்கும். இடையாமத்தில் மதுரையைக் காண்பார்க்கு, அது, பகலெல்லாம் ஓயாது ஒலித்த அலை

* மதுரைக்காஞ்சி: 431-452.

அடங்கி உறங்கும் கடல்போல் தோன்றும்.*

ஒரு நாட்டில் வாழும் எல்லோரும் நல்லோராய் வாழ்வர் என எதிர்பார்த்தல் இயலாது. அந் நாடு எவ்வளவுதான் நல்லாட்சி நிலவும் நாடாயினும், அந் நாட்டிலும் ஒரு சில தீயோர் வாழ்வர். மதுரை, மாநிதி விளங்கும் ஒரு மாபெரும் நகரம். அதனால், அந்நகர் ஒரு சில கள்வர்க்கும் வாழிடம் வழங்கியிருந்து. கரு நிற மேனியும், கல்லையும் மரத்தையும் துளைக்கும் கன்னக் கோலும், எதிர்த்தாரைத் தாக்க ஏந்திய நீண்ட வாளும், காலில் செருப்பும், கையில் நூலேணியும் உடைய அக் கள்வர், தக்க சமயததில் தம்மைக் காத்துக்கொள்ள உதவும் உடைவாளை ஆடைமேல் செருகி, அது தெரியா வாறு, அதன்மீது கச்சணிந்து, களவாடற்கேற்ற காலமும் இடமும் கருதி, ஊரெல்லாம் உறங்கும் இரவின் இடை யாமத்தில், மதுரை வீதிகளில் மறைந்து திரிவர். மதுரை மன்னன், ஆளும் முறையறிந்த அறிஞனாதலின், அக் கள்வரை அவர் அறியாமல் அஞ்சாது பின்தொடர்ந்து சென்று, அவர் வாழிடம் அறிந்து கைப்பற்றி, மாநகர் மக்களையும், அவர் மாநிதியையும் காக்கவல்ல காவல் வீரரைப் பெற்றிருந்தான். களவு நூல் வல்ல அக் காவலர், பேயும் உறங்கும் நள்ளிரவிலும் உறங்காது, பெருமழை பெய்யும் காலத்திலும் ஓயாது திரிந்து காவல் புரிந்தனர். அதனால், மதுரை மக்கள், மனக்கவலையற்று அயர்ந்து உறங்கி இரவைக் கழித்தனர்.†

இரவுப்பொழுது இவ்வாறு இனிது கழியப் பொழுது புலரும் விடியற்காலையில், மதுரை மாநகர், மீண்டும்

---

* மதுரைக்காஞ்சி. 555-630.

† ,, 632-653.

உயிர் பெற்று எழும். அந்தணர் ஓதும் வேத ஒலி, தேன் தேடித்திரியும் வண்டுகள் எழுப்பும் இன்னொலி போல் எங்கும் வந்து இசைக்கும். யாழ்ப்பாணர் மனைகளில் மருதப்பண்ணொலி கேட்கும; பாகர், யானைகளுக்கு உணவூட்டும் ஒலி உரக்க ஒலிக்கும்; குதிரைகள் எழுந்து புல்லும் கொள்ளும் உண்ணும்; கடை வீதியில், பணியாளர் கடைகளை மெழுக்கித் துப்புரவாக்குவர்; கட்கடைகளில் தொழில் தொடங்கிவிடும். மனைகளில், துயில் ஒழிந்து தொழில் தொடங்கிய மகளிர், கதவுகளைத் திறக்கும் ஒலி மனைதோறும் ஒலிக்கும். நாழிகை உணர்த்துவார், விடிந்தது பொழுது என விளம்புவர். அரசன் கோயிலில் பள்ளி எழுச்சி முரசு, இமிழ் எனும் ஒலி எழ முழங்கும். கோழிச் சேவல்கள் கூவும்; அன்னச் சேவல்கள், தம் பேடுகளை அழைக்கும்; மயில்கள் அகவும்; களிறுகள் பிளிறும்; வலிய கூட்டில் வாழும் கரடியும் புலியும் முழங்கும். செல்வர் மனை முன்றில்களில், முன்னாள் தூவிய மலர்களின் வாடல்களை, அம்மனையுறை மகளிர், இரவு தம் கணவரோடு ஊடியக்கால் உதிர்ந்த முத்துக்களோடும், அணிகளோடும் அகற்றி அவ்விடங்களை அழகு செய்வர். மதுரை வீதிகளின் வைகறை வனப்பு இத்தகைத்து.*

மதுரை, பாண்டி நாட்டின் தலைநகர்; பாண்டியர் தலைநகர்கள் கடல்கோள் போலும் காரணங்களால் பாழாகும் போகூழ் உடைய; அந்நிலை மதுரைக்கும பொருந்திற்றுப் போலும். அதனால், அது வையையாற்று வெள்ளபபெருக்கில் ஆழ்ந்து ஒரு முறையும், கற்புடைத் தெய்வமாம் கண்ணகியால் எரியுண்டு ஒரு முறையும்

---

* மதுரைக்காஞ்சி: 654-686.

ஆக இரு முறை அழிவுற்றது. ஆனல், மதுரையைப் பண்டு அமைத்த அரசர், நகர் அமைப்பின் முறையெலாம் உணர்ந்து, நலமெலாம் அமைய அமைத்தமையால், அது, பல முறை அழிவுக்குள்ளாகியும், பழைய பாண்டியர் தலைநகர்கள் போல் அறவே அழிந்து போகாது, தமிழ் நாட்டின் தலைசிறந்த நகராய் இன்றும் நின்று நிலை பெறுகிறது.

# 5. உறையூர்

பாண்டிநாட்டுத் தலைநகர், தொடக்கத்தில் கடல் கொண்ட நாட்டு மதுரையாய், இடைக்காலத்தில் கபாட புரமாய், இறுதியில் இக்கால மதுரையாய் மாறி மாறி வந்ததைப் போன்றே, சோணுட்டுத்தலைநகரும் மாறி மாறி வந்துளது. கரிகாலன் காலத்தில், புகார், சோணுட்டின்தலைநகராய்த் திகழ்ந்தது. அவன் காலத்திலேயே, தலைநகராம் தகுதியினைப் பெறுதற்கேற்ப, உறையூர் கோட்டையும் கோயிலும் உடையதாக அமைக்கப்பெற்றது. அவனுக்குப்பின், அதுவே சோணுட்டின் தலைநகர் ஆயிற்று. பிற்காலச் சோழர்காலத்தில், தலைநகர்த்தகுதியை உறையூர் இழந்துவிட்டது. அது தஞ்சைக்கு மாறிற்று; தஞ்சையும் நிலைத்த தலைநகராய் வாழவில்லை. சோழர்களுள் சிலர், சிலகால் சிதம்பரத்தையும், சிலகால் காஞ்சியையும் தலைநகராகக் கொண்டனர்.

பாண்டியர் தலைநகர் ஒவ்வொன்றும, முன்னையது அழிந்தபின்னரே, பின்னது அமைக்கப்பட்டது; ஆனால், சோணுட்டுத் தலைநகர்கள் அவ்வாறு அமையவில்லை. ஒன்று இருக்கும்போதே மற்றொன்று அமைக்கபபெற்றுளது. பாண்டியர் தலைநகராய்த்திகழ்ந்த நகரங்களுள், இன்று மதுரை ஒன்றே உளது; ஏனைய இரண்டும் அழிந்துவிட்டன; இந்நிலைக்குமாறாக, சோணுட்டுத்தலைநகராய்த் திகழ்ந்த நகரங்களுள், புகார் ஒன்றே அழிந்து போக, ஏனைய அனைத்தும் அழியாதே உள்ளன.

கரிகாலன் காலத்திலும், அவனை அடுத்து அறியனை

ஏற்போர்காலத்திலும் சோணாட்டிற்குச் சேரநாடும், பாண்டிநாடும் மட்டுமே பகை நாடுகளாம். அதனால், அப்பகைவரை அடக்க, அவர் நாடுகளுக்கு அணித்தாகத் தலைநகர் அமைத்தனர். அந்நிலை மாறிற்று; பிற்காலச் சோழர் காலத்தில். பல்லவர், இராட்டிரகூடர், சாளுக்கியர் என்ற வடநாட்டு அரச இனங்களே சோணாட்டுப் பகைவர்களாய் வந்து வாய்த்தனர். அதனால், அப்பகையைத் தாங்கவும், தாக்கி அழிக்கவும், அச்சோழர் தலைநகர், மெல்ல மெல்ல வடக்கு நோக்கி வந்துவிட்டது போலும்.

கடல்வாணிகம் வளர்த்த வளமார்நகராய் விளங்கிய புகார், ஒரு சிலகாலம் சோணாட்டின் தலைநகராய்த் திகழ்ந்தது என்றாலும், சோணாட்டின் நிலைத்த தலைநகராய்ச் சங்ககாலத்தில் விளங்கியது உறையூர் ஒன்றே; தமிழ் அரசர் மூவர் தலைநகர்களையும் ஒரு பாட்டில் வைத்துப்பாராட்டிய இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார், "குட்டுவன், வருபுனல் வாயில் வஞ்சி," "செழியன் தமிழ்நிலைபெற்ற தாங்கருமரபின், மகிழ்நனை மறுகின் மதுரை," "செம்பியன் ஓடாப்பூட்கை உறந்தை"* எனச் சோணாட்டுத் தலைநகராக உறந்தை ஒன்றையே கூறியுள்ளார்.

இளங்கோவடிகள், "மாட மதுரையும், பீடார் உறந்தையும், கலிகெழு வஞ்சியும், ஒலிபுனல்புகாரும்"† எனப் பாராட்டிய அடிகளில், சோணாட்டு நகரங்களாக உறையூர் புகார் இரண்டையும் கூறியுள்ளார் எனினும்,

---

* சிறுபாணாற்றுப்படை: 49-50; 65-67; 82-83.

† சிலம்பு: 8: 3-4.

உறையூரைத் தமிழரசர்களின் தலைநகர்களுக்கிடையே வைத்து, அவற்றோடொப்பக்கூறி, சோணாட்டுநகர் என்ற உரிமையால், உறையூரோடு உடன்வைத்துக் கூற வேண்டிய புகாரை, அவ்வாறு கூறாது, பாண்டிநாட்டுத் தலைநகர் மதுரைக்கும், சேரநாட்டு தலைநகர் வஞ்சிக்கும் இடையில் சோணாட்டுத் தலைநகர் என்ற உரிமைவாய்ந்த உறையூரைக் கூறியபின்னர், புகாரைப்பிரித்து வேறு கூறியது, அவர் காலத்தில், சோணாட்டுத் தலைநகராய்த் திகழ்ந்தது உறையூரே என்பதை உறுதி செய்வதாகும்.

சோணாட்டின் தலைநகராய் விளங்கிய புகார், கடல் வாணிகம் வளர்ந்த பின்னர், வாணிகப் பெருநகராய் மாறிவிட்டது; வாணிகம் கருதிவந்த வெளிநாட்டு மக்கள் வாழ்வால், ஆங்கு இடநெருக்கம் உண்டாயிற்று. காவிரி சூழக் கடலை அடுத்து இருந்த அந்நகர் எல்லையை மேலும் விரிவுபடுத்த இயலவில்லை. வளரும் மக்கள் பெருக்கத் திற்கு வாழிடம் தேடவேண்டியதாயிற்று; அக்குறைபாடு கண்டு கலங்கினன் அன்று சோணாட்டு அரியணையில் வீற்றிருந்த கரிகாற் பெருவளத்தான்.

கரிகாலன் போர்வெறி மிக்கவன்; போர்நுணுக்கம். அறிந்த அவன், பகைநாடுகளைச் சென்றுதாக்கும் அண்மையில் தன் படைத்தளம் இருக்கவேண்டும் என எண்ணினன். சோணாட்டின் ஒரு கோடியில் இருக்கும் புகார், அதற்குத் தகுதியுடையதன்று எனக் கருதினன். மேலும், சோணாட்டின் பகை நாடுகளாய் பாண்டிநாடும் சேரநாடும்,காவிரியின் தென்பால் திசைக்கண் உள்ளன. அப்பகை நாடுகள்மீது போர்தொடுத்துச் செல்லும் தன் படைகளை, இடையறாது பெருக்கெடுத்தோடும் காவிரி யாறு பல முறை தடுத்து நிறுத்தித் தான் எண்ணியதை

எய்தவிடாது தடைசெய்வது கண்டு பலமுறை கலங்கிய கரிகாலன், தலைநகர், காவிரியின் தென்கரையில் இருந்தால் மிகுதியும் நலமாம் என எண்ணினான். அது, தலைநகரை, வேறு தக்க இடத்தில் அமைக்கவேண்டும் என்ற அவன் கருத்திற்கு ஊக்கம் ஊட்டிற்று. சோணாட்டின் நடுநாயகமாய் விளங்கும் இடத்தைத் தேடத் தொடங்கினான். அக்கருத்தோடு, காவிரியின் எதிர்முகமாகச் சில காவதம்சென்று, காவிரியைக்கடந்து அதன் தென்கரை அடைந்தான். ஆங்கு அவன் கண்ட காட்சி, அவ்விடத்தையே, தலைநகர்க்குரிய இடமாகத் தேர்ந்தெடுக்கத் தூண்டிற்று.

கரிகாலன் காவிரியின் தென்கரையை அடைந்த பொழுது, ஆங்கு ஒரு கோழியும் ஒரு யானையும் போரிட்டுக் கொண்டிருந்தன. கோழியும் கோழியும் போரிடுவதும், யானையும் யானையும் போரிடுவதும் உலகியல்; அப் போர்க் காட்சிகளை அவனும் கண்டுளான்; ஆனால், கோழி, வேழத்தோடு போரிடுவது, ஒரு புதுமை; அது போல் நிகழ்ச்சியை, அவன் அது வரை கண்டதில்லை; அதனால் அப்போர்க் காட்சியை, ஆர்வமும் வியப்பும் மிகக் கண்டு நின்றான். போரின் முடிவு, அவன் வியப்பை அதிகமாக்கிற்று. கோழி, வேழத்தை வென்றது; களிறு தோற்றுத் தொலைந்தது. கோழியின் வெற்றி கண்டு வியந்த வேந்தன், சிறிது நேரம் அதுவே நினைவாய் நின்று, இறுதியில், அவ்வெற்றி, கோழியின் ஆற்றலால் வந்ததன்று; அது அக்கோழி வாழும் நிலத்தின் ஆற்றலால் நேர்ந்தது; அம் மண்ணில் முளைக்கும் புல்லும் போர் வெல்லும் எனத் துணிந்தான். படை அமைத்துப் பகை வெல்லத் துணை

புரியும் தலைநகரை அமைக்கத்தக்க இடம் தேடி வந்த கரிகாலன், அதற்கு அவ்விடமே, தக்க இடமாம் எனக் கருதினன்; அவ்விடத்தில் எழுப்ப எண்ணிய நகருக்கு, அந் நிகழ்ச்சியை நினைவூட்ட, கோழி என்றே பெயர் சூட்டினன். கோழியின் மற்றொரு பெயராய வாரணம் என்ற பெயராலும் அது வழங்கிற்று.*

தலைநகர் அமைத்தற்குக் காவிரியின் தென்கரைக் கண்ணதாகிய அவ்விடமே ஏற்றதாம் எனக் கருதிய கரிகாலன், முதற்கண், ஆங்குக் காடென வளர்ந்திருந்த மரம் செடி கொடிகளை வெட்டி அகற்றினன்; பின்னர், மக்களும் மாவும் வாழ்தற்குத் தண்ணீர் இன்றி யமையாதது எனக் கண்டு, குளங்கள் பல தோண்டினன்; நிலவளமும் நீர்வளமும் உடையதாக ஆக்கிய பின்னர், ஆங்கு, மக்கள் வாழ, வானளாவ உயர்ந்து விளங்கும் மாடங்களையும் மனைகளையும் கட்டினன்; அரசனும் அவன் வணங்கும் கடவுளும் இருத்தற்கு அரண்மனையும், ஆலயமும் அமைத்தான்; வாழிடம் பெறமாட்டாது வருந்திய தன் சோணாட்டுக் குடிமக்களைக் கொண்டுவந்து குடியேற்றினன்.

---

* "முறம்செவி வாரணம முன்சமம் முருககிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்."

"யானையைக் கோழி முருககலால் கோழியென்று பெயரா யிற்று; யானையைச சயித்த கோழி தோன்றினவிடம் வலியுடைத் தென்று கருதி அவவிடத்தை அதன் பெயராலேயே சோழன ஊர்காண்கின்றபொழுது" "முற்காலத்து ஒரு கோழி யானை யைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி என்பது பெயராயிற்று."

—சிலம்பு: 10: 247–48; அரும்பத, அடியார்க்கு-நல்லார் உரைகள்.

அவ்விடத்தை இவ்வாறு மக்கள் வழங்கும் மாநக ராக ஆக்கிய பின்னர், அதற்கு அரண் அமைக்கத் தொடங்கினான்; நகரைச் சூழப் பெரிய மதில் அமைத் தான்; அம்மதிலில் ஆங்காங்கே, பெருவாயிலும் சிறு வாயிலும் அமைத்தான்; மதில் உச்சியில், அகத்துள வீரர் நின்று போரிடற்கு ஏற்றவாறு, ஏவறைகளையும், ஆங்கு அவ்வீரர்க்கு வேண்டும் அம்புகளைச் சேர்த்து வைக்கும் அம்புப் புதைகளையும் அமைத்தான். உறை யூர்க் கோட்டை, இவ்வாறு, அரணுக்குரிய அத்தனை உறுப்புக்களையும் குறைவறப் பெறவே, ஆங்கு நிறுத்தி வைக்கப்பெற்ற சோழர் படை, "பகைவர் பலர்; யாமோ துணையிலேம்; ஆகவே, போரிடும் துணிவு எமக்கு இல்லை" என அடங்கிவிடாது, "பகை எத் துணைப் பெரிதாயினும், அஞ்சாது பொருது அழிப்பேம்" என்று இறுமாந்து கூறவல்ல ஆற்றல் உடையதாயிற்று. அழிக்கலாகா அரணும், அவ்வரணை நின்று காக்கவல்ல பெரும் படையும் பெற்ற உறையூர்க் கோட்டையில், வெற்றித் திருமகள், விரும்பி வீற்றிருக்கத் தொடங் கினாள்.*

---

* "காடுகொன்று, நாடாக்கிக்,
குளம் தொட்டு, வளம் பெருக்கிப்,
பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்,
கோயிலொடு குடி நிறீஇ,
வாயிலொடு புழை அமைத்து,
ஞாயில்தொறும புதை நிறீஇப்,
பொருவேம் எனப் பெயர்கொடுத்து
ஒருவேம் எனப புறக்கொடாது
திரு நிலைஇய பெருமன் எயில்"
—பட்டினப்பாலை: 283-291.

கரிகாலனைப்பாடிப் பதினாறு நூறாயிரம் பசும்பொன் பரிசில் பெற்ற புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், உறையூர்க்கோட்டை அமைத்த கரிகாலன் பெருஞ் செயலைத் தாம் பாடிய பட்டினப்பாலையுள் வைத்துப் பாராட்டியுள்ளார்.

சோழநாட்டின் சிறந்த படைத்தளமாக விளங்க வேண்டும் என்ற விருப்பத்தின் விளைவாகவே, உறையூர் அமைக்கப்பெற்றது. அதற்கேற்ப, அந்நகர் அரணுள், கடல்போல் பரந்த ஒரு பெரிய படை, பகைவர்மீது எந்நேரத்தில் வேண்டுமாயினும், போர்தொடுத்து எழு தறகேற்ப, எக்காலத்தும் நிறுத்தப் பெற்றிருந்தது. அவ்வாறு நிறுத்தப்பெற்ற படையுள், சோணாட்டின் தலை-சிறந்த யானைப்படையும் ஒன்று. அப்படையைச்சேர்ந்த யானைகள், உறையூரில் கோயில்விழாக் குறித்தும், கொற்றவை விழாக்குறித்தும், மனைகளில் நடைபெறும் மங்கல மணவிழாக்குறித்தும் எழும் முரசொலி கேட்பினும், அதைப் போர்முரசின் ஒலி எனக்கொண்டு போர்வெறி கொள்ளும் பெருமையுடையவாம்; உறந்தை நகரின் இப்படைப் பெருமையும், இப்படையைச்சேர்ந்த களிறுகளின் தோற்றமும் புலவர்களால் பாராட்டப்பெற்றுள்ளன.*

படைத்தளமாக விளங்கும் அந்நகரைப் பகைவர்

---

* "கடலங் தானைக் கைவண் சோழர்
கெடலரும் நல்லிசை உறந்தை" —அகம்: 369.

"கைவல் யானைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப படப்பை உறந்தை" —அகம்: 385.

"யானை, நெடுநர் வஹரப்பில் படுமுழா ஓர்க்கும்
உறந்தை." —புறம்: 68.

பாழ்செய்ய முனைவர் என்ற அச்சம், அதை அமைக்கும் பொழுதே எழுந்தது. அதனால், அந்நகர் அரணைப், பகைவர் எளிதில் அணுகாவாறு, அதைச்சூழக் காவற் காட்டினை வளர்த்திருந்தனர்; சிறு குன்றுகளை இடை இடையேகொண்டு, பெரும்பாலும் நொச்சி மரங்களே வளர்ந்திருந்த அக்காவற்காடு, பகைவர்க்குப, பாய்ந்து உட்புகலாகாப் பெருந்தடையாய் அமைந்தது. புலவர் பாராட்டைப் பெறும் பெருமை, அக்காவற்காட்டிற்கும் வாய்த்தது.*

உறையூர், சோழர்களின் படைகிற்கும் நகராக விளங்கியமையால், உறையூரையும், அவ்வூர்க்கு உரிய சோழரையும் ஒருங்குவைத்துப் பாராட்டிய புலவர்கள் அனைவரும், "அடுபோர்ச்சோழர் அறங்கெழு நல்லவை உறந்தை," "மறங்கெழு சோழர் உறந்தை"† எனச் சோழர்களின் போர்வீரம் தோன்றவே பாராட்டிப் பாடியுள்ளனர்.

பொறையாறு என்ற ஊர் புறந்தை எனத் திரிந்து வழங்குவதுபோல், உறந்தை எனவழங்கும் உறையூர், மக்கள் வாழும் வானளாவும் மாடங்களாலும், அரசர் வாழும் அரண்மனையாலும் சிறப்புடைத்து. அதன் மாட மாளிகைகளும் மன்னவன் கோயிலும், பிறர் எளிதில் புகலாகா அரிய காவல் உடையவை; பாடிப் பரிசில் பெறும் பாணன், பொருநன் முதலாம் இரவலர்களுக்கும,

---

* "நொச்சிவேலித் தித்தன உறநதைக
கல்முதிர் புறஙகாட்டன்ன
பன்முட்டின்று" —அகம: 122.

† அகம்: 93; நற்றிணை. 400.

புலவர்களுக்கும் எளியவாய அவை, பகைவர் புகுதற்கு அரியவாம்.

உறையூர்ச் சோழனுய கோப்பெருஞ் சோழனின் உயிர் ஒத்த நண்பராய பிசிராந்தையார் என்ற பாண்டி நாட்டுப் புலவர், அன்னத்தைத் தூதுவிடுத்துப் பாடிய அழகிய பாட்டில், "குமரித்துறையில் அயிரை மீன் உண்டு, இமயம் நோக்கிச்செல்லும் அன்னமே, இடை வழியில், சோணுட்டில் உயர்ந்த மாடங்கள் நிறைந்த ஒரு மாநகர் தோன்றும்; அதுவே உறையூர்; என் நண்பன் உறையும் ஊரும் அதுவே; அது அரிய காவல் உடையது; ஆனுல், நீ, அவன் நண்பனும், புலவனுமாய நான் அனுப்பும் தூது ஆதலின், வாயில் காவலர்க்கு வருகையை உணர்த்தாதே உட்புகுந்து சோழனைக்கண்டு நலம் கூறிப் போவாயாக" எனக் கூறியிருப்பது, அந்நகர்க் காவலின் அருமை பெருமை தோன்றத் துணைபுரிவது அறிக.*

காவிரியின் தென்பால் அமைந்த உறையூர், அவ் யாற்றிற்கு நனிமிகச் சேய்மைக்கண் அமையாது, அக் காவிரியாற்றுப் பாய்ச்சலால் வளம்பெற்ற வயல்களும் தோட்டங்களும் நிறைந்த அதன் கரைக்கு அணித்தாகவே அமைந்திருந்தது. புகார்போன்ற, காவிரியின் வடபால் நகரங்களில் வாழ்வார், உறையூரை எளிதில் அடைவதற்கு ஏற்றவாறு, காவிரியில், அன்று அணை அமையவில்லை. மக்கள், காவிரியை ஓடங்களில் ஏறிக்

---

* "சோழ நன்னுட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக் குறுமப்பறை அசைஇ
வாயிலவிடாது கோயில் புக்கு" —புறம்: 67.

"பிறங்குநிலை மாடத்து உறந்தை" —புறம்: 69.

கடந்தே உறையூர் அடைந்தனர்; 'புகார் நகரத்தினின்றும் புறப்பட்ட, கோவலன், கண்ணகி, கவுந்தி ஆகிய மூவரும், காவிரியின் வடகரை வழியே சில காவதம் சென்று, பள்ளி ஓடம் ஏறிக் காவிரியைக் கடந்து, அதன் தென் கரை சேர்ந்தனர்' எனச சிலப்பதிகாரம் கூறுவதும் காண்க.*

அவ்வூர் அருகே ஓடும் காவிரி ஆழம் மிக்கது. சில காலங்களில், ஓடக்கோலும் நிலைபெற மாட்டாது ஆழ்ந்து போகுமளவு, நீர்மட்டம் உயர்ந்துவிடுதலும் உண்டு.†

காவிரி வெள்ளப் பாய்ச்சலால் வளம் மிக்க நன்செய்கள் சூழ நடுவே நின்ற உறையூர்க்கு உணவுப் பஞ்சம் உண்டாவதில்லை; நெல் வயல்களே நல்ல அரணாக அமைந்த அம் மாநகரில் நெற்கூடுகள், மலை போல் நிறைந்திருக்கும காட்சி, நின்று காணப் பேரழகு தரும்; அந் நெல் வளத்தைப் புலவாகள் நாவாரப் பாராட்டியுள்ளனர்.‡

---

* "குடதிசை கொண்டு கொழுமபுனல காவிரி
வடபெரும் கோட்டு மலர்பொழில் நுழைந்து
காவதம் கடந்து."

"காரணி பூம்பொழில காவிரிப் பேர்யாறறு
நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதரும் கணவனும மாதவத் தாட்டியும்
தீதுநீர் நியமத் தென்கரை எயதி."
—சிலம்பு: 10. 34-36: 214-217.

† "காவிரிப படப்பை உறநதை" —அகம்: 385.
"உறந்தை யாஙகண்
கழைநிலை பெறூஉக் காவிரி நீத்தம்" —அகம்: 6.

‡ "வெணணெய் வேலி உறந்தை" —புறம்: 352.
"பிணட நெல்லின் உறநதை" —அகம்: 6.

நாற்படைப் பெருமையும், நெல் வளப் பெருக்கமும் மிக்க ஒரு நகரத்தில், செல்வமும் சிறந்து விளங்கும் எனச் சொல்லவேண்டியதில்லை. பொன்னும் பொருளும் குவிந்திருந்தன; நவமணியும், எண்வகைக் கூலமும் எங்கும் நிறைந்தன; வளம் கொழிக்கும் வேறு நகரங்களைக் கூறுங்கால், உறையூரையே உவமை காட்டிக் கூறுமளவு, அது உயர்ந்து விளங்கிற்று.*

உறையூரின் வளம் பெருகுதற்குப் பெருந் துணை புரிந்தது, அந்நகரின் நெய்தற்றொழிலே; உறையூர் ஆடைகள், உரோம் நகரத்து உயர்ந்து செல்வர்களால் உவந்து வாங்கப்பெற்றன; "ஆர்கரடிக்" (**Argaritic**) என அவர்களால் அழைக்கப்பெற்ற உறையூர்ப் பூந்துகில்கள், உரோமப் பேரரசின் பொன் வளத்தையே பாழாக்குமளவு அந்நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டன; உறையூரின் அறுவை வாணிகம், தம் நாட்டுச் செல்வம், அவ்வாடையின் வரவால் சீரழிவது கண்டு, உரோம் நாட்டு ஆட்சியாளர், அவ்வாணிகத்தைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் இயற்றுமளவு வளர்ந்து வளம் தந்தது என மேலை நாட்டு சில நூல் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

"சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" என்றார் ஒரு பெரும் புலவர்; ஒரு நாடோ அல்லது நகரமோ, அமைதி நிலவும் நல்வாழ்வு வேண்டின், ஆங்கு, அறிவன அறிந்து அறவழி காட்டும் ஆன்றோர் பலர் வாழ்தல் வேண்டும்; வாழும் மக்கள் உள்ளத்தை வளம் உடைய

---

* "உறந்தை அனன
நிதியுடை நனனகா" —அகம்: 369.
"உறந்தை அன்ன
பொன்னுடை நனனகர்" —அகம: 385.

தாக்கும் ஆற்றல் அவர்க்கே உண்டு; மக்கள், மனவளம் அற்றவராயின், ஆங்கு நிலவளமும், நிதிவளமும் நிறைந்திருப்பினும் பயன் இல்லை; நல்வாழ்விற்கு வேண்டும் அமைதி ஆங்கு நிலவாது; அது மனவளம் ஒன்றினாலேயே உண்டாம்; ஆகவே, அம்மனவளம் உண்டாக்கும் மாண்புடைப் பெரியோர் வாழ்வு நனிமிக இன்றியமையாது; உறையூர், இதிலும் குறைபாடுடையதன்று; ஆன்றோர் பலர் அந்நகரில் வாழ்ந்திருந்தனர்; பழந்தமிழ்ப் பாடல்கள் மட்டும் பதின்மர் பெயரை நமக்கு அறிவிக்கின்றன. இளம்பொன் வணிகனார், ஏணிச்சேரி முடமோசியார், கதுவாய்ச் சாத்தன், சல்லியன்குமரன், சிறுகந்தன், பல்காயன், மருத்துவன் தாமோதரன், முடவன், முதுகண்ணன் சாத்தன், முதுகூத்தன், முதுகொற்றன்; இவர்களே அப்பதின்மர்.

புலவர் பெருமக்களின் வாழிடமாக விளங்கிய உறையூரில, உலக மக்களுக்கு உய்யும்நெறி காட்டும் அருகனை வழிபட்டு அறமுரைக்கும் சமணச் சான்றோர்களும் வாழ்ந்திருந்தனர். மதுரை நோக்கிச் செல்லும் கோவலனுக்கும் கண்ணகிக்கும் வழித்துணையாய் வந்த கவுந்தி அடிகள் எனும் மூதாட்டியார், அவர்களோடு உறையூரில் ஒரு நாள் தங்கியபொழுது, ஆங்கிருந்த நிக்கந்தன் கோயிலுக்குச் சென்று, ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் அருகனை வணங்கிய பின்னர், ஆங்கிருந்த சமண முனிவர்களுக்குத், தாம் அறிந்த சில சமய உண்மைகளை உணர்த்தினார் எனச் சிலப்பதிகாரம் கூறுவது அறிக.

உறையூர், அறிவன அறிந்த ஆன்றோர்களும், அறம் உரைக்கும் சமணச் சான்றோர்களும் வாழும் இடமாய்

விளங்கினமையால், அவ்வூர் மக்கள், அறவுள்ளம் வாய்க்கப்பெற்று விளங்கினர். ஆங்குள்ள அறங்கூர் அவைகள், நீதி வழங்குவதில் நெறி பிறழாவாயின; உறையூர் அவைக்குச் சென்றால், குறை தீர்க்கப்படும்; முறை வழங்கப்பெறும்; ஆங்கு அறமுறை கெடாது என மக்கள் மனதார நம்பினர்; நம்பியதோடு அதை நாடறியக் கூறி, அவ் அவைகளை நாவாரப் பாராட்டினர்.*

அழிக்கலாகா அரண், போர் வல்ல பெரும் படை, பெரிய பெரிய மாளிகைகள், நீர்வளம், நெல் வளம், நல்ல பல தொழில் வளம், இவ்வளங்களால் பெறலாம் பொன்வளம், ஆன்றோர் வாழ்வு, அறங்கெடா அவை எனப் பல நலம் பெற்று விளங்கினமையால், உறையூரின் புகழ் உலகெலாம் பரவிற்று; "கெடலரும் நல்லிசை உறந்தை", "செல்லா நல்லிசை உறந்தை"† என்றெல்லாம் புலவர்கள் அதன் புகழ் பாடிப் பாராட்டியுள்ளனர்.

---

* "கோதைதாழ் பிண்டிக் கொழுநிழல இருந்த
ஆதியில் தோற்றத்து அறிவினை வணங்கிக்
கந்தன் பள்ளிக் கடவுளர்க்கு எல்லாம்
அந்தில் அரங்கதது அகனபொழில் அகவயின
சாரணர் கூறிய தகைசால் நனமொழி
மாதவத் தாட்டியும் மாணபுற மொழிந்து."
—சிலமபு: 11: 3-8.

"அறஙகெழு நலலவை உறநதை." —அகம்: 93.

"உறந்தை அவையத்து
அறம்கெட அறியாது" —நற்றிணை: 400

"உறநதை அவையத்து
அறம் நின்று நிலையிற்று" —புறம: 39.

"அறம் துஞ்சு உறந்தை." புறம: 58.

† "அகம். 369; புறம்: 395.

# 6. வஞ்சி

**வை**கைக் கரையில் மதுரை, காவிரிக்கரையில் உறையூர் எனப், பாண்டி நாட்டுத் தலைநகரமும், சோணாட்டுத் தலைநகரும் பேராற்றங்கரைகளில் இடம் பெற்றிருத்தலைப்போன்றே, சேரநாட்டுத் தலைநகராய வஞ்சியும் ஒரு பேராற்றங்கரையிலே இடம் பெற்றிருந்தது. வஞ்சிமாநகர்க்கு வளம்தந்த பேராறு, பொருநை, ஆன் பொருநை, தண்பொருநை, தண்ணான் பொருநை எனப் பலவாற்றான் அழைக்கப்பெறும்.

பொருநையாற்றுப் பாய்ச்சல் வஞ்சிக்குப் புகழ் அளித்தது. வற்றாப்பெரு வெள்ளம் பாயும் பொருநை, வஞ்சிமா நகரை வளைத்து ஓடி, அந்நகர்க்கு இயற்கை அரணாய் அமைந்தது. பொருநையாற்றுநீர், வஞ்சியின் புறமதிலுக்கு முத்தம் தருதல்போல் பலகால் மோதிப் பாய்ந்தோடும் காட்சி, காண்டற்கு இனிது. கருவூர் என்ற பிறிதொரு பெயர்பூண்ட வஞ்சிநகர்த் துறையில், ஆன்பொருநைநீர் அடித்துக்கொணர்ந்து குவிக்கும் தூய வெண்மணலில், வஞ்சி மக்கள், மாலைக்காலத்தில் விரும்பி வந்து வீற்றிருந்து வீடு திருமபுவர். வஞ்சிமா நகரின் வஞ்சிக்கொடியார், தம் திண்ணைகளில் அமர்ந்திருப்பார் போல், அம்மணல்மேட்டில் இருந்து, தம் கை வளை ஒலிக்கக் கழங்காடி மகிழ்வர்.* இவ்வாறு வஞ்சிமா

* "தணபொருநைப் புனல் பாயும்
விண்பெருபுகழ் விறல்வஞசி." —புறம். 11.

"வருபுனலநீர் ஆன்பொருநை
சூழ்தரும் வஞ்சி." —சிலம்பு. 29.

நகரின் வளம்பெருக்கி, அரண் அளித்துப் புகழ் பரப்பியும், மணல் குவித்து, அந்நகர் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டியும் ஓடிற்று அவ்வான் பொருநை.

ஆன் பொருநை யாற்றைக்கடந்து கரையேறியவர், காவற்காட்டைக் கடந்த பின்னரே வஞ்சிமாநகரை அடைதல் இயலும். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்ற சோழன், கருவூர் எனவழங்கப்பெறும் வஞ்சிமாநகரை, ஒரு காலத்தில் முற்றியிருந்தான் அது கண்ட புலவர் ஆலத்தூர்கிழார், அவ்வளவன்பால் சென்று "வளவ! உன் வீரர்கள், தொழில் செய்து செய்து காய்ப்பு ஏறிய கைகளைக்கொண்ட கொல்லர் வாளரம்கொண்டு வடித்துக் கூர்மையாக்கிய கோடாலி களால், கருவூர்க் கோட்டையின் காவற்காட்டு மரங்களை வெட்டிவீழ்த்துகின்றனர்; மணம்கமழும் மலர்களை நிறையக்கொண்ட, காவற்காட்டின் நெடிய மரங்கள் நிலையழிந்து, அக்காவற்காட்டை அடுத்து ஓடும் ஆன்பொருநை யாற்றில் வீழ்ந்து, ஆங்கு, வெள்ளநீர் குவித்துச்சென்ற வெண்மணலைச் சிதறப் பண்ணுகின்றன. கோடாலி வீழ்ந்து வெட்டும் ஓசை, மதிலகத்திலுள்ள மன்னவன் காதுகளில் சென்று பாய்கிறது. இவ்வாறு காவற்காடு அழிபடுவதைக்கண்டும், அவன் சினந்து செருமேற் கொண்டுவரக் கருதிலன்; அத்தகையானொடு, மேலும்

---

" வஞ்சிப புறமதில் அலைகக்கும்
கலலென் பொருநை." —புறம்: 387
திருமாவியன்நகர்க் கருவூர முன்துறைத்
தெண்ணீர் உயர்கரைக்குவை இய
தண்ணான் பொருநை மணல்" —அகம: 93.
"மகளிர், பொலஞ்செய் கழங்கில தெற்றியாடும்
தண்ணான் பொருநை" —புறம்: 36.

அமர்கொண்டு நிற்றல், ஆண்மையும் ஆற்றலும் வாய்ந்த அரசர்க்கு அறமோ, அழகோ ஆகாது எனக்கூறிய அறிவுரையால், கருவூர்க் கோட்டையில், காவற்காட்டின் இடமும், இயல்பும இனிது விளங்குவது அறிக.*

வஞ்சிமா நகரத்துப் புறநகர், ஏனைய நகரத்துப் புறநகர்களைப்போலவே காவற்காட்டிற்கும், மதிலைச்சூழ இருந்த அகழிக்கும் இடையே அமைந்திருந்தது. கடவுளர் உறையும் கோயில்களுக்கும், தவநெறி மேற்கொண்ட துறவிகளும், அறநூல் பல அறிந்து அறிவு வாய்நத ஆன்ரோர்களும், மக்களை மாண்புடையராக்கும் மதிநலம் வாய்ந்த பாக்களைப் பாடவல்ல புலவர்களும் வாழ்தற்கு ஏற்ற அறப்பள்ளிகளுக்கும், அவர்கள் இருந்து அறிவாராய்ச்சி மேற்கொள்ளும் மேடைகளுக்கும், புறநகர் அகநகர்மக்கள் பொழிலாடியும், புனலாடியும் மகிழ்தற்கேற்ற தண்மலர்ச் சோலைகளுக்கும், தாமரைப் பொய்கைகளுக்கும் இடமாய், அது விளங்கிற்று. †

---

* "தண்ணுன பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம பாய்தலின் நிலையழிநது
வீகமழ் நெடுஞசினை புலம்பக, காவுதொறும்
கடிமரம் தடியும ஓசை, தனனூர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப
ஆஙகு இனிது இருந்த வேநதன்." —புறநானூறு. 36

† "தேவகுலமும, தெற்றியும, பள்ளியும,
பூமலர்ப் பொழிலும, பொய்கையும் மிடைந்து,
நற்றவமுனிவரும், கற்றடஙகினரும்,
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளஙகிய எயிற்புற இருக்கை."
—மணி: 26: 72-76.

வஞ்சி மாநகரை வளைத்து நிற்கும் கோட்டைக்கு, அரண் அளித்து நிற்பது காவற்காடு; ஆகவே, அக் காவற்காட்டினைக் காப்பதில் அரசர்கள் கருத்துடையராய் இருந்தனர்; அதனால் காவற்காட்டைக் காக்கும் வீரர்களை, அக்காவற்காட்டை அடுத்திருக்கும் புறநகரில் வாழவைத்தனர்.

தம்மோடு நட்புடையராய் வாழும் பிறநாட்டு வேந்தர்கள், தம் தலைநகர்க்கு வந்து, தம்மோடு சில நாள் வாழ்தலும் உண்டு; அவ்வாறு வரும் வேந்தர்கள் நண்பர்களேயாயினும், வேற்று நாட்டினரே; வேற்று நாட்டு வேநதர்களைத் தலைநகர் அகத்தே வாழவைத்தல், அரசியல் அறிவுடைமை ஆகாது; அது, தம் படை, பணவளங்களை அவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பளிப்பதாகும்; அது தம் ஆட்சிக்கு ஆக்கம் அளிப்பதாகாது. அதனால், அவ்வேந்தர்களை வரவேற்று இருக்க வைக்கும் விருந்தினர் மாளிகைகளை, வஞ்சி வேந்தர், புறநகரில் அமைத்தனர்.*

கங்கைக் கரைக்கண் நிகழ்ந்த போரில் தோற்று, கண்ணகிச் சிலைக்கு வேண்டும் கல் சுமந்து வந்து சிறைப்பட்ட கனகவிசயர் என்ற வடநாட்டு வேந்தர்களைக், கண்ணகிக்குக் கோயில் கட்டிச் சிலை நாட்டிச் செய்யும் விழாவின் நினைவாய் விடுதலை செய்து, விழா முடியுங்காறும வைத்திருந்து, அவர்க்கு வேண்டுவன எல்லாம் விரும்பி அளித்து அன்பு காட்டி அனுப்பும் பெரும் பணியைத் தன் பெரும் படைத் தலைவனைய

* ' வேற்று மன்னரும, உழிஞைவெம படையும்
போற்புறம சுற்றிய புறககுடி''

—மணி: 28: 3-4.

வில்லவன் கோதைபால் ஒப்படைத்த செங்குட்டுவன், அவர்களை, வஞ்சி மாநகரை வளைத்திருந்த மதிலைச் சூழ அமைந்திருந்த அகழிக்கும் அப்பால், புறநகரில், பூஞ் சோலைகளுக்கிடையே அமைந்திருந்த, வேண்மாடம் அல்லது வேளாவிக்கோ மாளிகை எனப் பெயர் பூண்ட விருந்தினர் மாளிகையில் வாழவைக்கும் வண்ணம் பணித்தான் எனச் சிலப்பதிகாரம் செப்புவது அறிக.*

புறநகர் மக்கள் அகநகர் புகினும், அகநகர் மக்கள் புறநகர்வரினும், அகழியைக் கடத்தல் வேண்டும். அரண் கருதி அமைக்கப்பட்ட அகழி, அவ்வரணகத்து மக்களின் வாழ்க்கைத் துணையாயும் விளங்குதல் வேண்டும் என அவ்வேந்தர்கள் விரும்பினர்; அதனால், அவ்வகழியில், அடியிட்டாரைக் கவ்வி ஈர்த்துக் கொன்று உயிர்போக்கும் கொடுமை வாய்ந்த கராம், இடங்கா போலும் முதலை இனங்களை வளர்த்ததோடு, மீன்களை விடுத்து அகழி நீர் தூய்மையுறவும் துணைபுரிந்தனர். மக்களின் மனைகளினின்றும் கழித்துவிடப்படும் கழிநீர், நகரில் கண்ட கண்ட இடங்களில் தேங்கி, நகர்வாழ மக்களை நோய்க்கு உள்ளாக்கா வண்ணம், அந்நீரெல்

ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சிமூதூரப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளாவிக்கோ மாளிகை காட்டி
நன்பெரு வேள்வி முடித்ததற் பின்னாள்
தம்பெரும் நெடுநகர் சாரவதும் சொல்லி, அம்
மன்னவர்க்கு ஏற்பன செய்க நீ என
வில்லவன் கோதையை விருப்புடன் ஏவி"
—சிலம்பு: 28-195–202.

லாம் தான் ஏற்று, நகரின் நோய்போக்கும் நல்ல மருத்துவனாகவும் விளங்கிற்று அவ்வகழி; அம்மட்டோ! கழிநீர் தேங்கிக் காணவும், அணுகச் சென்று நிற்கவும் இயலாவாறு, முடைநாற்றம் வீசும் அவ்வகழியில் அழகும மணமும் வாய்ந்த அல்லி, தாமரை முதலாம் மலர்க் கொடிகளை வளர்த்து, அதைக் கண்ணும் மனமும் விரும்பும் காட்சியுடையதாக மாற்றி மகிழ்ந்தனர்.*

மனைகளில், மகளிர் நீராடிக் கழித்த நீரும், ஊர்ப் பொது விடத்தில் உள்ள, வேண்டுமளவு நீரை நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறி அமைந்த குளத்தில், நகர நம்பியரும், நங்கையரும், குளித்து எழுந்தொறும் எடுத்துவிடப்படும் நீரும், மன்னவன் பிறந்த நாள் விழாவில் வருவார்மீது வீசிய வாசனை நீரும், அருளறம் மேற்கொண்ட ஆன்றோர்களை வணங்கி வரவேற்பார், அவர் அடிகளைக் கழுவிவிடுக்கும் நீரும், அருள் உள்ளம் பெற்ற பெரியோர்கள், ஆங்காங்கே வைத்து நடாத்தும் அறச்சாலைகளில், வருவார் உண்ணுங்கால் ஒழுகிய மணம் நாறும் உண்ணுநீரும், அகில் ஆரம் முதலாம் அறுவகை மணப் பொருள்களை யும் ஒன்றுகூட்டி அரைத்து விடுத்த நீரும், நகரின் நடுவே நின்று தேங்காது, நகர வீதிகளின் ஓரத்தே அமைந்த கழிநீர்க் கால்வாய்கள் வழி ஓடி, நகர்ப் புறத்தில் ஒன்று சேர்ந்து, இறுதியில் அகழியில் வீழ்ந்து, அவ்வகழி நீரோடு ஒன்று கலக்குமாறு, நகரெங்கும் ஒன்றோடொன்று இணைந்து கிடக்கும், சிறியவும் பெரிய வுமான கழிநீர்க் கால்வாய்களை மண்ணுக்கடியில்

* மணிமேகலை: 28: 17-2?.

பொருத்தி வைத்தனர்.*

அகநகரைச்சூழ, அகழிநீர் அலைக்க அமைந்திருந்த மதில் அகழலாகா அடி அகலமும், அழிக்கலாகாத் திண்மையும், ஏணியிட்டு ஏறலாகா உயர்வும், அரணகத்து வீரர், அகத்திருந்தவாறே, புறத்தே சூழ்ந்து கிடக்கும் பகைவர் படையை அம்பு ஏவி அழிக்குமாறு ஏவறைகள் அமைத்ததற்கேற்ற தலையகலும் வாய்ந்தது அம்மதில். அம்மட்டோ; அம்மதிலில், பகைவர் கண்ணிற்குப் புலனாகாவாறு, பலவகைப்பட்ட பொறி படைகளும், ஆங்காங்கே பொருத்தி வைக்கப் பெற்றிருந்தன. †

நகரின் நாற்புறமும் அமைந்திருந்த வாயில்கள், பலநிலைகளைக் கொண்ட மாடங்களோடும், அம்மாடங்கள் மீது ஏற்றிய வில்பொறித்த கொடிகளோடும் நின்று, வெண்ணிறச் சுண்ணம் பூசப்பெற்று வெள்ளி மலையை இடையே குடைந்து வழிகண்டாற்போலும் காட்சி அளிக்கும். சிற்பமும், ஓவியமும, அம்மாடங்களுக்கு மேலும் சிறப்பையளித்துத் திகழ்ந்தன. ‡

வாயிலைத் தாண்டி நகருக்குள்ளே செல்வார், வாயிலைக் காக்கும் வீரர்கள் வாழும வீதிகளையும், மீன், உப்பு, கள், அப்பம், பிட்டு ஆகிய ஏழை மக்களின் உணவுப் பொருள்களை விற்கும் சிறுவாணிகர் வீதிகளையும், வாசனைப் பொருள்களை விற்போர் வீதியையும், இறைச்சி வணிகர் வாழும் வீதியையும், மண்கலம் வினையும் குயவர்களும், செப்புக் கலம் செய்யும் செம்பு கொட்டிகளும், வெண்கலம் வினையும் கன்னரும், பொற்கொல்ல

* மணிமேகலை : 28 : 5—17.
† ,, 28 : 23—24.
‡ ,, 28 : 25—28.

ரும், தச்சரும், பாவை பண்ணும் சிற்பியும், ஆடை ஆக்கித் தரும் தையற்காரரும், மலர் மாலை கட்டித் தருவோரும், காலம் அறிந்து கூறும் காலக் கணிதரும், யாழ் இசைக்கும் பாணர்களும் வாழும் வீதிகளையும், சங்கறுத்து வளையல் முதலாயின செய்வோர் வீதியையும், நவமணித் தொழிலாளர் வீதியையும், நாடகக் கணிகையர் வீதியையும், நெல், புல் முதலாம் எண்வகைக் கூலங்கள் குவிந்து கிடக்கும் கூல வீதியையும், நின்று வாழ்த்தவும், இருந்து வாழ்த்தவும் உரிமை வாய்ந்த சூதர், மாகதர், வேதாளிகர் வீதிகளையும், கண்ஒளிநுழையா நுண்ணிய நூலால் ஆன மெல்லிய ஆடைகளை விற்போர் வாழும் அறுவையர் வீதியையும், நால்வகைப் பொன்னின நலந்தெரிந்து விற்கும் பொன் வணிகர் வீதியையும், நவமணி வணிகர் வீதியையும், அந்தணர் சேரியையும், அரச வீதியையும், அமைச்சர் முதலாம் அரசியில் துணைவர்களின் வீதிகளையும் வரிசையாகக் கடந்து சென்றால் நகரின் நடுவே, அரசன் பெருங் கோயிலைக் காண்பர். *

வெள்ளி மாடம் எனப் பெயர் பூண்ட, வஞ்சி மாநகரத்து அரசன் பெருங்கோயில், அந்நகரின் நடுவே, நாற்புறமும், வாணிக வீதி முதலாம் பல்வேறு வீதிகள் சூழ்ந்து கிடக்க, பொன்னால் வேயப்பட்டு, நீர் சூழ்ந்த உலகின் இடையே, நனிமிக உயர்ந்து விளங்கும் மாமேரு மலைபோல் மாண்புறத் தோன்றும். †

நகரின் இடையிடையே, நான்கு தெருவு கூடும் சதுக்கங்களிலும், மூன்று தெருவு கூடும் முச்சந்தி

---

* மணிமேகலை : 28 : 29—58.

† சிலம்பு : 25 : 4—5 ; 28 : 47—50.

களிலும், நிழலும், நிறைந்த பழங்களும் தரும் மரங்கள் வளர்ந்த மேடைகளும், வெளியூர் மக்கள் வந்து தங்குவதற்கேற்ற பொது மன்றங்களும், அமைந்திருக்கும்; அகநகரில், அரசன் கோயிலுக்கு அணித்தாக, குதிரைகளையும், யானைகளையும் பழக்கப் பயன்படும் செண்டு வெளிகளும் காணப்படும். அரசனும், அவன் மனைவியும் சென்று மகிழ்தற்கேற்ற, அருவி வீழும் அழகிய செய்குன்றும், இளமரக்காவும், தாமரைக் குளமும், அவ்விடங்களை அடுத்து இடம் பெற்றிருக்கும். இவற்றோடு, அறச்சாலைகளும், அழகிய பொன்னம்பலங்களும், தவப்பள்ளிகளும் அவ்வகநகர்க்கு அணி செய்து கிடக்கும்.*

அறநூல் கேட்கும் அவாவுடையவராய், அந்நகருக்கு வரும் பலநாட்டு அடியார்களும், அவர்களுக்கு அறம் உரைக்கும் அடிகளாரும் இருக்கத்தக்க, இந்திர விகாரம் எனப் பெயர் பூண்ட புத்தன் கோயில் ஒன்றும் அவ்வஞ்சி மாநகரில் விளங்கிற்று.†

கண்ணகி கணவன் கோவலனுடைய ஒன்பதாம் தலைமுறைப் பாட்டனாகிய கோவலன் என்பான், சாரணர்பால் அறம் கேட்டு, அருள் உள்ளம் மேற்கொண்டு, தன் முன்னோர் வைத்துச் சென்றனவும், தான் ஈட்டி வைத்தனவுமாய தன் பெரும் பொருளை வருவார்க்கு வழங்கிய பின்னர், தான் இருந்து துறவறம்

* மணிமேகலை : 28 : 59—67.

† "அந்தரசாரிகள் அமர்ந்து இனிது உறையும்
இந்திரவிகாரம் என எழில்பெற்று
நவையறு நாதன் நல்லறம் பகர்வோர்
உறையும பள்ளி." —மணிமேகலை : 28: 69—72.

மேற்கொள்வதற்கு என அமைத்த புத்தன் கோயில் ஒன்றும் அவ்வஞ்சிமாநகரில் இடம் பெற்றிருந்தது. *

கங்கைச் சடைமுடிக் கண்ணுதலும், நீள் நிலம் அளந்த நெடுமாலும் வீற்றிருக்கும் கோயில்கள் இரண்டும அந்நகர்க்கு அழகு தந்து நின்றன. வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்ற செங்குட்டுவன், செல்லும் முன்னர், சிவன் கோயிலார் அளித்த திருவடிப் பேற்றினைத் தலையிலும், திருமால் கோயிலார் அளித்த திருவடிப் பேற்றினைப் புயத்திலும் ஏற்றுக் கொண்டான் எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. †

வஞ்சிமாநகர், ஒரு பேரரசின் தலைநகர்; அதனால்

---

* 'நினபெரும தாதைக்கு ஒன்பது வழிமுறை
முன்னோன் கோவலன மன்னவன தனககு
நீஙகாக் காதற் பாங்கன் ஆதலின்,
தாங்கா நல்லறம் தானும் கேட்டு
முன்னோர் முறைமையின் படைததனை அன்றித்
தனனுன இயனற தனமபல கோடி
எழுநாள் எல்லையுள் இரவலர்ககு ஈத்துத
தொழுதவம புரிந்தோன சுகதற்கு இயற்றிய
வானோங்கு இமையத்து வால்ஒளிச சயித்தம
ஈனோர்ககெல்லாம் இடர்கெட இயனறது''
—மணி : 28 : 123—32.

† ''ஆடகமாடத்து அறிதுயில அமர்ந்தோன்
சேடஙகொண்டு சிலர் நினறு ஏத்தத
தெணணீாகரந்த செஞசடைக கடவுள்
வணணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆஙகது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாஙகினனுகித் தகைமையிற் செல்வுழி''
—சிலம்பு: 26. 62-67.

அவ்வரசிற்குப் பணிந்து திறைதரும் அரசர்களும், அவரோடு பகைகொண்டு வாழும் அரசர்களும், அவ் வஞ்சி நாட்டார் எந்த நேரத்தில் தம்மீது போர்தொடுத்து விடுவரோ என அஞ்சி அஞ்சி வாழ்ந்தனர்; வஞ்சியாரின் அரசியல் முறைகளை, அவர் படைகளின் பெருமையை; அவற்றின் போக்கினை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினர்; அதனால் அந்நாடுகளைச் சேர்ந்த ஒற்றர்கள், அவ்வஞ்சி நகரில் எக்காலமும் வந்து வாழ்ந்திருந்தனர்; அமர்முறையும் அரசியல் முறையும் வல்ல வஞ்சி வேந்தர்களும், வேற்று நாட்டு ஒற்றர்கள் தம் தலைநகரில் வாழ்வதை அறிந்தும், அவரால் தமக்கு எக்கேடும் வராது எனும் துணிவால், அவர் வரவையும் வாழ்வையும் தடுத்திலர்.

கண்ணகி சிலைக்குக் கல் கொணர, செங்குட்டுவன் வடநாடு செல்லத் துணிந்தபொழுது, "வேந்தே! வடநாடு செல்லும் நின் கருத்தினை, ஆங்குள்ள அரசர்க்குத் திருமுகம் அனுப்பித் தெரிவித்தல் நலமாம்" எனப் படைத்தலைவன் வில்லவன் கோதை கூறிய பொழுது, அமைச்சர் அழும்பில் வேள், "அரசே! நாவலந்தீவில் நம் பகைவராய் உள்ள அரசர்களின் ஒற்றர்கள், நம் வஞ்சிநகரை விடுத்து இமைப்பொழுதும் அகல்வதில்லை. அவ்வொற்றர்கள், நம் வடநாட்டுச் செலவைத், தம் அரசர்க்கு அறிவித்துவிடுவர்; ஆகவே, நம் படையெடுப்புச் செய்தியை, அவ்வொற்றர் அறியுமாறு, நம் நகர வீதிகளில் பறையறைந்து அறிவித்தல் ஒன்றே போதும்" எனக் கூறினர் என்ற சிலப்பதிகாரச் செய்தியால், பகைநாட்டு ஒற்றர்களின் வஞ்சி நகர்

வாழ்வு உறுதியாதல் உணர்க.

"நாவலந் தண்பொழில் நண்ணார் ஒற்றுநம
காவல் வஞ்சிக கடைமுகம் பிரியா;
வம்பணி யானை வேந்தர் ஒற்றே
தமசெவிப படுககும தகைமைய வனறோ?
அறைபறை என்றே அழும்பில்வேள் உரைப்ப"

—சிலப்பதிகாரம்: 25: 173–177

# 7. புகார்

பூம்புகார் எனும் தொடர் அழகிய புகார் நகரம் எனப் பொருள்படும். புகார் எனும் பெயர், பொது வாகத், துறைமுக நகரங்களைக் குறிக்கும் என்றாலும், அது சிறப்பாகக் காவிரிப்பூம்பட்டினத்தை மட்டுமே குறிக்க வழங்கும். புகார் எனும் பெயர், அது கடற் கரையைச் சேர்ந்த ஒரு நகரம் என்பதை மட்டுமே உணர்த்தும்; காவிரிப்பூம் பட்டினம் எனும் அதன் பிறிதொரு பெயர், அது இருந்த இடம் இஃது என் பதைத் தெளிவாகத் தெரிவிக்கும்; பட்டினம் எனும் பெயர், புகார் என்பதைப்போன்றே, கடற்கரை ஊர்களை உணர்த்தும் பொதுப் பெயராம்; நாகப்பட்டினம், காயல் பட்டினம், அதிராம் பட்டினம் என்ற பெயர்களை நோக்குக; அப்பெயரின் முன் இணையாக வந்துள்ள காவிரிப்பூம் என்ற தொடர், ஈண்டுக் குறிப்பிடும் பட்டினம், காவிரிக் கரையில் அமைந்துள்ள அழகிய நகராகும் என்பதையும் உணர்த்தும்; ஆகவே, காவிரி கடலோடு கலக்குமிடத்தில் அமைந்த அழகிய நகரே, காவிரிப்பூம்பட்டினம் என்பதை, அத்தொடர் தெளிவாக உணர்த்தியவாறு உணர்க.

இமயம் முதல் குமரிவரையுள்ள நாவலந்தீவின் காவற் கடவுளாகிய சம்பாபதி என்பவள், புகார் நகரில் தங்கித் தன் தொழிலாற்றியிருந்தனளாதலின், அப்புகார், பண்டு சம்பாபதி எனும் பெயர் பூண்டிருந்தது அது, அந்நகரை அடுத்துக் காவிரியாறு பாயத்தொடங்கிய

காலம் தொட்டுக், காவிரிப்பூம் பட்டினம் எனும் பெயர் பெற்றது.* பரசுராமன் சினத்திற்கு ஆளாகாமல் தப்பிப் பிழைத்த, ஒரே அரசனாகிய ககந்தன என்பவன், ஒரு காலத்தில், புகார் நகரில் இருந்து அரசாண்டானாதலின், அந்நகர்க்குக் காகந்தி என்ற மற்றொரு பெயரும் உண்டு.†

மேலை நாட்டு வணிக மக்களும், உலகை வலம் வந்த பெரியார்களும், காவிரிப்பூம்பட்டினத்தைக், கி. பி. முதல் நூற்றாண்டிலேயே அறிந்திருந்தனர். கி. பி. 81-96-ல் எழுதப்பெற்ற "பெரிபுளூஸ் மாரிஸ் எரித்ரியா" என்ற நூலில், கொற்கைத் துறைக்கு வடக்கில், 'கடற்கரை நாடு' என்ற கடலைச்சார்ந்த நாடு ஒன்றும், 'அர்கரு' என்ற உள்நாடு ஒன்றும் இருந்தனவாகக் கூறப்பட்டுளது. இவை இரண்டும், முறையே, கடற்கரை ஊராகிய புகாரையும், உள்நாட்டு ஊராகிய உறையூரையும் தலைநகர்களாகக் கொண்டு விளங்கிய இரு சோழ அரசுகளையே குறிப்பனவாம். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தாலமி என்ற நில நூல் பேராசிரியர், காவிரி கடலோடு கலக்கு

---

* "சமபு எனபாள் சம்பாபதியினள்
செங்கதிர்ச் செல்வன் திருக்குளம் விளக்கும்
கஞ்ச வேட்கையின காந்தமன வேண்ட
அமரமுனிவன் அகத்தியன் தனது
காகம் கவிழ்ந்த காவிரிப் பாவை!......
என்பெயாப் படுத்த இவ்விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப படுத்தேன் நீவாழிய என"

—மணி: பதிகம்: 8-31.

† "ககநதன காத்தல் காகந்தி என்றே
இயைந்த நாமம் இப்பதிககு இட்டு"

—மணி: 22: 37-38.

மிடத்தில் "கபெரீஸ்" எனும் ஓர் ஊர் உளது எனக் கூறியுள்ளார்; அவர் கூறிய ஊர் புகாரே என்பதில் சிறிதும் ஐயமில்லை. கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்ட, "மிலிந்தா அரசனுடைய கேள்விகள்" என்ற பௌத்த நூல், "கடற்கரை நகரங்களுள் சிறந்தது கோள பட்டினம்" எனக் கூறுகிறது. அது கூறும் கோளபட்டினம், சோழர் கடற்கரை நகராகிய புகார் நகரேயாம் எனக் கூறவும் வேண்டுமோ?

புகார், பழமையும் பெருமையும் மிக்க ஒரு மாநகர்: அது, இமயத்தோடும், பொதியத்தோடும் தோன்றிய பழமை வாய்ந்தது; தன்னை என்றும் பிரியாது, தன்னகத்தே வழிவழி வாழ்ந்த பழம்பெரும் குடிகளைக் கொண்டது; வேந்தனும் விழையும் பெருவளம் மிக்க வணிக மக்களின் வாழ்விடமாயது. வறுமையால் வாடித் தன்னை வந்தடையும் உலக மக்கள் அனைவர்க்கும் வழங்கினும் வற்றாப் பெருவளம் உடையது. இவை அனைத்திற்கும் மேலாக, ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களைப் பெற்றது. 'இவ்வாறு ஒரு நல்ல நகருக்கு உரிய சிறப்புக்களில் ஒன்றையும்விடாது, அனைத்தையும் தனக்கே உரியவாகப் பெற்ற புகார் நகரின் அருமை பெருமை அறிந்த பெரியோர்கள், "புகார், பழம் பெரும் காலத்தே தோன்றிப், பாரெலாம் போற்ற வாழ்கிறது" என வாயாரப் பாராட்டுவரே யல்லால், "அது ஒரு காலத்தே பாழாம்" எனக் கூறுர் எனப் பாடிப் பாராட்டியுள்ளார் சிலம்பு அளித்த சேரர்குல இளங்கோ*.

---

* "பொதியிலாயினும், இமயமாயினும,
பதியெழுவு அறியாப் பழங்குடி கெழீஇய

காவிரியின் வடகரையில் விளங்கிய புகார், மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் என இரு கூறுய்ப் பிரிந்திருந்தது. கடற்கரையை ஒட்டியிருந்த பகுதி மருவூர்ப்பாக்கம்; அதற்கு மேறகில் இருந்தது பட்டினப் பாக்கம்; முன்னதைப் புகாரின் புறநகராகவும், பின்னதை அதன் அகநகராகவும் கொள்ளின் பொருந்தும்; வாணிகம் புரிந்து பொருள் ஈட்டி வாழும் மத்திய வகுப்பாரும், மெய்வருந்தும் தொழில்புரிந்து வயிறு வளர்க்கும் பிற்பட்ட வகுப்பாரும் குற்றேவல் புரியும் தாழ்த்தப்பட்ட வகுப்பாரும் வாழும் இடம் மருவூர்ப் பாக்கம; அரசனும், அமைச்சர் முதலரம் அரசியல் துணைவரும், மன்னனும் மதிக்கத்தக்க மாநிதிச் செல்வரும் ஆகிய உயர் வகுப்பார் வாழும் இடம் பட்டினப் பாக்கம்.

மருவூர்ப் பாக்கத்துத் துறைமுகம், பாய்மரக் கம்பத்தில் நாட்டிய தத்தம் நாட்டுக்கொடிகள் காற்றில் அசைய, கட்டிய கட்டுத்தறிகளும் நிலைகுலைந்துபோமாறு ஓயாது ஆடிக்கொண்டே யிருக்கும் களிறுகள் போல்,

---

"பொதுவறு சிறப்பின் புகாரே ஆயினும்
நடுக்கின்றி நிலைஇய எனபது அல்லதை,
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின,
முடித்த கேள்வி முழுதுணர்ந்தோரே"

—சிலம்பு: 1: 14–19.

"உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவின்
பரதர்மலிந்த பயஙகெழு மாநகர்,
முழங்குகடல் ஞாலம முழுவதும் வரினும்
வழஙகத் தவாஅ வளத்தது."

—சிலம்பு: 2: 1–.

அலைகளால் அலைப்புண்டு நிற்கும் நாவாய்களால் நிறைந்திருக்கும்.*

கரையில் கடலை ஒட்டினாற்போல், வானுலகைத் தாங்கும் கம்பம்போல், ஏணிக்கெட்டா உயர்வுடைய வாய்க், கல்லும் சுண்ணும்பும் கொண்டு கட்டப் பெற்றுக் கூரையிட்டு வேயாத மாடத்தின்மீது, கலங்கரை விளக்குப் பொறுத்தப் பெற்றிருக்கும்; கடல்கடந்த நாடுகளிலிருந்து, கலங்கள் வழியாகவந்து இறங்கிய பண்டங்களும், கலங்களில் ஏற்றி வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று வாணிகம்புரிய வந்து குவிந்த பண்டங்களும் வரிசை வரிசையாக வகைப்படுத்தி வைத்திருக்கும் பண்டசாலைகள், கலங்கரை விளக்க வேயாமாடத்தை அடுத்துக் கட்டப்பெற்றிருக்கும். பண்டசாலைகளுக்குப் பக்கத்தில் ஆயத்துறைகள் அமைந்திருக்கும். மான்கண் போலும், அழகிய சிறு சிறு கோணங்களைக்கொண்ட சாளரங்கள் வைத்துக் கட்டிய மாளிகைகளில் வாழும் அவ்வாயத்துறை அலுவலாளர், ஆங்குக் குவிந்து கிடக்கும் பண்டப் பொதிகளுக்கு உரிய சுங்கங்களைத் தண்டியும், சுங்கம் இறுத்த பொதிகள்மீது, தம் அரசர்க்குரிய புலி இலச்சினையைப் பொறித்தும், புலி இலச்சினை பொறித்த பொதிகளை, அவற்றிற்குரியார் அவற்றைக் கொண்டுசெல்லும்வரை, ஆயத்துறைகளை அடுத்திருக்கும் உயர்ந்த மேடைகள்மீது போர்போல் குவித்து

* "வெளில் இளக்கும் களிறுபோலத்
தீம்புகார்த் திரை முன்துறைத்
தூங்கு நாவாய் துவன்றிருக்கை
மிசைக்கூம்பின் அசைக் கொடி."

—பட்டினப்பாலை 172-175.

வைத்தும், இரவுபகல் ஓயாமல் பணியாற்றிக் கிடப்பர்.*

துறைமுகத்தைக் கடந்து, கரைநோக்கிச் சிறிது தூரம் சென்றால், ஆங்கே, கடல்வாணிகத்தால் வளம் மிகுந்து செல்லும் விருப்பம் உடையராய் வந்து வாழும் வெளிநாட்டு வணிகமக்களின் வாழிடத்தைக் காணலாம்; ஆங்கு வாழ்வார், ஒரே நாட்டிலிருந்து வாராது, வேறு பல நாடுகளிலிருந்து வந்தவரேயாயினும், ஒரு நாட்டு மக்கள்போல் உள்ளம் கலந்து வாழ்வர். நம் நாட்டு மக்களால், யவனர் என அழைக்கப்பெறும், அவ்வெளி நாட்டு மக்களின் வாழிடம், வளம்பல நிறைந்தது. அவ் வளத்தை ஒருமுறை கண்டார், அவ்விடத்தை விடுத்து வேறிடம் செல்ல விரும்பார்; அத்துணை வளம் மிக்கது,

---

"வேயாமாடமும். வியன்கல இருக்கையும்,
மான்கண்காதலர் மாளிகை இடங்களும்."

—சிலம்பு: 5: 7–8.

"நல் இறைவன் பொருள்காக்கும்
தொல்இசைத் தொழில் மாக்கள்......
வைகல்தொறும் அசைவு இன்றி
உல்கு செய......
நீரினின்று நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீர் பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடைவல் அணங்கின் நோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலி பண்டம்
பொதிமூடைப் போர்."

—பட்டினப்பாலை: 120–137.

அவ்வெளிநாட்டார் வாழிடம்.*

யவனர் வாழிடத்தை விடுத்து, அக நகர் நோக்கிச் சென்றுகொண்டே யிருந்தால், பட்டாலும், மயிலாலும், பருத்தி நூலாலும் ஆடைகள் நெய்து அளிக்கும் நெசவாளரும், நெல் முதலாம் உணவுப் பொருள்களைக் குவியல் குவியல்களாகக் கொட்டிவிற்கும் கூலவணிகரும், பிட்டு, அப்பம், மது, மீன், வெள்ளுப்பு, வெற்றிலை, இறைச்சி ஆகிய பொருள்களில் வாணிகம் புரிவோரும், கருங்கைக் கொல்லர், வெண்கலக் கன்னார், செம்பு செய்குநர், பொன்செய் கொல்லர், மட்கலம் வனைவார், மரத்தொழில் புரிவார், ஓவியக்காரர், தையல் தொழிலாளர் முதலாய பல்வகைத் தொழிலாளரும், பாணர், குழலர் முதலாம் இசையாளரும், குறவேவல் புரிவோருவாழும் வீதிகளை வரிசையாகக் காணலாம்.†

மேலே கூறிய வீதிகள், இருபக்கத்திலும் வரிசை வரிசையாகப் பிரிந்துகிடக்க, இடையே நீண்ட பெருவீதி யொன்று, அகநகரையும், ஆயத்துறையையும் இணைத்துச் செல்லும். நாவாய்கள் கொண்டுவந்து தந்தனவற்றை, நகரின் நடுவே அமைந்திருக்கும் நாளங்காடிக்குக் கொண்டுவரவும், நாவாய்க்கு ஏற்றவேண்டுவனவற்றை, அந்நாளங்காடியிலிருந்து கொண்டு செல்லவும் அப்

---

* "கயவாய் மருங்கில காண்போர்த் தடுககும்
பயன் அறவு அறியா யவனர் இருக்கையும்,
கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும"
—சிலம்பு: 5: 9-12.

† சிலம்பு: 5: 16–39.

பெரிய வீதி பயன்பட்டது.*

போக்குவரவு மிக்க அவ்வீதியில், மக்கள் மண்டிக் கிடப்பர் ஆதலின், அவ்வீதியில், வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, நறுமணச் சந்தனம், மலர், மணம் நாறும் புகைதரு பொருள்கள் போலும், நாகரீக நம்பியரும், நங்கையரும் விரும்பிவாங்கும் பொருள்களை விற்கும் சிறுவணிகர் கூட்டம் திரிந்து திரிந்து வாணிகம்புரியும்.†

மருவூர்ப்பாக்கத்தை விட்டால் வருவது நாளங்காடி; எதிர் எதிராக நிற்கும் இருபடை வீரர்களும் ஒன்று கலந்து போரிடும் இடை நிலம்போல, மருவூர்ப்பாக்கத்து மக்களும், பட்டினப் பாக்கத்து மக்களும் வந்து, தத்தமக்கு வேண்டும் பொருள்களை வாங்கிச் செல்ல வாய்ப்பளிக்கும் வண்ணம், நாளங்காடி, இருபகுதிக்கும் இடையே அமைந்திருந்தது. மரங்கள் நெருங்க வளர்ந்த ஒரு பெரிய தோப்பினிடையே அமைந்த அந்நாளங் காடியில், கடைகள், அம்மரங்களையே தூண்களாகக் கொண்டு கட்டப்பெற்றிருக்கும். பொருள்களை வாங்கு வோரும், விற்போரும் எழுப்பும் பேரொலி, அங்கு எக்காலத்தும் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.‡

---

* "மகர வாரி வளம தநது ஓங்கிய
நகர வீதி"
—சிலம்பு. 6: 128: 129.

†"வண்ணமும் சுண்ணமும் தண்நறும சாந்தமும்
பூவும் புகையும மேவிய விரையும்
பகர்வளர் திரிதரும் நகரவீதி"—சிலம்பு: 5:13—15.

‡"இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியின இடைநிலமாகிய
கடைகால யாத்த மிடைமாச் சோலைக
கொடுப்போர் ஓதையும கொள்வோர் ஓதையும
நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி"
—சிலம்பு: 5. 59—63.

கடை வீதிகளில், கடல் கடந்த நாடுகளிலிருந்து கலங்கள் ஏற்றிக் கொணர்ந்த விரைந்து ஓடவல்ல குதிரைகளும், கரிய-மிளகுப் பொதிகளும், வடநாட்டு மலைபடு பொருள்களாய பொன்னும் மணியும், பொதிய மலையில் விளையும் அகிலும் ஆரமும், பாண்டி நாட்டுக் கடலில் மூழ்கி எடுத்த முத்தும், சோணாட்டுக் கடலில் கிடைக்கும் பவளமும், கங்கைச் சமவெளியினின்றும் வந்த யானை முதலாயனவும், காவிரியாற்றுப் பாய்ச்சலால் விளையும் பல்வகைப் பொருளும், ஈழ நாட்டினின்றும் வந்த உணவுப் பொருளும், பர்மா என வழங்கும் கடாரத்தினின்றும் வந்த கணக்கற்ற பொருளும், அளவு அறியமாட்டாமல் நிறைந்து வளம் மிகுந்து கிடக்கும். *

மகதச் சிற்பரும், மராட்டக் கொல்லரும், யவனத் தச்சரும், கூடிக் கண்ணைக் கவரும் வனப்புடன் அமைத்த அரசன் பெருங்கோயில் இருப்பது பட்டினப்பாக்கம். பெரு வாணிகத் தெருவும், மன்னரும் விழையும் மாநிதி படைத்த வாணிகப் பெருமக்களின் மாடமாளிகைகள் நிறைந்த நெடிய வீதியும், வேதம் வல்லமறையோரும், வேள்குடி வந்தோரும் வாழும் வீதிகளும், அரண்

---

*"நீரின்வந்த நிமிர் பரிப்புரவியும்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும பொன்னும
குடமலைப் பிறந்த ஆரமும அகிலும
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும,
கங்கை வாரியும, காவிரிப் பயனும்,
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்.
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

—பட்டின: 185—193.

மனையைச் சூழ அமைந்திருந்தன. மருத்துவரும், நாளறிந்து கூறும் கணியரும் தனித்தனியே வாழும் வீதிகளும், முத்துக் கோப்போர், வளையல் அறுப்போர், நாழிகைக் கணக்கர், காவற்கணிகையர், நாடக மகளிர், நகை வேழம்பர் முதலானோர் வாழும் வீதிகளும் ஆண்டே; கடும்பரி கடவுநா, களிற்றின்பாகர், நெடுந்தேர் ஊருநர், கடுங்கண் மறவர் என்ற நாற்படை வீரர்கள் வாழும் வீதிகள், அரண்மனைக்கு அணித்தாகவே அமைந்திருந்தன. *

வடவேங்கடம் தென்குமரிகட்கு இடைப்பட்ட தமிழகம் முழுவதையும் தன் ஆணைக்கீழ்க் கொண்டு வந்து அடக்கிய பின்னர், கரிகாலன், வடநாடு நோக்கிச் சென்றான்; சென்றானை இமயம் இடைநின்று தடுத்து விட்டது; அதனால் சினங்கொண்ட சோழன், அதன் உச்சியில் தன் புலி இலச்சினை பொறித்து மீண்டான்; மீளுங்கால், வச்சிர நாட்டு வேந்தன் முத்துப் பந்தலும், மகத நாட்டு மன்னன் பட்டி மண்டபமும், அவந்தி நாட்டு அரசன் தோரண வாயிலும் அளித்து, அவனுக்கு நண்பராயினர்; கரிகாலன் ஆங்குப்பெற்ற அவ்வெற்றிச் சின்னங்கள், காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சிறப்பளித்து நின்றன. †

---

*சிலம்பு: 5: 40—58.

†"மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோன் இறைகொடுத்த கொற்றப் பந்தரும,
மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்"
—சிலம்பு: 5: 99—104.

புகார் நகருக்கு வரும் புதியோர், பொருளின் பெயரும், பொருளுக்கு உரியோர் பெயரும், அப் பொருளின் அளவும் நிறையும் பொறித்துக் கொணர்ந்த பண்டப் பொதிகள், அவர்கள் ஊர்ப் பொதுவிடத்தே தங்குவதால் காப்பாரற்றுக் கிடப்பக் காணும் கள்வர், அவற்றைக் கவர்ந்து கொண்டால், அவரைக் களவும் கையுமாய்ப் பிடித்துக், களவாடிய பண்டப் பொதிகளை அவர் தலையில் ஏற்றி, நகர் மக்கள் கண்டு நகையாடி வெறுக்குமாறு, நகர வீதிகளில் வலம் வரப்பண்ணி, களவினைக் கனவிலும் கருதாக் கருத்துடையராக்கி அனுப்பும் உயர்நீதி மன்றம் ஒன்றும் அப்புகார் நகரில் இருந்தது. *

தன்னீரில் படிந்து மூழ்கித் தன்னை வலம்வரும், கூனர், குறுகிய வடிவினர், ஊமர், செவிடர், தொழு நோயாளர் முதலாம் கொடிய நோயாளர்களின் நோய் போக்கி, நல்லுடல் அளிக்கும் மருத்துவ மாண்பு மிக்க பொய்கையை உள்ளடக்கி நின்ற உயர்ந்த மன்றம் ஒன்றும் ஆங்கிருந்தது. †

---

*“வம்பமாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த, எண்ணுப் பலபொதிக்
கடைமுக வாயிலும் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஓரீஇயவாகிக்,
கட்போர் உளர்எனின், கடுப்பத் தலைஏற்றிக்
கொட்பினல்லது கொடுத்தல ஈயாது
உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றம்.”
—சிலம்பு: 5: 111—117.

†“கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும் முழுகினர் ஆடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலம்செயாக் கழியும் இலஞ்சி மன்றம்.’
—சிலம்பு: 5: 118—121.

பகைவரால் வஞ்சிக்கப்பட்டு மயக்க மருந்து ஊட்டப்பெற்றவரும், நஞ்சுண்டு உயிர்போர்கு நிலையுற்றோரும், பாம்பின் வாய்ப்பட்டோரும், பேயால் பற்றப் பட்டோரும், வந்து தன்னை வலம்வர, அவர்மீது தன் நிழல்பட்ட அப்பொழுதே அவர் துயர்போக்கி வாழ்வளிக்கவல்ல ஒளியைவீசும் ஒருவகைக்கல் நாட்டப் பெற்ற மன்றம், அந்நகருக்கு மாண்பளித்திருந்தது. *

தவநெறியுடையார்போல் வெளி வேடம் தாங்கிப், பிறர் காணுவாறு பழிபாவம் புரியும ஒழுக்கநெறி இகந்தோர், கணவன் அறியாவாறு கற்பிழக்கும் காரிகையர், அரசரோடு உடன் வாழ்ந்தே, அவர்க்கு அவர் அறியாவாறு அழிவுதேடும் அமைச்சர், மணந்த மனைவியை மறந்து, பிறர் மனைவியரின் பின் திரிவோர், மன்றில் பொய்ச்சான்று கூறுவார், ஒருவரைக் கண்டவிடத்துப் புகழ்ந்து, காணுவிடத்துப் பழிக்கும் புறங்கூறுவார் போன்ற கொடியோர்களைக் கைப்பாசத்தால் கட்டி ஈர்த்துக் கொன்று உயிர்போக்குவேன் என, நகரின் நான்கு எல்லையும் கேட்குமாறு உரத்துக்கூறி, கூறியதோடு நில்லாது அத்தகையாரைப் பற்றி ஒறுத்து அறம் காக்கும் காவல் பூதம் நிற்கும் மன்றம், புகார் நகருக்குப்

* 'வஞ்சம உண்டு மயற்பகை உற்றோர்,
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்,
அழல்வாய் நாகத்து ஆர்எயிறு அழுந்தினர்,
கழல்கண் கூளிக் கடுநவைப் பட்டோர்
சுழலவந்துதொழத் துயர்நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்றமன்றம்''

—சிலம்பு: 5: 122—127

பெருமை யளித்திருந்தது.*

ஆளும் முறையை அரசர் மறந்தால், அறநூல் கூறும் நெறிமுறை விடுத்து, ஒருதலைத்தீர்ப்பளிக்க, அறம் வழங்கும் ஆன்ருேர்கள் துணிந்தால், நாட்டில் நிகழும் அக்கேடுகளை நாவால் எடுத்துக்கூருது, கண் ணீர் வடித்துக் கலங்கிக் காட்டும் பாவையைக் கொண்ட பாவை மன்றம், புகார் நகரின் வாழ்விற்கு அருந்துணை அளித்தது.†

புகார் நகரில், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் சோமகுண்டம், சூரியகுண்டம் எனப் பெயர்பூண்ட இரு பொய்கைகள் இருந்தன; அவற்றில் மூழ்கி, அவற்றின் கரைக்கண் இருந்த காமவேள் கோட்டத்துக் கடவுளை வணங்கிஞல், மகளிர், கணவரைப் பிரியாது வாழும் பெருவாழ்வை இம்மையில் பெற்று, மறுமையில், போக பூமியில் அவரோடு பிறந்து பேரின்பம் நுகர்வர்.‡

---

* "தவம் மறைந்து ஒழுகும தன்மை இலாளர்,
அவம மறைந்து ஒழுகும் அலவற் பெண்டிர்,
அறையோடு அமைசசர், பிறர்மனை நயப்போர்
பொய்க்கரியாளர். புறங்கடற்ருளார் என
கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர்எனக்
காதம நான்கும் கடுங்குரல் எடுப்பிப்
பூதம புடைத்துணும பூதசதுககம."

—சிலம்பு: 5: 128-134.

† "அரைசு கோல்கோடினும், அறங்கூறு அவைய்தது
உரைநூல் கோடி ஒருதிறம பற்றினும்
நாவொடு நவிலாது, நவைநீர் உடுத்துப்
பாவைநின்று அழூஉம் பாவை மன்றம்."

—சிலமபு: 5: 135—138.

‡ "கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
மடல்அவிழ் நெய்தலங்கானல் தடம்உள

பூத்து மணம் பரப்பும் தொழில்களால் பொலிவு பெற்றது புகார். மன்னர்க்கு ஏற்றனவும் மக்களுக்கு ஏற்றனவும், மாதவர்க்கு ஏற்றனவும் ஆகிய பூஞ்சோலைகள் பல, புகார் நகரில் இடம் பெற்றிருந்தன. வடிவாலும், வண்ணத்தாலும், வாசனையாலும், வேறு பட்ட வகைவகையான மலர் மரங்களைக் கொண்ட இலவந்திகைச் சோலை, அவற்றுள் ஒன்று; அதனிடையே அழகிய பொய்கை ஒன்றும் இருந்தது. அப்பொய்கையில் வேண்டுமளவு நீரை வேண்டும்பொழுது நிறைக்கவும் போக்கவும் வல்ல பொறி பொறுத்தப் பெற்றிருந்தது. அத்தகைய மாண்புமிக்க அம்மலர்ச் சோலையில் மன்னர் மட்டுமே மகிழ்ந்து வாழ்வர்.*

உவவனம் என்பது புகாரில் இருந்த மற்றொரு பூஞ்சோலை; மக்கள் செல்லும் உரிமை வாய்ந்தது அம் மலர்ச்சோலை; பளிங்கால் ஆன அழகிய மண்டபம் ஒன்று அதன் இடையே இருந்தது. அகத்தே இருப் போரின் வடிவைப் புறத்தே புலப்படுத்தும் அது, ஆங்கு

---

சோமகுண்டம், சூரியகுண்டம், துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம தொழுதார், கணவரொடு
தாம் இனபுறுவர் உலகத்துத் தையலார்
போகம்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்."
—சிலம்பு : 9: 57—62.

" உயர் கோட்டத்து
முருகு அமர்பூ முரண்கிடக்கை
வரியணிசுடர் வான்பொய்கை
இருகாமத்து இணை ஏரி-" —பட்டினப்பாலை: 36-39.

மலய மாருதம் மன்னவர்க்கு இறுக்கும்
பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந்திகை." —சிலம்பு: 10: 29—31.

அவர் எழுப்பும் ஒலியை, ஒரு சிறிதும் புறம்போகவிடாது அடக்கிக்கொள்ள வல்லது; அம்மண்டபத்தின் இடையில், புத்தன் பாதம் பொறித்த தாமரைப்பீடம் ஒன்றை அமைத்திருந்தனர்; அப்பீடத்தில் இட்ட அரும்புகள், இட்டவுடனே மலர்ந்து மணம் வீசும்; மலர்கள் வாடா; தேனுண்ணும் வண்டு, அம்மலரை மொய்க்காது; அத்துணை அருமை வாய்ந்தது அப்பூஞ்சோலை.*

உய்யானம் எனும் பெயர்பூண்ட, பூதக்காவல்பெற்ற பூஞ்சோலையும், சடாயு எனும் பறவை அரசன் உடன் பிறந்த சம்பாதியின் நினைவாகவும், காவிரியாறு தோன்றத் துணைபுரிந்த கவேரன் எனும் முனிவன் நினைவாகவும் வளர்த்த, சம்பாதிவனம், கவேரவனம் என்ற பூஞ்சோலைகளும், புகார் நகருக்குப் பெருமை யளித்திருந்தன.†

புகார், பலவகைச் சமய மக்களும் கலந்து வாழ்ந்த ஒரு பேரூர்; அதனால், ஆங்கு, அப்பல்வேறு சமயச் சார்பான கோயில்கள் சிறப்புற அமைந்திருந்தன; சிவன், திருமால், முருகன், பலராமன், இந்திரன், அவனுக்குரிய வச்சிராயுதம், வெள்ளையானை, அவன் நாட்டுக் கற்பகத்தரு, ஞாயிறு, திங்கள், ஐயன், அருகன் ஆகிய

---

"இலவந்திகையின் எயிற்புறம் போகின்
உலக மன்னவன் உழையோர் ஆங்குளர்."
—மணி: 3: 45—46.

* உவவனம் என்பது ஒன்றுஉண்டு; அதன்உள்ளது
விளிப்பு அறைபோகாது, மெய்புறத்து இடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டு; அதன் உள்ளது
தூநிறமாமணிச் சுடரொளிவிரிந்த
தாமரைப் பீடிகை தானுண்டு; ஆங்குஇடில்
அரும்பு அவிழ்செய்யும்; மலர்ந்தன வாடா;
சுரும்பினம் மூசா." —மணி: 3: 62—68.

† மணி: 3: 49—58.

அனைவருக்கும், காவிரிப்பூம் பட்டினத்தார் கோயில்கட்டி விழாச்செய்தனர்.*

சக்கரவாளக்கோட்டம் என்ற சிறபபுப் பெயரிட்டு அழைக்கப்பெற்றும், புகார் நகரத்துப் புறங்காடு, பழக்க வழக்கங்களால் வேறுபட்ட பல இனத்து மக்களுக்கும் ஏற்றவாறு அமைந்திருந்தது. அப்புறங்காடு, அந்நகர் வாழ் மக்களின் நாகரீக வளர்ச்சிக்கேற்ற வாய்ப்பும் வனப்பும் பொருந்தியிருந்தது.†

மழைவளம் குறையாப் பெரிய மலையில்தோன்றி, வெள்ளம் பெருக்கெடுத்தோடப் பாய்ந்து வரும் பெரிய பெரிய ஆறுகள்போல், உலக மக்களெல்லாம், ஒருங்கே விரைந்து நுழையவல்ல உயர்வும் அகலமும் உடைய, புகார் நகரத்துப் புறவாயில்கள். அவற்றுள், காவிரியாற்றுக்குக் கொண்டுவிடும் மேற்றிசை வாயிலுக்குப்போகும் வழியின் இருமருங்கும், நிழல்தரு மரங்களை வரிசையாக வளர்த்திருந்தனர்.‡

காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையின் மாலைக் காட்சி, மனம் நிறையும் மகிழ்ச்சிதரும் மாண்புடையதாகும். கடல் கடந்த நாடுகளினின்றும் வந்து வாழும் வணிக மக்கள், கடற்கரை மணல்மீது, வகைவகையான பொருள்களை வரிசை வரிசையாகப் பரப்பிவைத்து, விலையை வாயாற்கூறுது, எல்லோரும் காண எழுதி வைத்து வாணிகம் புரிந்திருப்பர். அக்கடற்கரையில், மாலைக்காலத்தில் ஏற்றும் விளக்குகளை எண்ணிக்காணல் எவர்க்கும் இயலாது; சுண்ணம் முதலாம் வாசனைப்

* சிலம்பு: 5: 169-172.; 9: 9—13.

† மணி: 6: 37—202.

‡ சிலம்பு: 10: 26—27; 32—33.

பொருள்களை விற்பவர் ஏற்றிய விளக்குகளும், பொன்னால் கலன் ஆக்கும் பொற்கொல்லர் முதலாம் பல்வேறு தொழிலாளர்கள், தங்கள் தங்கள் தொழில் நிலையங்களில் ஏற்றிய விளக்குகளும், அப்ப வணிகரும், பிட்டு வணிகரும் குடத்தண்டுகள் மீது ஏற்றிவைத்த விளக்குகளும், பல்வகைப் பண்டங்களையும் விலை கூறி விற்கும் மகளிர், தம் கடைகளில் ஏற்றிய விளக்குகளும், கரையில் இருந்தவாறே, கடலிற் செல்லும் கலங்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கும், கடல்மேல்சென்று மீன் பிடித்து வாழும் பரதவர், தாம ஏறிச்செல்லும் திமில்களில் ஏற்றிய விளக்குகளும் வெளிநாட்டு மக்கள், தம் மாடங்களில் ஏற்றிய மணிவிளக்குகளும், பண்டப் பொதிகளைக் காத்துக்கிடக்கும் காவலர், அப்பண்டப் பொதிகளைச்சுற்றி ஏற்றிவைத்த விளக்குகளும், ஒன்று கூடி, கடற்கரை வெண்மணலில் வீழ்ந்த வெண்சிறு கடுகையும் எளிதில் எடுக்கவல்ல பேரொளிவீசிக், காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையைக் கண்ணொளி கெடுக்கும் ஒளியுடையதாக்கிக் கவின் அளிக்கும்.*

ஆன்றோர் உண்மையால் அழியாது எனப் பாராட்டப்பெற்ற புகார் அழிந்துவிட்டது. "என்னைக்குறித்து எடுக்கும் விழாவைப், புகார்நகர் மக்கள் என்று மறக்கின்றனரோ, அன்றே அந்நகர் அழியும்" என இந்திரன் ஒரு சாபம் அளித்திருந்தான். கடல்கடந்த நாட்டில்

* "..................விளக்கமும்,
எண்ணு வரம்பு அறியா இயைந்து ஒருங்கு ஈண்டி
இடிக்கலப்பு அன்ன ஈர்அயிர் மருங்கில்
கடிப்பகை காணும் காட்சியது ஆகிய."
—சிலம்பு : 6: 130—147.

பிறந்து, கலம் ஏறித் தன்னை நோக்கிவந்த தன்மகன் இடைவழியில் கலம் கவிழக் கடலில்வீழ்ந்து காணாது போயினன் என அறிந்த புகார் நகர் வேந்தன் வடிவேற் கிள்ளி, வருத்த மிகுதியால் விழா வெடுக்காது விடுத்தானாகப் புகாரைக் கடல் விழுங்கிற்று. இந்திர சாபம் உண்டோ, இல்லையோ, புகார் இன்று இல்லை; பண்டு புகார் இருந்த இடத்தில், இன்று, கடல் தன் ஆட்சி செலுத்துகிறது; புகார், மறைந்த மாநகரமாகி விட்டது.*

முற்றும்

* "மன்னவன் மகனுக்கு உற்றது பொறுஅன்
நன்மணி இழந்த நாகம் போன்று
கானலும் கடலும் கரையும் தேர்வுழி
வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது;
மணிமேகலா தெய்வம் மற்றது பொறுஅள்
அணிநகர் தன்னை அலைகடல் கொள்கென
விட்டனள் சாபம்; பட்டது இதுவால்."
—மணி : 25 : 194-200.